DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1357 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 8, 2022

நாளை சனிக்கிழமை ஸ்காபுறோவில் திரையிடப்படுகின்றது
'புத்தி கெட்ட மனிதர் எல்லாம்' யாழ் மண்ணில் தயாராகி
பாராட்டுக்களைப் பெற்ற திரைப்படம் - விபரமான விளம்பரம் உள்ளே 2ம் பக்கத்தில்

## Markham – Thornhill, Provincial Conservative Party Candidate Logan Kanapathy hosted an event on the request of the Premier's Office



நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மார்க்கம் நகரில் உள்ள கனடிய உணவகம் ஒன்றில் ஒன்றாரியோவின் முதல்வர் கௌரவ டக் போர்ட் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க. மார்க்கம்-தோர்ன்ஹில் மாகாண சபைத் தொகுதியின் உறுப்பினரும் தற்போதைய கொன்சர்வேர்ட்டிவ் கட்சி வேட்பாளருமான லோகன் கணபதி அவர்கள் ஒரு ஒன்றுகூடலை நடத்தினார்.

பல நண்பர்கள். ஆதரவாளர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் என பலரும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். மாகாண அமைச்சர் கௌரவ றேமண்ட் சோ அவர்களும் அங்கு கலந்து கொண்டு தனது ஆதரவைத் தெரிவித்தார்.

## Re/Max Community Realty Inc's Annual Awards Ceremony 2021 took place last Friday in Scarborough





கனடாவில் கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும் **Re/Max Community Realty Inc** நிறுவனத்தின் 2021 ஆண்டிற்கான வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஸ்கா-புறோவில் அமைந்துள்ள **Markham Convention Centre** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிறுவனத்தின் ஸ்தாபகரும் அதிபருமான திரு ரஜீவ் கோணேஸ் மற்றும் அவரது சகா திரு லோகன் வேலும்மயிலும் ஆகியோர் மேற்படி விருதுகள் வழங்கும் விழாவை நடத்துவதற்கு உரிய அனைத்து ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

சுமார் 200 விற்பனை முகவர்களுக்கு அவர்களின் விற்பனைத் திறனுக்கு ஏற்ப சிறப்பு விற்பனை வரககள் வழங்கப்பெற்றன.

திரு சாண் தயாபரன் தலைமை-யிலான குழு அதி உயர் விற்பனை விருதினைப் பெற்றது.

*(தொடர்ச்சி உள்ளே 17ம் பக்கத்தில்)*

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ALL IN 1 ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.




## கனடா வாழ் ரசிகர்களுக்காக யாழ் மண்ணிலிருந்து ஒரு திரைப்படம்

யாழ் திரையரங்குகளில் வெற்றி நடை போட்ட 'எங்கட படம்'

எழுத்தும் இயக்கமும்: ராஜ் சிவராஜ்

**Scarborough NETWYN அரங்கில்**

Netwyn.Place

10 Thornmount Drive

M1B 3J4 (Morningside-Sheppard சந்திக்கு அருகில்)

**ஏப்ரல் 9ம் திகதி மூன்று காட்சிகளாக:**

பிற்பகல் 2:00 மணி - VIP காட்சி
மாலை 4.00 மணி மற்றும்
மாலை 6.00 மணி காட்சிகள்

**அனுமதி:**

4:00 மணி
6:00 மணி காட்சிகளுக்கு
$10 மட்டுமே

தொடர்புகளுக்கு: (416) 732-1608 | (647) 770-7482 | (416) 669-6437

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### Cleaning வேலை வாய்ப்பு

Richmond Hill, Vaughan நகரங்களில் Cleaning வேலை செய்வதற்கு ஆட்கள் உடனடியாகத் தேவை.
காலை. மாலை. நள்ளிரவு ஆகிய 3 Shifts களில் வேலை செய்யலாம்.
Full Time and Part- Time.


தொடர்புகளுக்கு: சங்கர்
(416) 305-0264

### Help Wanted

East end restaurant needs cook and helpers on full time basis Tuesday to Sunday.
Accomodation Sunday night or Monday morning drop off is available. Wages details will be discussed with the interested candidate.

Please contact 416-294-7887 for further details

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

*Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.*




Our secure online application is easy to complete, just go to
**gopal@driveautogroup.ca**
Or call Gopal Pillai at:
**(647) 763-0210**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/spousal support, domestic agreements, divorce
Real Estate
- residential purchase, sale & refinance transactions
Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### AZ DRIVERS WANTED

Seeking for experienced AZ drivers for CANADA & USA.

Requirements:
- Minimum 3-4 years experience
- Cross Border experience
- Good Communication Skills
- Clean Abstract

Please Contact
416-835-6701

### சாஸ்திரம்

மதுரை மீனாட்சி துணை
கடந்த 40 வருடத்திற்கு மேல் அனுபவமிக்க நந்தி வாக்கிய ஓலை சாஸ்திரம்
பிறந்த திகதி, வருடம், மாதம், நேரம் சொன்னால் போதும் நடக்கப்போவதை மிக துள்ளியமாக கணித்து சொல்லப்படும்.
தொடர்புகளுக்கு: கோ. காசிலிங்கம்
437-925-5643

### Basement for Rent

Salem / Rossland (Ajax)
Brand new 2 bedroom basement available for rent.
புதிதாக திருத்தப்பட்டுள்ள 2 அறை கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு.

**Call: 647-706-4969**

உதயன் கதிரோட்டம்

# ‘ராஜபக்ச ராஜ்யம்’ என்னும் கூட்டுக் கொள்ளையர்கள்

இலங்கையின் அதிகார பலத்தையும் இராணுவம், கடற்படை போன்ற பாதுகாப்புப் படைகளை தங்களைப் பாதுகாக்கவும் தங்களுக்குச் சார்பான நீ-திபதிகளை உயர் நீதிமன்றங்களில் நியமனம் செய்து நீதித்துறையை தமது கட்டுப்பாடுகளுக்குக் கீழ் வைத்திருந்தும் தான் செய்ய எண்ணித் திட்டமிட்ட பாதகமான செயல்களை அரங்கேற்றிய ராஜபக்ச சகோதர்களின் ‘ராஜபக்ச ராஜ்யம்’ தனது உண்மையான முகத்தை திரையை விலக்கிக் காட்டிவிட்டது. ஜனாதிபதி. பிரதமர். நிதி அமைச்சர் மற்றும் முக்கியமான அமைச்சுக்களை தங்கள் வசம் வைத்திருந்த இந்த ‘ராஜபக்ச ராஜ்யம்’ அமைத்திருந்த சகோதரர்கள் மற்றும் புத்திரர்கள் நாட்டு மக்களை காட்டுவாசிகள் போல் ஆக்கிவிட்டார்கள். ஆனால் அவர்கள் நால்வருக்கு மேல் எண்ணிக்கைக் கொண்டவர்கள் உலகின் இராஜாக்கள் ஆகிவிட்டார்கள்.

இலங்கை அரச இயந்திரம் ஸ்தம்பிதம் அடையும் நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்துள்ள இந்த ‘ராஜபக்ச ராஜ்யம்’ என்னும் கூட்டுக் கொள்ளையர்கள் பற்றி இலங்கை என்னும் மாங்கனித் தீவே கொந்தளித்து எழுந்து நின்று போராடத் தொடங்கியுள்ளது.

இவ்வாறான நிலையில் இந்த அழகிய நாட்டின் வளங்கலிருந்து கொள்ளையடிக்கப்பெற்ற 19.9 பில்லியன் டொலர்கள் தொடர்பிலும், ராஜபக்ச ராஜ்யம் என்னும் கூட்டுக் கொள்ளையர்களுக்குள் அடங்கும் ராஜபக்சக்களின் குடும்பங்கள் மற்றும் உறவினர்கள் அமெரிக்காவில் வைத்துள்ள பெரும் சொத்துக்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தி இலங்கைக்கு சொந்தமான சொத்துக்களை திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி அமெரிக்க தூதரகத்திடம் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது. இந்த கைங்கரியத்தை முன்வந்து ஆற்றியவர்கள் சட்டத்துறைகளில் முன்னின்று உழைத்து வரும் சமூக அக்கறை கொண்டவர்கள் என நம்புப்படுகின்றது.

பேரணியாக அமெரிக்க தூதரகத்தை அடைந்த குழுவினர் அமெரிக்க தூதரகத்திடம் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர். இந்த மனுவில், உலகளாவிய நிதி ஒருமைப்பாட்டு அறிக்கையின்படி 2005 மற்றும் 2013 க்கு இடையில் 19.9 பில்லியன் டொலர்கள் இலங்கையிலிருந்து கடத்தப்பட்டதாக மனுவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சரியான புள்ளி விபரங்கள் இந்த மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்டுகின்றது.

இந்த ‘பெருங் கொள்ளையை’ ஆட்சியில் இருந்தவர்கள் நடத்திய ‘பெருமைக்குரியவர்களாகத் திகழும்’ ‘ராஜபக்ச ராஜ்யம்’ என்னும் இந்த அணி இலங்கையின் அரசியல் மற்றும் ஆட்சி செய்யும் வரலாற்றில் செய்த மாபெரும் குற்றத்திற்காக என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதே தற்போது புத்திஜீவிகள் ஆராய்ந்து வரும் விடயமாகும்.

இந்த மனு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட குழுவினர் மேற்கொண்ட ஆய்விகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் 1.9 பில்லியன் டொலர்கள் இலங்கையில் இருந்து வெளியேற்றப்படுகின்றன, மேலும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சா தலைமையிலான அரசாங்கம் தொடக்கம் மற்றும் ராஜபக்சக்களின் குடும்பங்கள் மற்றும் உறவினர்கள் அமெரிக்காவில் பெரும் சொத்துக்களை வைத்துள்ளனர். இவை அனைத்தும் இலங்கையின் அரச வளங்களைச் சுரண்டிச் சேர்த்வை எனபது கண்டறியப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த மனுவில் கூட்டாட்சி தேவை என்றும் கோரப்பட்டுள்ளது. அவர்கள் எப்படி சொத்து வாங்கினார்கள் என்பது குறித்து விசாரணை செய்து இந்தச் சொத்துக்கள் இலங்கையில் இருந்து திருடப்பட்ட செல்வத்தின் மூலம் சம்பாதித்தவை என்பது உறுதியானால், அந்த சொத்துக்களை தடை செய்து இலங்கைக்கு செல்வத்தை திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis<br>Asthma, Sinusitis, Rhinitis Allergies<br>Stress, Migraine & All Types of Headaches<br>Diabetes, Gastric Pain, Ulcer<br>Menstruation<br>Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

மேற்படி மனுவைக் கையளித்த குழுவின் அங்கத்தவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

2014ல் இந்த குடும்பம் நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித்தது என்று சொன்னோம், ஆனால் பின்னர் எங்களை துரோகிகள் என்று குற்றம் சாட்டினார்கள். ஆனால் இன்று ராஜபக்சக்களால் கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களை எமது நாட்டுக்கு வழங்க வேண்டும் என்பதே முழு நாட்டின் கோரிக்கையாக உள்ளது.

நாட்டு மக்களின் பிள்ளைகளின் சொத்துக்களை அபகரித்துவிட்டு, அமெரிக்காவுக்கு தப்பிச் சென்று சுகமாக வாழ ராஜபக்சக்களை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ள இந்த குழுவினரின் கருத்துக்கள் உலகெங்கும் பரப்பப்பட வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம்.

நாட்டின் சொத்தை கொள்ளையடித்தவர்கள் தற்போது நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். ஜனாதிபதியும் பிரதமரும் ஆகிய ராஜபக்ச சகோதரர்கள் இருவரும் பதவிகளை விட்டு வெளியேற முடியாது என்கிறார்கள். ஆனால் நாடாளுமன்றம் அரசியலமைப்பு ரீதியாக அவர்களை நீக்க முடியும் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட்டு நின்று சாதிக்க முடியும் என்று நாம் நம்புகின்றோம் நாடாளுமன்றத்தினால் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப முடியும்.

ே மலும். கல்வியில் சிறந்து விளங்கும் இந்த நாட்டில் உள்ள அனைத்து திறமையான தொழில் வல்லுநர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைவரும் இந்த நாட்டைக் காப்பாற்ற முன்வரவேண்டும் என்றும் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

INCOME TAX
BRAMPTON
துர்க்கா மார்க்கட்
Side Entrance
In person or online with e-signature
UBER/LYFT/Rental/Business welcome

| | |
|---|---|
| Personal Tax -No slip charge | $30.00 |
| Pension Welfare Student | $20.00 |

Trucker's Special
$395.00 All included
Corporate Tax from $100.00
Bookkeeping, Accounting & Payroll Services
416-400-1053
Call first & avoid waiting ntax 24 years experience
Ntax Accounting & Financial Solutions Inc.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் சகல துறையினருக்கும் எரிபொருள் விநியோகம் குறித்து அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல்

மன்னார் மாவட்டத்தில் தடைகள் இன்றி அரச மற்றும் தனியார் துறையினருக்கு எரிபொருட்களை சீரான முறையில் விநியோகிப்பது தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் திங்கட்கிழமை (4) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது அரச, தனியார் போக்குவரத்து சங்கம், மீனவ அமைப்புகள், வெதுப்பக உரிமையாளர்கள், எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளர்கள், மன்னார் மின்சார சபை அத்தியட்சகர், மன்னார் வைத்தியசாலை தரப்பு பிரதேச செயலாளர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மின் தடங்கள் அமுலாக்க பட்டுள்ள நிலையில் மாவட்டத்திற்கு தேவையான எரிபொருட்களை சீரான வகையில் சகல தரப்பினருக்கும் உரிய முறையில் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்தார்.

மேலும் மாவட்டத்தில் உள்ள உள்ள மீனவர்களுக்கு கடல் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள மீன்பிடி படகு மற்றும் டோலர் படகுகளுக்கு தேவையாக மண்ணெண்ணெய் மற்றும் டீசல் ஆகிய எரி பொருட்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.



அதற்கு அமைவாக மாவட்டத்தில் உள்ள மீனவ அமைப்புகள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் ஊடாக மீன்பிடி நடவடிக்கைகளுக்காக தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் உள்ள வெதுப்பகங்களுக்கும் உரிய முறையில் எரி பொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை மாவட்டத்தில் திடீரென மின் தடங்கள் ஏற்படுகின்ற போது உடனடியாக அவசர தேவைகளுக்கு எரிபொருளை வழங்கவும், குறிப்பாக மாவட்ட வைத்தியசாலைக்கு தேவையான எரி பொருளை சிரமங்கள் இன்றி பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



பயணிகள் சேவையில் ஈடுபட்டு வரும் அரச தனியார் பேருந்துகளுக்கு உரிய வகையில் எரிபொருளை பெற்றுக் கொடுக்கவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மக்களுக்கு எவ்வித அசௌகரியங்களும் இன்றி உரிய முறையில் எரிபொருளை வழங்க அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்-என அவர் கோரிக்கை விடுத்தார்.

**- மன்னார் நிருபர்**

# அவன்ட் கார்ட் தலைவர் நாட்டிலிருந்து தப்பியோட்டம்

## விமானநிலையத்தின் கணணி மற்றும் பாதுகாப்பு கமராக்களின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு முடக்கம்




அவன்ட் கார்ட் தலைவர் நிசங்க சேனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் நாட்டிலிருந்து தப்பியோடியுள்ளனர். கொழும்பு கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து அவர்கள் மாலைதீவிற்கு சென்றுள்ளனர்.

செவ்வாய்கிழமை (4) காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட யுஎல் - 102 ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானத்தில் அவர்கள் மாலைதீவு சென்றுள்ளனர். அவர்கள் நாட்டிலிருந்து தப்பிச்செல்வதற்கு உதவும் வகையில் விமானநிலையத்தின் கணணி அமைப்பு முறையும்,பாதுகாப்பு கமராக்களும் திட்டமிடப்பட்டு செயல்இழக்கச்செய்யப்பட்டன என தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.



# வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் கோத்தபாய அரசுக்கு எதிராக எழுச்சி போராட்டம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News




வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் செவ்வாய்கிழமை (05) அரசாங்கத்திற்கு எதிராக போராட்டமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

வவுனியா காமினி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக ஆரம்பமான பேரணி வைத்தியசாலை சுற்றுவட்டத்தினூடாக கடைவீதியை அடைந்து கடைவீதியூடாக மணிக்கூட்டுக்கோபுரத்தை வந்தடைந்து அங்கிருந்து பழைய பேரூந்து நிலையத்தின சென்றடைந்திருந்தது.

இதன்போது ஜனாதிபதி கோட்டபாய மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான கோசங்களையும் எழுப்பியிருந்தனர். இதன் காரணமாக ஏ9 வீதியில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டபோதிலும் போக்குவரத்து பொலிஸார் மாற்றுவழியினூடாக வாகனங்களை செல்ல ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

இந்நிலையில் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக மாணவர்கள் நீண்ட நேரமாக அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டமையினாலும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பிடதக்கது.







# இலங்கைக்கு கடத்த முயன்ற 15 கோடி ரூபாய் மதிப்பிலான ஐஸ் போதைப் பொருள் மீட்பு.

தூத்துக்குடி அருகே முள்ளகாடு கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கை வழியாக வளைகுடா நாட்டிற்கு கடத்த இருந்த 15 கோடி ரூபாய் மதிப்பிலான 5 பாக்கெட்டுகளில் தடை செய்யப்பட்ட ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகை தேசிய வருவாய் புலாணாய்வுத் துறையினர் பறிமுதல் செய்துள்ளதோடு தப்பி ஓடிய படகு ஓட்டியை தேடி வருகின்றனர். தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்கள் உள்ளிட்டவை கடல் வழியாக இலங்கை, மாலத்தீவு உள்ளிட்ட பகுதிகளுக்கும், வெளி நாடுகளுக்கும் சட்ட விரோதமாக கடத்தப்பட்டு வருகின்றன.

மெரைன் போலீஸார், க்யூ பிரிவு போலீஸார், மத்திய வருவாய்ப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டும், கடத்தப்படும் போதைப்பொருட்களை பறிமுதல் செய்தும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இருப்பினும், தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் கடத்தப்படுவது தொடர்கதையாக நடந்து வருகிறது.

இந்த நிலையில், தூத்துக்குடி, முள்ளக்காடு கடற்கரையில் இருந்து படகின் மூலம் போதைப்பொருள் கடத்தப்படுவதாக மத்திய வருவாய்ப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதன் அடிப்படையில், முள்ளக்காடு கடற்கரையில் இன்று சோதனையிட்டனர் இதன் போது கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு படகில் 5 பாக்கெட்டுகளில் தடை செய்யப்பட்ட ஐஸ் போதைப் பொருள் இருப்பதைக் கண்டு பிடித்தனர். நிறுத்தப்பட்டிருந்த படகில் ஆட்கள் யாரும் இருக்கவில்லை.

இதன் போது மீட்கப்பட்ட 5 கிலோ 600 கிராம் எடையுடைய ஐஸ் போதைப்பொருள் பாக்கெட்டுகளையும், கடத்தலுக்குப் பயன்படுத்திய படகினையும் பறிமுதல் செய்துள்ளனர்.

படகின் உரிமையாளர் மற்றும் கடத்தலில் ஈடுபட முயன்றவர்களை தேடி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருளின் சர்வதே மதிப்பு .15 கோடி என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்தியா செய்திகள் India News

# ஈழத் தமிழர்களுக்கு உதவ முன் வருக! மக்களுக்கும், கட்சிகளுக்கும் பழ. நெடுமாறன் வேண்டுகோள்!



உணவுப் பொருட்களின் பற்றாக்குறையினாலும், விலைவாசி உயர்வினாலும் இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் பட்டினியால் சாகும் நிலை உருவாகியிருக்கிறது. குறிப்பாக, ஈழத் தமிழர் நிலை குறித்து கிடைக்கும் செய்திகள் நம்மைப் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளன.

ஈழத் தமிழர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் உதவி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும்படி தலைமையமைச்சர் மோடி அவர்களை தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் வேண்டிக்கொண்டிருப்பதை மனமாற வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

தமிழக அரசு மட்டுமல்ல, மக்களும் பல்வேறு கட்சிகளும் இணைந்து நின்று ஈழத் தமிழர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், மருந்துகள், துணிமணிகள் போன்றவற்றைத் திரட்டிக் கொடுக்க முன்வருமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

அன்புள்ள,
பழ.நெடுமாறன், தலைவர்.

# செய்தியாளர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென மயங்கி விழுந்த சீமான் மருத்துவமனையில் அனுமதி





நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென மயங்கி விழுந்தது அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. சென்னை திருவொற்றியூரில் தற்போது சுரங்கப்பாதை பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அங்கு இருக்கும் குடியிருப்புகளை அகற்றும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இதற்கு அந்த பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் அந்த பகுதி மக்களுக்கு ஆதரவாக நாம் தமிழர் கட்சியின் சீமான் களம் இறங்கினார். அவர் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் அந்த பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு செய்தியாளர்களை நாம் தமிழர் கட்சியின் சீமான் சந்தித்தார்.

அப்போது அவர் திடீரென மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை நாம் தமிழர் கட்சியின் தொண்டர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவமனையில் அனுமதித்தனர்.

# 15-க்கும் மேற்பட்ட மாணவிகளிடம் பாதகச் செயலில் ஈடுபட்ட தலைமை ஆசிரியர் கைது



கள்ளக்குறிச்சி பகுதியில் வானவரெட்டி என்ற கிராமத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை 150 மாணவர்கள் படிக்கும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி இருக்கிறது. இதில், மொத்தம் ஐந்து ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். கள்ளக்குறிச்சி அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த துளசிராமன் (58) என்பவர் இந்த பள்ளியின் தலைமை ஆசிரியராக இருக்கிறார். இவர் கடந்த மூன்று மாதங்களாக பள்ளியில் படிக்கும் 15க்கும் மேற்பட்ட ஐந்தாம் வகுப்பு மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார்.

இதுகுறித்து பெற்றோரிடம் தெரிவித்தால், உங்களை ஃபெயில் போட்டு விடுவேன் என்று அவர் மிரட்டினாராம். எனவே, மாணவிகள் பெற்றோரிடம் தெரிவிக்காமல் மன உளைச்சலில் இருந்து வந்தனர். கடந்த மார்ச் 11-ஆம் தேதி ஒரு மாணவியிடம் துளசிராமன் தகாத முறையில் நடந்து கொண்டார். அவரது சில்மிஷத்தால் ஆத்திரமடைந்த மாணவி தனது வீட்டில் தெரிவித்ததை தொடர்ந்து மற்ற மாணவிகளும் தைரியமாக தங்களது வீட்டில் இதுகுறித்து கூறினர். இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர் துளசிராமனை தேடி வந்த பொழுது அவர் விடுப்பு எடுத்துச் சென்றுள்ளார்.

பின்னர் அவரது விடுப்பு முடிந்தவுடன் நேற்று பள்ளிக்கு வந்தார். உடனடியாக இது குறித்து கேள்விப்பட்ட பெற்றோர் விரைந்து வந்து பள்ளியில் அவரிடம் சண்டையிட்டனர். அதற்கு துளசிராமன் மாணவிகளின் பெற்றோர்களை ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இதுகுறித்து கள்ளக்குறிச்சி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், காவல் ஆய்வாளர் புவனேஸ்வரி தலைமையில் காவல்துறையினர் அரசு பள்ளிக்கு சென்று விசாரணை மேற்கொண்டதில் அவர் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்தது உறுதியாகியது. உடனடியாக அவர் மீது போஸ்கோ சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# ஆந்திராவில் திருப்பதி பாலாஜி' புதிய மாவட்டம் இன்று உதயம்

இந்தியா செய்திகள்
India News



ஆந்திராவில் உள்ள 13 மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இன்று முதல் 26 மாவட்டங்களாக உதயமாகின்றன. அதன்படி திருப்பதியை தலைநகராமாக கொண்ட பாலாஜி என்ற புதிய மாவட்டம் உருவாகிறது.

மாவட்டங்கள் பிரிப்பு

ஆந்திர மாநிலத்தில் தற்போது 13 மாவட்டங்கள் உள்ளன. இந்த 13 மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் அரசுக்கு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

சந்திரபாபு நாயுடு முதல்வராக இருந்தபோது ஆந்திராவின் தலைநகராக அமராவதியை தலைநகராக அறிவித்து பல்வேறு பணிகள் நடைபெற்று வந்தன. இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜெகன்மோகன் ரெட்டி பதவியேற்றவுடன் ஆந்திராவின் தலைநகராக 3 இடங்களை அறிவித்தார். பின்பு அந்த முடிவும் கைவிடப்பட்ட்து.

இதையடுத்து ஆந்திராவில் உள்ள 13 மாவட்டங்கள் இரண்டாக பிரிப்பது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். தெலுங்கு வருட பிறப்பு நாளில் மாவட்டங்கள் பிரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.இந்த நிலையில் ஆந்திராவில் உள்ள 13 மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஏப்.4 26 மாவட்டங்களாக உதயமாகின்றன. புதிதாக உதயமாக உள்ள மாவட்டங்களுக்கு கலெக்டர்கள் போலீஸ் சூப்பிரண்டுகள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

திருப்பதி பாலாஜி

அதன்படி சித்தூர் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு சித்தூரை தலைமையிடமாகக் கொண்டு சித்தூர் மாவட்டமும், திருப்பதியை தலைமையிடமாகக் கொண்டு பாலாஜி மாவட்டமு ம் இன்று முதல் செயல்பட உள்ளன. பாலாஜி மாவட்ட கலெக்டராக வெங்கட்ரமணா ரெட்டியும், போலீஸ் சூப்பிரண்டாக பர்மேஷ்வர் ரெட்டியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாலாஜி மாவட்டத்தில் 4 வருவாய் கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி திருப்பதி, காளஹஸ்தி, கூடூர், சூலூர்பேட்டை வருவாய் கோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

# திமுக கவுன்சிலரின் கணவர் அடாவடி.. தீக்குளிக்க முயன்ற பெண்

திமுக கவுன்சிலரின் கணவர் கொலை மிரட்டல் விடுப்பதாகக் கூறி பெண் ஒருவர் ஆட்சியர் அலுவலகத்தில் பெட்ரோல் ஊற்றி தீக்குளிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் சாலையில் உள்ள குடிசை மாற்று வாரியத்தில் வசித்து வருபவர் பேபி சசிகலா (35). முன்னாள் ஊர்க்காவல் படையில் பணியாற்றியுள்ளார். இந்த நிலையில், உள்ளாட்சித் தேர்தலின்போது ஏற்பட்ட தகராறு காரணமாக இவருக்கு திமுக பெண் கவுன்சிலரின் கணவர் கொலை மிரட்டடல் விடுப்பதாக புகார் தெரிவிக்கிறார். நகராட்சி தேர்தலின்போது தங்களுக்கு ஆதரவாக வாக்குக் கேட்க வராத காரணத்தினால் 13வது வார்டு திமுக கவுன்சிலர் பர்கத்துனிஷாவின் கணவர் நாசர் பாஷா என்பவர் தனக்கு கொலை மிரட்டல் விடுப்பதாகவும், தகாத வார்த்தைகளால் தன்னை திட்டி மிரட்டுவதாகவும் பேபி சசிகலா புகார் தெரிவிக்கிறார்.

மேலும் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளிக்க முயன்றுள்ளார். அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த நல்லிபாளையம் போலீசார் இதனைக்கண்டு துரிதமாக செயல்பட்டு அவரை காப்பாற்றி அவரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். திமுக கவுன்சிலரின் கணவர் தன்னை மிரட்டுவதாகக் கூறி பெட்ரோல் ஊற்றி தீக்குளிக்க முன்னாள் ஊர்காவல் படையைச் சேர்ந்த பெண்ணின் செயல் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.






கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர்களின் போராட்டம் பற்றி தெரியாத சுமந்திரன் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்



தமிழீழ விடுதலை இயக்கத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேற்ற எந்த ஒரு கட்சிக்கும் எந்த ஒரு நபருக்கும் அருகதை இல்லை. தமிழர்களின் போராட்டம் பற்றி தெரியாத சுமந்திரன் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) வெளியேறுவது சந்தோஷம் என்றும் இதையே தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் விரும்புவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

குறித்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் வெள்ளிக்கிழமை (1) மன்னாரில் உள்ள அலுவலகத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்தார். இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தந்தை செல்வாவின் 124 வது பிறந்த நாள் நிகழ்வில் வியாழக்கிழமை (31) கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து தெரிவித்த போது தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகினால் தான் சந்தோசப் படுவதாகவும் தமிழரசு கட்சியும் அதை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு சம்பந்தமாக பேசுவதற்கு சுமந்திரனுக்கு அருகதை இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கின்றேன். ஏனெனில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆரம்பித்து 10 வருடங்களுக்கு பின்பு தான் சுமந்திரன் இந்த கூட்டமைப்புக்குள் வந்து செயல்பட தொடங்கி இருக்கிறார். கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

புலிகளின் ஆயுதப் போராட்டத்தை கூட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஏற்றுக்கொள்ளவில்லை. பல தடவைகள் கொச்சைப்படுத்தி இருக்கின்றார்.

அப்படி இருக்கும் போது விடுதலைப் புலிகளுடைய செயற்பாட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாகி இருக்கின்றது. வன்முறையின் மீது நம்பிக்கை இல்லை என்று கூறிய சுமந்திரன் புலிகள் உருவாக்கிய இந்த கூட்டமைப்பில் இவ்வாறு தொடர்ந்தும் சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்க முடியும்?

இவருடைய கருத்துக்கள் தமிழர்களின் போராட்டத்தை மலினப் படுத்துவதாக இருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

தமிழ் இனத்துக்காகவும் தமிழ் மண்ணுக்காகவும் எத்தனையோ உயிர்களை தியாகம் செய்த எமது இயக்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேற வேண்டும் என்று ஆசைப்படும் நபர் இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருப்பதற்கு அருகதை அற்றவர்.

மாவை சேனாதிராஜா அண்ணன் அவர்களிடம் நான் கேட்க விரும்புகிறேன். வெளிப்படையாக பதில் கூறவேண்டும். தமிழரசு கட்சி இதை விரும்புன்கிறதா? சுமந்திரன் சொன்ன கருத்தை தமிழரசுக் கட்சி ஒட்டுமொத்தமாக ஆதரிக்கின்றதா? என்பதை வெளிப்படையாக கூற வேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் சம்பந்தன் அவர்கள் சுமந்திரனுடைய கூற்றை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? என்பதனையும் வெளிப்படையாகக் கூற வேண்டும். சுமந்திரன் கூறுவது தான் தமிழரசு கட்சி அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்தா? என்பதை வெளிப்படையாக தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு பாரிய பங்கு இருக்கிறது. இதை நாங்கள் பலமுறை சொல்லி இருக்கிறோம். அது உறுதிப்படுத்த பட்டிருக்கின்றது. ஆனால் தமிழரசுக் கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பு சுமந்திரனுக்கு சொந்தமான அமைப்பு என்று நினைத்துக் கொண்டு அவர் கருத்து சொல்ல முடியாது. எனவே இந்த விடயங்களுக்கு சம்பந்தன் ஐயா மற்றும் மாவை சேனாதிராஜா அண்ணனும் பதில் சொல்லியாக வேண்டும்.

சுமந்திரனுடைய கருத்துதான் தமிழரசுக்கட்சியின் கருத்தா? சுமந்திரன் கருத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாக சம்பந்தன் ஐயா ஏற்றுக் கொள்கிறாரா? இதற்கு வெளிப்படையான பதில் தரவேண்டும். தமிழீழ விடுதலை இயக்கத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேற்ற எந்த ஒரு கட்சிக்கும் எந்த ஒரு நபருக்கும் அருகதை இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பில் நாங்கள் தொடர்ந்து இருப்போம். தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்தில் எங்களுடைய பங்கு இருக்கின்றது.

சுமந்திரன் அடிக்கடி எம்மை சாடுகின்ற போது நாங்கள் மௌனம் காத்து வந்தோம். ஏனென்றால் மாறி மாறி அடி படுகின்ற நிலை ஏற்படக் கூடாது என்று பொறுமையாக இருந்தோம். ஆனால் இந்த விடயத்தில் நாங்கள் அவ்வாறு பொறுமை காக்க முடியாது.

தொடர்ச்சியாக எமது போராட்டத்தை மலினப்படுத்தி வரும் சுமந்திரன் தமிழீழ விடுதலை இயக்கத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியே செல்வது சந்தோஷமாக இருக்கிறது என்று சொல்வது நகைப்புக்குரிய விடயமாக இருக்கிறது. அதை விட சிறி அண்ணாவையும் முப்படைகளை கொண்ட தலைவர் பிரபாகரனையும் இதில் இணைத்து பேசி இருக்கிறார்.

எமது தலைவருடைய சிந்தனைகளைக் கொண்டு நான் செயற்படுவதில் என்ன தவறு? அதேபோல். நாங்கள் ஏற்றுக்கொண்ட முப்படைகளை கட்டி ஆண்ட தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

இன்றைய நிலையில் அந்த இரண்டு தலைவர்களும் இருந்திருந்தால் என்ன முடிவை எடுப்பார்களோ? அதையே இன்று எமது கட்சியும் எடுத்துள்ளது. நாங்கள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை சந்திக்க வரவில்லை என்பதற்காக சுமந்திரன் ஆத்திரப்பட கூடாது.

இந்த இரண்டு தலைவர்களும் இப்பொழுது என்ன சிந்திப்பார்களோ அதன் அடிப்படையில் தான் தமிழீழ விடுதலை இயக்கம் செயல்படும். சுமந்திரனுக்கு போராட்டத்தைப் பற்றி தெரியாவிட்டால் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும்.

எனவே இது விடயம் தொடர்பாக மாவை அண்ணன் அவர்களும் சம்பந்தன் ஐயாவும் எமக்கு வெளிப்படையான பதிலைத் தர வேண்டும். அதே நேரத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் எந்த ஒரு சூழ்நிலையிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிச் செல்லாது.

மேலும் சுமந்திரன் சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் ஐயா போன்றவர்களை மீண்டும் கூட்டமைப்பில் இணைய சொல்லி இருக்கின்றார்.

ஒற்றுமைக்கு தான் தடையில்லை என்றார். இப்படிச் சொல்லும் சுமந்திரன் எதற்காக தமிழீழ விடுதலை இயக்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டு விலகிச் செல்ல வேண்டும் என்று விரும்புகிறார்? இது முன்னுக்குப் பின் முரணை கொண்டு சுமந்திரன் செயல்படுகிறார் என்பதை காட்டுகிறது.என அவர் மேலும் தெரிவித்தார்.

# "அப்பாவி மக்களின் வாழ்க்கையை சீரழித்தது போதும் ஓடிவிடு கோட்டா" — சட்டத்தரணிகள் கவனயீர்ப்பு போராட்டம்

மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் வியாழக்கிழமை (7) மதியம் 1 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் நீதிமன்றத்தில் கடமையாற்றுகின்ற சட்டத்தரணிகள் மன்னார் நீதிமன்றத்தின் முன் ஒன்று கூடி பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது "கவிழ்ப்போம் கவிழ்ப்போம் குடும்ப ஆட்சியை கவிழ்ப்போம்",








அப்பாவி மக்களின் வாழ்க்கையை சீரழித்தது போதும் ஓடிவிடு கோட்டா, போலி முகம் காட்டும் கோட்ட அரசு எமக்கு வேண்டாம் உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு மன்னார் சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபட்ட மை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் அரசிற்கு எதிராக கண்டன போராட்டம்

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை (7) காலை 9.30 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமயில் கோட்டபாயக ராஜபக்ஸவின் அரசாங்கத்திற்கு எதிராக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசின் தூர நோக்கற்ற நிதி நிர்வாக முகாமைத்துவத்தால் நாடு பெரும் பொருளாதார பின்னடைவை எதிர் நோக்கி பட்டினிச்சாவை நோக்கி நகர்கின்றது.



குறிப்பாக அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம், எரிவாயு மற்றும் மின்சாரம் இன்றி பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இச் செயலைக் கண்டித்து தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை (7) காலை 9.30 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு




கண்டன போராட்டம் இடம் பெற்றது.

குறித்த போராட்டத்தில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள்,சமூக ஆர்வளர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் "கோட்டபாயவே வெளியேறு", "குடும்ப ஆட்சி வேண்டாம்", "மக்களிடம் கொள்ளையடித்த பணத்தை மக்களுக்கே கொடு" போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடதக்கது.

# கவிஞர், உலகச் சாதனையாளர் திரு அகணி சுரேஷ் அவர்கள்
## *திருக்குறள் வரலாற்று உலகச் சாதனை நிகழ்ச்சி*

- பேராசிரியர் பானு ரேகா



கனடாவில் பொன்நிறத் தகடுகளில் 1330 திருக்குறள் பதிப்பித்துக் காட்சிப்படுத்தி திருக்குறள் உலக சாதனை.

உலகச் சாதனையாளர், எழுத்தாளர், கவிஞர், பாடலாசிரியர், திருக்குறள் நூலறி மாமணி அகணி சுரேஸ் அவர்களின் மேலும் ஒரு திருக்குறள் சாதனை.

கனடா நேரம் ஏப்ரல் 4 ஆம் திகதி அதிகாலை 12:30 மணிக்கு ஆரம்பித்துக் காலை 7 மணி வரை ஆறரை மணித்தியாலங்களில் 1330 திருக்குறள் குறட்பாக்களை 45 பொன்தகடுகளில் வெப்ப அழுத்திகளைப் பயன்படுத்திப் பதங்கமாதல் தொழில்நுட்பம் மூலம் பொன்நிறத்தகட்டில் உலக சாதனையாளர் அகணி சுரேஸ் பதித்துள்ளார். இவ்வாறு பொன்நிறத்தகட்டில் மிகவும் தெளிவாகப் பதித்த திருக்குறள் வருங்காலத்தில் கனடாவில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் திருக்குறளுக்குச் சிறப்புச் சேர்க்கும் விதமாகக் காட்சிப்படுத்தப்படும். இவ்வாறு பொன்நிறத் திருக்குறள் தட்டுகளை மீண்டும் மீண்டும் அரங்குகளில் அழகாகக் காட்சிப்படுத்தப்படுவதன் மூலம் திருக்குறள் இனை மென்மேலும் பெருமையடையச் செய்யலாம் என்ற நோக்கத்தில் இந்தச் சாதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகச் சாதனையாளர் அகணி சுரேஸ் தெரிவித்தார்.

இந்தத் திருக்குறள் சாதனை நிகழ்வு மல்டி சுமார்ட் சொலுசன், கனடா மற்றும் தமிழ் மகள் இலக்கிய அமைப்பு, தமிழ்நாடு, ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்திருந்தன. இந்தச் சாதனை நிகழ்வில் உலகச் சாதனையாளர், பேராசிரியர், திருக்குறள் மாமணி பேராசிரியர் பானு ரேகா, தமிழ்நாடு, கவிஞர், திருக்குறள் நூலறி மாமணி, குமரகுரு கணபதிப்பிள்ளை, கனடா ஆகியோர் கண்காணிப்பாளர்களாகத் தொண்டாற்றினார்கள்.

இந்த நிகழ்வில் திருக்குறள் நூலறி மாமணி மருத்துவர் செல்வி செந்தமிழ் முருகேசன், அமெரிக்கா அவர்கள் மறை மகிழ் மன்றம், வட அமெரிக்கா சார்பில் வாழ்த்துரை, தொடக்கவுரை நிகழ்த்திச் சிறப்பித்தார்.

உலகச் சாதனையாளர், பேராசிரியர், திருக்குறள் மாமணி பேராசிரியர் பானு ரேகா தமிழ்நாடு கவிஞர், திருக்குறள் நூலறி மாமணி, குமரகுரு கணபதிப்பிள்ளை, பொருளாளர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆகியோர் தொடக்கவுரையும், நிறைவுரையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.


சாதனை நிகழ்வில் தொழில் நுட்பப் படிமுறைகளை விபரித்ததோடு, கடவுள் வாழ்த்து, அறன் வலியுறுத்தல், நீத்தார் பெருமை ஆகிய அதிகாரங்களுக்கான 30 குறட்பாக்களை பொன்நிறத்தகட்டில் பதிக்கும் படிமுறைகளை மெய்நிகர்வழியாகக் காட்சிப்படுத்தி விளக்கினார்.

பொன்தகட்டில் திருக்குறள் பதித்த அகணி சுரேஸ் அவர்களின் உலகச் சாதனையைப் பாராட்டி வாழ்த்துப் பா ஒன்றினையும்உலகச் சாதனையாளர், பேராசிரியர் திருக்குறள் மாமணி பானு ரேகா அவர்கள் வழங்கினார்.

பா வகை:
*கட்டளைக் கலித்துறை*
*திருக்குறள் வரலாற்று உலகச் சாதனை நிகழ்ச்சி*
பொன்தகட்டில் அச்சுப் பதித்தக் குறள்கள் பேரருளே
பொன்மனச் செம்மல் பெருமை மிகுப்பா பெருவரமே
பொன்னம் பலவானின் பொற்பாதச் சீரில் பெறுமிடமே
பொன்மகள் அன்னைக்குப் பொன்மலர்ப் பாவணி பொற்படைப்பே!

கவிஞர், திருக்குறள் செம்மல் கந்த ஸ்ரீ பஞ்சநாதன், தலைவர், கனடாத் தமிழ்க்கவிஞர் கழகம் அவர்கள் சாதனை நிறைவில் கலந்து அகணி சுரேஸ் அவர்களைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார். பெறுமதி வாய்ந்த இந்த பொன்நிற திருக்குறள் தட்டுகள் பல நிகழ்ச்சிகளில் காட்சிப் பொருளாகி திருக்குறளினை மென்மேலும் பெருமைப்படுத்தும் என்று உலகச் சாதனையாளர் நம்பிக்கை தெரிவித்தார்தெரிவித்தார் கனடாவில் நடைபெற்ற இச்செயல் சாதனையாக அங்கிகரிக்கப்பட்டது.

ஆல் இந்தியா புக் ஆ.ஃப் ரெக்கார்ட்ஸ் இந்தியா நிறுவனர் வெங்கடேசன்.







A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

## கனடா வெஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின்
இரண்டாவது கிழமையில் றொறன்ரோவில் இருந்து புரப்பட்டு
மூன்றாவது கிழமையில் திரும்பி வருதல்.

British Colombia, Alberta ஆகிய 2 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களைப் பார்வையிடலாம். Vancouver-Rockies-Banff-Lake Louise-Icefield-Vicoria-Chemainus-Whistler and More...

| 7 Days | 8 Days | 9 Days | 10 Days | 11 Days | 12 Days | 13 Days | 14 Days | 15 Days |
|---|---|---|---|---|---|---|---|---|
| Reg. Price C$ 2500.00 | Reg. Price C$ 3000.00 | Reg. Price C$ 3500.00 | Reg. Price C$ 4000.00 | Reg. Price C$ 4500.00 | Reg. Price C$ 5000.00 | Reg. Price C$ 5500.00 | Reg. Price C$ 6000.00 | Reg. Price C$ 6500.00 |
| Sale Price C$ 2250.00 | Sale Price C$ 2500.00 | Sale Price C$ 2750.00 | Sale Price C$ 3000.00 | Sale Price C$ 3250.00 | Sale Price C$ 3500.00 | Sale Price C$ 3750.00 | Sale Price C$ 4000.00 | Sale Price C$ 4250.00 |

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு இந்த விலை *3 to 4 Star Hotel or Motel *Including All Admission

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.
விமான சீட்டு தங்குமிட வசதி பேருந்து சேவை காலை உணவு மதிய உணவு இரவு உணவு

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கோத்தபாயவினால் குறி வைக்கப்பட்டுள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் சில நாட்களில் கொல்லப்படலாம்

## பாராளுமன்ற உறுப்பினரின் அதிர்ச்சித் தகவல்





தற்போதைய கொந்தளிப்பான அரசியல் சூழ் நிலையில் கோத்தபாயவினால் குறி வைக்கப்பட்டுள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் சில நாட்களில் கொல்லப்படலாம் என பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலைத் தொடர்ந்து திரிபோலி இராணுவ முகாமில் இயங்கியவர்கள் இப்படியான மோட்டார் சைக்கிளில் சென்றே ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தனர் என்ற உண்மையான தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார ஊடகவியலாளர்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் "அடையாளம் தெரியாத மோட்டார் சைக்கிள் குழு நாடாளுமன்றத்தை அண்மித்த பகுதிகளில் நடமாடுவதாகவும் இதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் உயிரை ஆபத்துக்குள் தள்ளி இருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

திரிபோலி இராணுவ முகாமில் இயங்கியவர்கள் இப்படியான மோட்டார் சைக்கிளில் சென்றே ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தனர். மிரிஹான சம்பவத்தின் போது இப்படியான அடையாளம் தெரியாத மோட்டார் சைக்கிள் குழு சென்றிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியில் செல்லும் நேரத்தில் இப்படியான அடையாளம் தெரியாத நபர்கள் வந்து துப்பாக்கி பிரயோகம் செய்து விட்டு போகலாம். அல்லது அப்பாவி பொது மகன் ஒருவர் மீதும் துப்பாக்கிச் சூட்டை நடத்தலாம்.

இவர்கள் முகங்களை மூடிக்கொண்டு வந்திருந்தனர். காவல்துறை அதிகாரியான வெத்தசிங்க என்பவர் இவர்களை நிறுத்தினார். மோட்டார் சைக்கிளின் சாவியை எடுத்துக்கொண்டார். முகமூடியை கழற்ற முயன்றார். அதனை செய்ய விடவில்லை.

தற்போது அந்த காவல்துறை அதிகாரிக்கு எதிராக விசாரணை நடத்த முயற்சித்து வருகின்றனர். இராணுவ தளபதி, காவல்துறைமா அதிபரை தொடர்புகொண்டு இது குறித்து விசாரிக்குமாறு கூறியுள்ளார்.

இராணுவ தளபதி எப்படி இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு காவல்துறைமா அதிபருக்கு உத்தரவிட முடியும்? சாகி கால்லகே என்ற நபரின் முகநூல் கணக்கில், காவல்துறையினர், இராணுவத்தினரிடம் அடி வாங்க உள்ளனர் என பதிவிட்டுள்ளார்.

ஊடகங்களை தாக்கினர், நேரடி ஒளிப்பரப்புகளை தடை செய்தனர். ஊடகவியலாளர்களை தாக்கினர். இது மிகவும் பாரதூரமான நிலைமை. அடையாளம் தெரியாத குழுக்கள் என்பது அரச பயங்கரவாதம் வரை நீடித்து செல்லலாம்.

அரசாங்கம் என்ற வகையில் இதற்கு உடனடியாக பதிலளிக்க வேண்டும். நிலைமை இப்படி சென்றால், 88-89 ஆம் ஆண்டு காலத்தில் ஆயுதங்களை கொண்டு சாதாரண மக்களை பழிவாங்கினர்.

மக்களை கொன்றனர். எனது தந்தையையும் கொலை செய்தனர். அந்த நிலைமைக்கு கொண்டு செல்லும் வகையில் அரசியல் திரும்பலாம். இதனால், உரிய நடவடிக்கைகளை எடுத்து, ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக அரசாங்கத்திற்கு இருக்கும் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

துப்பாக்கிகளுடன் அடையாளம் தெரியாத குழுக்கள் நடமாட இடமளிக்க வேண்டாம் எனவும் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# மாறியிருக்கும் அரசியல் சூழ்நிலையை தமிழர் தரப்பு எப்படி கையாளப் போகிறது என்பதில்தான் எமது இனத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது

## தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

மாறி வந்திருக்கும் இந்த அரசியல் சூழ்நிலையை தமிழர் தரப்பு எப்படி கையாளப் போகிறது என்பதில்தான் தமிழ் இனத்தின் எதிர்காலம் மற்றும் தீர்வு என்பன தங்கியுள்ளது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)தெரிவித்துள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப் பேச்சாளர் கே.சுரேந்திரன் புதன்கிழமை (06) விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது, எமது நிரந்தர அரசியல் தீர்வுக்கான காலவரையறையை ஏற்றுக் கொண்டாலே அரசியல் ஆட்சி மாற்றங்களில் கரிசனை கொள்ள முடியும். இல்லையேல் எந்த மாற்றங்களும் எம்மக்களுக்கு அர்த்தமற்றதாகிவிடும்.

நாம் துல்லியமாக கணித்த படி கடுமையான பொருளாதாரச் சிக்கலினாலும் உள்ளக அரசியல் மாற்றங்களினாலும் பாரிய மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. தாம் பெரும்பான்மையாக வாக்களித்து தெரிவு செய்த அரசாங்கத்தை அந்த மக்களே எழுச்சி கொண்டு துரத்தி அடிக்கும் சூழ்நிலை பிறந்துள்ளது.

இந்த நேரத்தில் தற்காலிக அரசாங்கமா?, இடைக்கால அரசாங்கமா? காபந்து அரசாங்கமா? என புதிய ஏற்பாட்டினை மேற்கொள்வதற்கு அரசும் எதிர்க்கட்சிகளும் முனைந்துள்ளனர்.

மாறி வந்திருக்கும் இந்த அரசியல் சூழ்நிலையை தமிழர் தரப்பு எப்படி கையாளப் போகிறது என்பதில்தான் எமது இனத்தின் எதிர்காலம், தீர்வு என்பன தங்கியுள்ளன. எம்மினம் முகம் கொடுத்திருக்கும் அன்றாட பிரச்சினைகளுக்கும் நீண்ட காலமாக கோரி வரும் அரசியல் தீர்வுக்கும் முடிவை எட்ட இந்தச் சூழ்நிலையை சரியான முறையில் நாம் கையாள வேண்டும். அந்தந்த தரப்புக்களோடு பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்பதோ, அழைத்தவுடன் சென்று பேசுவதோ, ஓரிருவர் முடிவிலோ அல்லாமல் சரியான முறையிலே கையாளுவது தற்பொழுது தேவையாக உள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதில் கலந்து கொள்வதற்கு முன்னர் நிறைவேற்ற வேண்டிய சில நிபந்தனைகளை ரெலோ கோரியிருந்தது அனைவரும் அறிந்ததே. அரசியல் கைதிகள் விடுதலை, எமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பை உடனடியாக நிறுத்துதல், அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல், சர்வதேச ஏற்பாடுகளுக்கு அமைய காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான விசாரணை மற்றும் நீதி, அரசியல் யாப்பில் உள்ள அதிகாரப் பகிர்வினை உடனடியாக நடைமுறைப்படுத்துதல் என்பன மிகக்குறைந்த பட்ச விடயங்களாக கருதப்படுகின்றன. பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையோடு இவற்றை நிறைவேற்ற முடியும்.

ஆகக்குறைந்தது இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் தரப்புடன் பேசுவது பற்றிய பரிசீலனையை நாம் மேற்கொள்ள முடியும். இதுவே எம்மினம் சார்ந்து செய்யக்கூடிய சரியான அரசியல் நகர்வாக தற்போதைய சூழ்நிலையில் அமையும்.

# "தந்தையே எமது தேசத்தை விழித்தெழச் செய்வீர்"

## — நாட்டிற்கு ஆசி வேண்டி இடம் பெற்ற சர்வமத பிரார்த்தனை —



"தந்தையே எமது தேசத்தை விழித்தெழச் செய்வீர்" என்னும் கருப்பொருளில் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் கறிற்றாஸ்-வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்பணி செ. அன்ரன் அடிகளார் தலைமையில் வியாழக் கிழமை காலை 10 மணியளவில் அமைதிப் பவனியும் தேச விழிப்புணர்வுக்கான சர்வமத வழி பாடும் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது நாட்டில் ஜனநாயகத்தை கட்டியெழுப்புவோம், எங்கள் பிஞ்சுகளின் எதிர் காலத்தினை வளப்படுத்துவோம், எமது நாட்டை இருளிலிருந்து மீட்டெடுப்போம், விழிம்பு நிலையிலுள்ள மக்களை பாதுகாப்போம், என்னும் சுலோகங்களை தாங்கிய மக்கள் குறித்த நிகழ்வில் பங்கெடுத்தனர்.

தற்காலத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமை மற்றும் இயல்பு நிலை பாதிப்புகளால் துன்பப்படும் மக்களின் துயரில் நாங்களும் இணைந்து எமது நாட்டுக்காக ஒருமித்து பிரார்த்திக்கும் முகமாக குறித்த நிகழ்வு கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் போது தேச விழிப்புணர்வு சுடரினை சர்வமத மதத்தலைவர்களும் இணைந்து ஏற்றி வைத்தனர்.

கறிற்றாஸ்-வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றது. இதன் போது மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் உரை நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து மத வழிபாடுகள் இடம்பெற்றன. அனைத்து மதத்தவர்களும் ஒன்று சேர்த்து நாட்டில் உள்ள இயற்கை வளங்களை இறைவனுக்கு காணிக்கையாக்கி மிகவும் அர்த்தம் உள்ளதான பொது வழிபாடு நடத்தப்பட்டது.

இதில் நீர், மண், உப்பு தேங்காய் நெல் போன்ற பொருட்களை மையப்படுத்தி இவ்வழிபாடு இடம்பெறதுடன் தொடர்ந்து சர்வ மத பிரார்த்தனைகள் இடம்பெற்றது.

இதன் போது பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்









# தென்னிலங்கையில் நடக்கும் போராட்டங்களை தமிழ் மக்கள் எவ்வாறு அணுக வேண்டும்?



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் எல்லா இனங்களையும் பாதிக்கின்றன. எனவே அரசுக்கு எதிரான போராட்டத்தில் சிங்களவர் தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இன மக்களும் ஒன்று சேரவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எந்த அரசியல் இலக்கை முன்வைத்து அவ்வாறு ஒன்று சேர்ந்து போராடுவது என்பதில் தமிழ் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

சிங்கள மக்கள் போராடுவது ஒரு ஆட்சி மாற்றத்திற்காக. ஆட்சியை மாற்றினால் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் கிடைக்கும்? 2015 இல் நடந்ததுதான் திரும்பவும் நடக்கும். ஏனென்றால் ஆட்சி மாற்றம் எனப்படுவது, இலங்கைத் தீவை பொறுத்தவரையிலும் அரசாங்கத்தைத்தான் மாற்றும். மாறாக அரசுக் கட்டமைப்பை மாற்றாது. தமிழ் மக்கள் கேட்பது அரசு கட்டமைப்பை மாற்ற வேண்டுமென்று. ஒற்றையாட்சி கட்டமைப்பை மாற்றி இலங்கைத்தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தும் ஒரு சமஸ்டி கட்டமைப்பைத்தான் தமிழ் மக்கள் கேட்கிறார்கள். எனவே தமிழ் மக்களுடைய கோரிக்கைகள் ஆட்சி மாற்றத்துக்கு உரியவை அல்ல. அவை அரசுக் கட்டமைப்பில் மாற்றத்தை கேட்பவை.

ஏற்கனவே 2015 இல் ஒரு ஆட்சி மாற்றத்தால் ஏமாற்றப்பட்டவர்கள் தமிழ் மக்கள். அந்த ஆட்சிமாற்றத்தின் எதிர்மறை விளைவுதான் மூன்றிலிரண்டு தனிச்சிங்கள பெரும்பான்மையை நோக்கி ராஜபக்சக்கள் உழைக்கக் காரணம். தமிழ் மக்கள் மீண்டுமொரு தடவை ஆட்சிமாற்றத்தின் அப்பாவிப் பங்காளிகளாக மாறி ஏமாற்றம் அடைய முடியாது. எனவே சிங்கள மக்கள் இப்பொழுது தென்னிலங்கையில் நடத்தும் போராட்டங்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து முடிவுகளை எடுக்க வேண்டும்.

தென்னிலங்கையில் நடக்கும் போராட்டங்கள் ஒரு பகுதி தன்னியல்பானவை. இன்னொரு பகுதி எதிர்க்கட்சிகளால் ஒழுங்கமைக்கப்படுவன. தென்னிலங்கையில் உள்ள நகர்ப்புற நடுத்தர வர்க்கம் வீதியில் இறங்கியது. ஏனென்றால் மின்சாரம் இல்லை, எரிவாயு இல்லை, அத்தியாவசிய பொருட்கள் இல்லை. பிரச்சினை நடுத்தர வர்க்கத்தை தாக்கிவிட்டது. அவர்கள் தெருவில் இறங்கினார்கள்.கோட்டா வீட்டுக்கு போ என்ற கோஷத்தை உருவாக்கினார்கள். அந்த கோஷத்துக்கு உயிர் கொடுத்தார்கள். ஜனாதிபதியின் மாளிகையை முற்றுகையிட்டார்கள். குடும்ப ஆட்சிக்கு எதிராக சிங்கள மக்கள் போராடுவது சரி.

ஆனால் சிங்கள மக்கள் முன்வைக்கும் தோ'ங்களில் பெரும்பாலானவை ஆளும் அரசாங்கத்துக்கு எதிரானவைதான் சிங்கள பவுத்த அரசுக் கட்டமைப்புக் எதிரானவை அல்ல என்பதனை தமிழ் மக்களுக்கு கவனிக்கவேண்டும். ஆர்ப்பாட்டக்காரர்களில் மிகச் சிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் ஆட்சிமாற்றத்தைத்தான் கேட்கிறார்கள். மிகச் சிலர்தான் தமிழ் மக்களுக்கு நீதி வேண்டும், போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்கள் பெரும்பான்மைக்குள் சிறுபான்மையினர். அவர்களால் பெரும்பான்மை அரசியலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஆனால் தமிழ் மக்களின் உண்மையான நண்பர்கள் அவர்கள் தான். அவர்களை எப்பொழுதும் தமிழ் மக்கள் மதித்து நடக்க வேண்டும்.

அதேசமயம் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை பொறுத்தவரை தமிழ்மக்கள் தமது கோரிக்கைகளில் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வு இனப்படுகொலைக்கு நீதி போன்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்றுக்கொள்வார்களாக இருந்தால் தமிழ் மக்கள் அவர்களோடு இணைந்து போராடலாம். 12 ஆண்டுகளுக்கு முன் யுத்த வெற்றியை பால்சோறு பொங்கி கொண்டாடிய ஒரு மக்கள் இப்பொழுது அதே யுத்த வெற்றி நாயகரை கீழ்தரமான வார்த்தைகளால் நிந்தித்து வீட்டுக்குப் போ என்று கேட்கிறார்கள். இது தமிழ் மக்களுக்கு பழி வாங்கியவருக்கு உண்டாகும் திருப்தியை கொடுக்கலாம். ஆனால் பிரச்சினை அதைவிட ஆழமானது.

இங்கு கூட கோட்டாபய ஒரு கருவிதான். மஹிந்தவும் ஒரு கருவிதான். சிங்கள பௌத்த பெருந் தேசியவாத அரசின் கருவிகளே அவர்கள். இன ஒடுக்குமுறைக்கு அவர்கள்தான் காரணம் இல்லை. இன ஒடுக்குமுறையை அவர்கள் உச்சத்துக்குக் கொண்டு போனார்கள் என்று வேண்டுமானால் கூறலாம். இன ஒடுக்குமுறையானது மகிந்தவுக்கும் முன்னரும் இருந்தது. எனவே தமிழ் மக்கள் போராட வேண்டியது இன ஒடுக்குமுறைக்கு எதிராகத்தான். இந்த இன ஒடுக்குமுறையை நிறுவன மயப் படுத்தி வைத்திருக்கும் அரசுக் கட்டமைப்பு எதிராகத்தான் ராஜபக்ச குடும்பத்திற்கு எதிரான போராட்டம் என்பது இன ஒடுக்குமுறைக்கு எதிரான பெரும் போராட்டத்தின் ஒரு பகுதிதான். அதுவே முழுப் போராட்டம் ஆக முடியாது. ஒரு குடும்பத்தை மட்டும் எதிராக பார்ப்பது என்பது அந்தக் குடும்பத்தை அகற்றினால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று அரசியல் விளக்கம் குறைந்த மக்கள் நம்பும் ஒரு நிலையை ஏற்படுத்தும். இதுதான் 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் போதும் நடந்தது.

எனவே தமிழ் மக்கள் இப்பொழுது மிகத் தெளிவான முடிவுகளை எடுக்க வேண்டும். சிங்கள மக்களின் போராட்டத்தை தமிழ் மக்கள் உத்தி பூர்வமாக ஆதரிக்க வேண்டும். அதே சமயம் சிங்கள மக்களோடு இணைந்து போராட வேண்டும் என்றால் தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளில் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். கோட்டாவை ஆட்சியில் இருந்து அகற்றத் துடிக்கும் எந்த ஒரு எதிர்க்கட்சியும் சமஸ்டியை ஏற்றுக்கொள்ளவில்லை. 13 ஆவது திருத்தத்தை தாண்டிப் போகத் தயாராகவும் இல்லை.

இப்படிப்பட்ட எதிர்க்கட்சிகளுடன் இணைந்து ஆட்சி மாற்றத்தை கேட்கவும் முடியாது, ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க முடியாது. ஏனென்றால் எனது கடந்த வாரத்துக்கு முதல் வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல, தேசிய அரசாங்கம் என்பது சிங்கள பௌத்த தேசிய அரசாங்கமாக அமையுமாக இருந்தால் அதில் தமிழ்மக்கள் இணைவதில் எந்த பயனும் கிடையாது. அது ஒரு பல்லித்தன்மை மிக்க தேசிய அரசாங்கமாக அமையுமாக இருந்தால் தமிழ் பிரதிநிதிகள் அதை குறித்து தீவிரமாக யோசிக்கலாம்.

எனவே தென்னிலங்கையில் இப்போது ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பை கண்டு தமிழ் மக்கள் உணர்ச்சிவசப்படத் தேவையில்லை. கிருணிவுக்கு ரசிகர் மன்றத்தை கட்டியெழுப்பவும் தேவையில்லை. இப்பொழுது சஜித் பிரேமதாச கூறுகிறார் ஜனாதிபதி முறையை அகற்ற வேண்டும் என்று. ஆனால் அவரும் இதற்கு முன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவர். மட்டுமல்ல சந்திரிகாவும் அவ்வாறு போட்டியிட்டவர்தான். போட்டியிடுவதற்கு முன்பு ஜனாதிபதி முறைமையை மாற்ற வேண்டும் என்பார்கள். ஆனால் தேர்தலில் வென்றதும் அதை மறந்து விடுவார்கள்.நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை என்பது இலங்கைத் தீவின் ஜனநாயக இதயத்தை பலவீனப்படுத்தும் பல அம்சங்களில் ஒன்றுதான். ஆனால் அதைவிட ஆழமான அம்சங்கள் உண்டு. சிங்கள - பௌத்த ஒற்றையாட்சி கட்டமைப்புதான் இலங்கைத் தீவின் ஜனநாயக இதயத்தை தொடக்கத்திலிருந்தே பலவீனப்படுத்தியது. இச்சிறிய தீவில் பல்லினத் தன்மையை ஏற்றுக் கொள்ளாமைதான் எல்லாவற்றுக்கும் மூல காரணம். எனவே இங்கு தேவையாக இருப்பது யாப்பு மாற்றம். அந்த யாப்பு மாற்றத்துக்குள் ஜனாதிபதி முறைமையும் அடங்கும். இந்த அடிப்படையில் கோரிக்கைகளை முன்வைக்குமாறு தமிழ் தரப்பு எதிர்க்கட்சிகளை ஊக்குவிக்க வேண்டும். அவ்வாறு ஊக்குவித்து இது விடயத்தில் எதிர்க்கட்சிகளுடன் ஓர் அரசியல் உடன்படிக்கையை உருவாக்க வேண்டும். அப்படி ஒரு உடன்படிக்கையைச் செய்ய முடிந்தால் அடுத்த கட்டமாக சிங்கள மக்களோடு இணைந்து தெருவில் இறங்கலாம்.

தென்னிலங்கையில் நடப்பவைகளோடு ஒப்பிடுகையில் தமிழ் மக்கள் அந்த அளவுக்கு கடந்த 12 ஆண்டுகளில் போராடவில்லை என்பது உண்மைதான். பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் தம்மை நோக்கி வீசப்பட்ட கண்ணீர் புகைக்குண்டைத் திரும்பவும் போலீசாரை நோக்கி வீசுகிறார்கள். போலீசாரின் தற்காலிகத் தடுப்புகள் உருட்டிக் கொண்டு ஓடுகிறார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள். அதிரடிப் படையோடு நெற்றிக்கு நேரே வாக்குவாதப்படுகிறார்கள். எல்லாம் சரிதான் ஆனால் அவர்கள் அவ்வாறு எதிர்த்துப் போராடுவதால் அவர்களை யாரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் போவதில்லை. இதையே தமிழ் மக்கள் செய்தால் நிலைமை என்னவாகும்? பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் உள்ளே தூக்கிப் போட்டுவிடுவார்கள். கடந்த 12 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் சட்டமறுப்பு போராட்டங்கள் பெருமெடுப்பில் தொடர்ச்சியாக நடக்காமைக்கு அதுவும் ஒரு காரணம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு வலிமையாக கேட்பதற்கு இது ஒரு பொருத்தமான சந்தர்ப்பம். தமிழ் பிரதிநிதிகள் சிங்களக் கட்சிகளுடனும் ஆர்ப்பாட்டக்காரர்களுடனும் இணைந்து அந்த கோரிக்கையை வலிமையாக முன்வைப்பார்களா? பயங்கரவாத தடைச்சட்டம் இல்லையென்றால் தமிழ் மக்கள் சிங்கள மக்களை விட ஆக்ரோ'மாக போராட முன் வருவார்கள். ஏற்கனவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தான் தமிழ் அம்மாக்கள் காணாமல் போன தமது உறவுகளுக்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் இருக்கத்தக்கதாகவே கேப்பாபிலவில் பெண்கள் காணிக்காகப் போராடினார்கள். இரணைதீவுப் பெண்கள் தமது வீடுகளை மீட்டார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்கள் அதிரடிப்படையின் துப்பாக்கி வாய்க்கு நேரே நின்று நியாயம் கேட்கிறார்கள். ஆனால் இவையாவும் சிறிய மற்றும் தெட்டம் தெட்டமான போராட்டங்கள் தான். தென்னிலங்கையில் இப்பொழுது நடப்பது போன்று பெருமெடுப்பிலான தொடர்ச்சியான போராட்டங்கள் அல்ல. பயங்கரவாத தடைச்சட்டம் இல்லை என்று சொன்னால் தமிழ் அம்மாக்கள் இதைவிட ஆக்ரோ'மாக போராடுவார்கள். அதை அரசாங்கம் தாங்காது.

கடந்த வாரம் கிருனிக்கா யாழ் பேருந்து நிலையத்தில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார். அந்த ஆர்ப்பாட்டத்தில் நடந்த சம்பவங்களின் விளைவாக யாழ்ப்பாணத்தில் அவருக்கு ஒரு சிறு ஆதரவு அலை ஏற்பட்டது. ஆனால் இதே கிருனிக்கா கடந்த 12 ஆண்டுகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்காகப் போராடும் அம்மாக்களோடு சேர்ந்து போராடினவரா? இல்லையே. இது தான் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டிய இடம்.

எனவே தென்னிலங்கையில் நடப்பவை ஒரு குடும்ப ஆட்சிக்கு எதிரான மக்கள் எழுச்சி என்ற அடிப்படையில் அதன் முற்போக்கான அம்சத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே சமயம் அந்த போராட்டங்களை கண்டு உணர்ச்சிவசப்பட்டு மெய்மறந்து நிபந்தனையின்றி ஆதரிக்கவும் தேவையில்லை. இதை இந்த கட்டுரை சொல்லித்தான் தமிழ் மக்கள் செய்ய வேண்டும் என்றும் இல்லை. ஏனென்றால், ஏற்கனவே தமிழ் மக்கள் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் சிங்கள மக்களோடு பெருமெடுப்பில் இணையவில்லை. தென்னிலங்கையிலும் சரி வடக்கு கிழக்கிலும் சரி நிலமை அப்படித்தான் இருக்கிறது. கிளிநொச்சி வளாகத்தில் உள்ள சிங்கள மாணவர்கள் போராடியபோது தமிழ் மாணவர்கள் அதில் பெரிய அளவில் இணையவில்லை. அப்படித்தான் யாழ் பல்கலைக்கழகத்திலும் சிங்கள மாணவர்கள் போராடிய பொழுது ஒப்பீட்டளவில் குறைந்தளவு எண்ணிக்கையான தமிழ் மாணவர்கள்தான் அதில் இணைந்தார்கள். இவ்வாறாக கடந்த வாரம் முழுவதும் நாடுபூராகவும் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் ஒரு தடவை நிருபித்திருக்கும் யதார்த்தம் எதுவென்றால் நாடு இவ்வாறான போராட்டங்களின் போதும் பெருமளவுக்கு இனரீதியாக பிளவுபட்டு நிற்கிறது என்பதே.



# மலையக பிள்ளைகளின் கல்வியை இராணுவம் தடுக்கிறது

**ம**லையகத் தமிழர்களின் பிள்ளைகளுக்காக அமைக்கப்படவுள்ள பல்கலைக்கழகத்திற்காக ஒதுக்கப்பட்ட காணியில் ஒரு பகுதியை அரசாங்கம் கைப்பற்றியமைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

"கொட்டகலை ரொசிடா தோட்டத்தில் சுமார் 100 ஏக்கரில் பண்ணை இருந்தது. ஆனால் பல வருடங்களாக அது கைவிடப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக பல்கலைக்கழகம் ஆரம்பிக்க வேண்டும் என்பதே எமது திட்டமாக இருந்தது. பண்ணையை அதன் செயன்முறைப் பயிற்சிக்காக மீள ஆரம்பிக்கவும் திட்டமிட்டிருந்தோம். ஆனால் அரசாங்கம் அதில் பத்து ஏக்கரை இராணுவத்திற்கு வழங்கியுள்ளது" என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெயசங்கரைச் சந்தித்த தொழிலாளர் காங்கிரஸ், இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு ஆதரவளிக்குமாறு கோரியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதாக குற்றம் சுமத்தி, ராஜபக்ச அரசாங்கத்தின் பங்காளியாக இருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அண்மையில் வெளியேறியது.

"அரசாங்கத்தில் இருந்து நாங்கள் பிரிந்து செல்வதற்கு தோட்டப் பகுதிகளில் உள்ள காணிகள் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டமை ஒரு முக்கிய காரணமாகும். இதை கண்டித்து போராட்டம் நடத்தினோம். ஆனால் அரசின் முடிவில் மாற்றம் இல்லை".

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருந்தாலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதான நோக்கம் மக்களைப் பாதுகாப்பதே என அண்மையில் கொட்டகலையில் மலையக ஊடகவியலாளர்களைச் சந்தித்த ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் மீது விசேட அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் நடத்திய தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம்.

"அது தவறான செயல். என்ன கூறினாலும் முறையான விசாரணை இல்லாமல் மக்களை கைது செய்து துன்புறுத்த முடியாது".

மிரிஹானவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு நன்றி தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர், ஜனாதிபதியினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டையும் புறக்கணித்து அரசாங்கத்திற்கு தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியதாக சுட்டிக்காட்டினார்.

தமிழ் முற்போக்கு முன்னணியினால் தலவாக்கலையில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை எனவும் தொண்டமான் தெரிவித்திருந்தார்.

"சமைப்பதற்கு எரிவாயு அல்லது எரிபொருளின்றி இன்று மக்கள் அவதிப்படுகின்றனர். பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. இதற்கு எதிராக எப்படியும் மக்கள் வீதியில் இறங்குவார்கள். இதன் பின்னணியில் எந்த கட்சி இருந்தாலும் நாங்கள் ஆதரவளிப்போம்".

# வடக்கு, கிழக்கின் கோரிக்கைகளையும் "ஆர்ப்பாட்டத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள்"




"**கோ**த்தா வீட்டிற்கு போங்கள்" என்கிற குரல் இலங்கையில் மட்டுமல்ல பல நாடுகளிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. நாட்டில் நிலவும் பிரச்சனைகளுக்கு ஆளும் ராஜபக்ச குடும்ப ஆட்சியால் தீர்வை அளிக்க முடியாத நிலையில் மக்கள் வீதியில் இறங்கி போராடி வருகின்றனர்.

ராஜபக்சக்களின் ஆட்சிக்கு எதிராக நாடு தழுவிய அளவில் தொடர் போராட்டங்களை நடத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட தலைமை இல்லாதது ஒரு பாரிய குறைபாடாகும் என உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

"ஏப்ரல் 3 மற்றும் அதன் பின்னரான நாட்களில், எதிர்ப்பு போராட்டங்களை ஒழுக்கமாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் நடத்துவதற்கு அறிவிக்கப்பட்ட தலைமை இல்லாதை பாரிய குறைபாட்டை நாம் அவதானிக்கின்றோம்".

எவ்வாறாயினும், வடக்கு கிழக்கு மக்களுக்கும் பிரச்சினையாக மாறியுள்ள அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளை உடனடியாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை பதிவு செய்யுமாறு சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொது சேவை ஊழியர் சங்கம் போராட்டக்காரர்களிடம் வலியுறுத்தியுள்ளது.

சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ், ஏப்ரல் 2 ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில், அரசாங்கத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பது அடிப்படை ஜனநாயக உரிமை என்று கூறியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் இறுதியில் மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்தை முற்றுகையிட்டதற்கு எதிரான போராட்டத்தை கட்டுக்கடங்காத வன்முறையான போராட்டமாக மாற்றியமைக்கு, அதற்கு முன்னின்றவர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீது, சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சமூக ஊடகங்கள் வழியாக எவருக்கும் தெரியாத மற்றும் சமூகத்தின் மீது பொறுப்பில்லாத ஒரு குழு அரசாங்கத்திற்கு எதிராக நாடு தழுவிய போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள போதிலும் மூன்று நாட்களுக்கு முன்னர் நடந்த வன்முறைப் போராட்டத்தின் முன்முயற்சி "பொறுப்பற்ற மற்றும் பகுத்தறிவற்ற வன்முறைகளில் ஒன்றாகும், இது அத்தகைய பொறுப்பற்ற மற்றும் செல்வாக்கற்ற அராஜகப் போராட்டங்களால் தவிர்க்க முடியாமல் அனுமதிக்கப்படுகிறது." என சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவரான அன்டன் மார்கஸ் தெரிவித்துள்ளார்.

"அவை மக்களின் உடனடி வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கோரிக்கைகள் அல்ல, அவை உடனடி எரிபொருளுக்கானவை. மின்சாரத்தின் மிக அவசரத் தேவைக்கு எரிவாயு தீர்வாகாது. மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வில்லாத வேறு இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட "கோட்டாவை வீட்டுக்கு அனுப்புவோம்" என்ற கோ'ம் அவற்றில் அடங்கியிருந்தது. எனவே, எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளை உடனடியாக விடுவிக்க அழைப்பு விடுக்கும் பிரபலமான கோ'ங்களுடன் போராட்டங்கள் இன்னும் தேவை".

நாளாந்த இன்னல்களுக்கு மத்தியில் அன்றாட வருமானத்தை ஈட்ட முடியாமல் தவிக்கும் மக்களாக இந்நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் தற்போது அரசாங்க எதிர்ப்பு, வெறுப்பு, அரச எதிர்ப்பு உணர்வுகளை சமூகமயப்படுத்தி வருவதாக தெரிவித்த தொழிற்சங்க தலைவர், இந்த மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு தீர்வுகளை வழங்காத வரையில், அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தால் முன்னெடுக்கப்படும் அரச எதிர்ப்புதான் இது என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

"அந்த மக்களுக்கு அரசாங்கத்திற்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க அடிப்படை உரிமை உள்ளது என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும்".

எனவே, அனைத்து ஒழுங்கற்ற குறைபாடுகள் இருந்தபோதிலும், மார்ச் 31 அன்று நடந்த போராட்டத்தை காவல்துறையும் பாதுகாப்புப் படையினரும் பலத்தைப் பயன்படுத்தி அடக்கினர்.

பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மீதான தாக்குதல் குற்றச்சாட்டுகள் உட்பட போராட்டங்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொது சேவை ஊழியர்களால் கண்டிக்கப்பட்டது.

நாடெங்கும் அரசிற்கு எதிராக தீவிரமான போராட்டங்கள் நடைபெற்று வரும் வேளையில், இதுவரை காலமும் புறக்கணிக்கப்பட்ட வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளும் அபிலாஷைகளும் இதன் போது உள்வாங்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையும் வலுத்து வருகிறது. ஆனால் இது குறித்து தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் தமிழ் கட்சிகள் மௌனமே சாதித்துள்ளன.




# "புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" திரைப்படம் APRIL 9ம் திகதி சனிக்கிழமை கனடா ஸ்காபுறோவில் திரையிடப்படுகின்றது

யாழ் மண்ணில் தொடர்ச்சியாக வாழ்ந்த வண்ணம் கல்வி கற்று கலைகளையும் சினிமாவையும் கற்றுத் தேர்ந்த இயக்குனர், தயாரிப்பாளர்கள், நடிக, நடிகையர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் இணைந்து எமக்களித்த திரைப்படம் "புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" இலங்கையில் தமிழர்கள் வாழும் நகரங்களில் திரையிடப்பெற்ற இந்தத் திரைப்படம் எதிர்வரும் April 9ம் திகதி சனிக்கிழமை கனடாவின் ஸ்காபுறோ நகரில் திரையிடப்படுகின்றது.

3 காட்சிகளாக, யாழ்ப்பாணத் திரையரங்குகளில் வெற்றி நடைபோட்ட இந்த திரைப்படத்தை அனுமதிச் சீட்டுக்களைப் பெற்று.

பார்த்து மகிழுங்கள். அனுமதிச் சீட்டுக்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்: (416) 732-1608, (647) 770-7482, (416) 669-6437

உலக செய்திகள்
World News

# ரஷ்ய படைகளுக்கு விஷ கேக்குகளை விருந்தளித்த உக்ரைன் மக்கள்: 500 வீரர்கள் கவலைக்கிடம்



உக்ரைனின் இசியம் (izyum) மாகாண மக்கள் தங்கள் பகுதியில் உள்ள ரஷ்ய ராணுவ ஆக்கிரமிப்பாளர்களுக்கு விஷம் கலந்த கேக்குகளை விருந்தளித்து வரவேற்றுள்ளனர்.

உக்ரைனில் ரஷ்ய ராணுவம் 5 வாரங்களாக போர் தாக்குதலை நடத்தி வருகிறது, இதில் உக்ரைனின் பெரும்பாலான நகரங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ள நிலையில், சில நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளும் ரஷ்ய ராணுவம் கொண்டுவந்துள்ளன. இந்த விஷ கேக்குகளை உண்ட இரண்டு ரஷ்ய ராணுவ வீரர்கள் உடனடியாக உயிரிழந்த நிலையில் 28 ரஷ்ய ராணுவ வீரர்கள் தீவிர சிகிக்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 500 ரஷ்ய ராணுவ வீரர்கள் இதுவரை கண்டறிய படாத ஆல்கஹால் விஷத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிக்சை பெற்று வருகின்றனர். இதனை உக்ரைன் ராணுவத்தின் பாதுகாப்பு உளவுத்துறை கிச்சகப் பக்கத்தில் வெளியிட்டு இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளனர்.

# சீனாவிடமிருந்து அதிக வட்டிக்கு வாங்கிய கடனால் இலங்கையும் பாக்கிஸ்தானும் திணறுகின்றன



சீனாவிடம் அதிக வட்டிக்கு வாங்கிய கடன்களால் சிக்கிக் கொண்ட இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் தற்போது அரசியல் குழப்பமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பெருந்தொகையை கடனாக தர சீனா முன்வந்த நிலையில் அதனை ஏற்க நேபாளம் மறுத்துள்ளது. மாலத்தீவு, வங்கதேசமும் சீன கடன்களை பெற அச்சம் தெரிவித்துள்ளன. கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு இலங்கை பெரிய அளவில் பொருளாதார பாதிப்பை சந்தித்து வருகிறது. இலங்கைக்கு வந்து கொண்டிருந்த அந்நியச் செலாவணி வரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் நாணயம் பெரிய அளவில் மதிப்பிழந்து விட்டது. இதனால் கடுமையான எரிபொருள் பற்றாக்குறை நிலவுகிறது. நிலக்கரி வாங்க பணம் இல்லாததால் இலங்கையில் தினமும் 12 மணி நேரம் வரையின்வெட்டு அமலில் உள்ளது. பெட்ரோல், டீசல் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. இதனால் அரசுக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

இலங்கையில் மக்கள் போராட்டம் வலுத்துவரும் சூழலில் 26 அமைச்சர்கள் ராஜினாமா செய்தனர். அனைத்துக் கட்சிகளும் இணைந்த தேசிய அரசை அமைக்க வருமாறு எதிர்க்கட்சியினருக்கு அதிபர் கோத்தபய அழைப்பு விடுத்துள்ளார்.

இதுபோலவே மற்றொரு அண்டை நாடான பாகிஸ்தானிலும் அரசியல் குழப்பம் உச்சம் தொட்டுள்ளது. பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லா தீர்மானத்தை நாடாளுமன்ற துணை சபாநாயகர் நிராகரித்தார். இதையடுத்து, இம்ரான் கான் பரிந்துரையை ஏற்று பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை கலைத்து அதிபர் உத்தரவிட்டுள்ளார். எதிர்க்கட்சிகள் இணைந்து புதிய பிரதமரை அறிவித்துள்ளதால் அங்கு பெரும் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானில் பணவீக்கம் அதிகரித்து, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக எண்ணெய், அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. விலைவாசி உயர்வால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், டாலருக்கு நிகரான பாகிஸ்தான் ரூபாய் மதிப்பு 184.79 ஆக உயர்ந்துள்ளது. இதனால் அங்கு கடுமையான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. இருநாடுகளிலும் பொருளாதார நெருக்கடிக்கு மிக முக்கிய காரணம் சீனாவிடம் இருந்து அதிக வட்டிக்கு கடன் வாங்கியது தான் என சொல்லப்படுகிறது. தெற்காசிய நாடுகளுக்கு சீனா வழங்கியுள்ள கடன் அளவு 4.7 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 40 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. பாகிஸ்தானின் வெளிநாட்டுக் கடனில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக சீனாவால் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிராக சீனாவுடன் இம்ரான் காட்டிய நெருக்கம், அவரது தனிச்சையான போக்கு இன்று அந்த நாட்டை பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்க வைத்துள்ளதாக பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன. இலங்கையின் நிலைமை அப்படி தான் உள்ளது. எரிபொருள் மற்றும் கச்சா எண்ணெயை வாங்குவதற்கு அந்நியச் செலாவணி கையிருப்பு இல்லாமல் பொருளாதார சிக்கலை சந்தித்து வருகிறது. வழக்கமாக இலங்கையில் இந்தியா ஆதிக்கம் செலுத்த முயலுவதாக அந்நாட்டு அரசியல்வாதிகள் குற்றம்சாட்டுவது வழக்கம். ஆனால் இந்தமுறை அவர்கள் இந்தியாவைக் குற்றம் சொல்ல வாய்ப்பில்லை. உள்கட்டமைப்பு மேம்பாடு என்ற பெயரில் சீனாவிடமிருந்து அதிக வட்டிக்குக் கடனைப் பெற்று நாட்டை கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் ராஜபக்ச குடும்பத்தினர் கொண்டு வந்து விட்டதாக எதிர்க்கட்சிகள் புகார் கூறுகின்றன. அதனால் தான் ராஜபக்ச குடும்பத்தின் ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் போராடுகின்றனர். வேறு வழியில்லாமல் இலங்கையில் அவசர நிலை அமலில் உள்ளது.

இலங்கை மற்றும் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலையை புரிந்து கொண்டுள்ள நேபாளம் அண்மையில் சீனா பெருந்தொகையை கடனாக தர முன் வந்தபோது அதனை வேண்டாம் என மறுத்து விட்டது. மார்ச் மாத இறுதியில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யியின் காத்மாண்டு வருகை தந்தார். இந்தியாவை தனிமைப்படுத்தி தெற்காசியாவில் பெல்ட்ரோடு திட்டத்தை செயல்படுத்தும் சீனா இதற்காக நேபாளத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியது. சீனாவிடம் இருந்து மானியங்களை மட்டுமே தங்கள் நாடு ஏற்க முடியும் என்றும் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான கடன்களை ஏற்க வாய்ப்பில்லை என்றும் சீன அமைச்சர் வாங்கிடம் நேபாள பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பா கூறினார். வாங் காத்மாண்டு பயணத்தின்போது மிகவும் பிரபலமான பெல்ட் ரோடு முன்முயற்சியில் முக்கிய ஒப்பந்தம் செய்ய சீனா திட்டமிட்டிருந்த நிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படவில்லை.

இதன் பிறகு இந்தியா வந்த நேபாள பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பா இரண்டு ஒப்பந்தங்களை செய்துள்ளார். இந்த ஒப்பந்தங்கள் இருநாட்டு மக்களின் உணவு பரிவர்த்தனை மற்றும் போக்குவரத்து தொடர்பானவை ஆகும். நேபாளம் மட்டுமின்றி மாலத்தீவு, வங்கதேசம் போன்ற நாடுகளும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காக சீனாவிடம் கடன் வாங்குவதை தவிர்க்கும் சூழல் தற்போது உருவாகியுள்ளது.

# கிராமி விருது வென்ற இந்திய – அமெரிக்க பாடகி பால்குனி ஷாவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து



கிராமி விருது வென்ற இந்திய - அமெரிக்க பாடகி பால்குனி ஷாவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இசை உலகின் உயரிய விருதாக கருதப்படும் கிராமி விருது வழங்கும் விழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. 2022-ம் ஆண்டுக்கான 64-வது கிராமி விருது வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் நடந்தது.

இந்த விழாவில், சிறந்த குழந்தைகளுக்கான இசை ஆல்பத்திற்கான கிராமி விருதை, "எ கலர்புல் வோர்ல்டு" ஆல்பத்திற்காக இந்திய - அமெரிக்க பாடகி பால்குனி ஷா பெற்றார்.

சிறந்த குழந்தைகளுக்கான இசை ஆல்பம் பிரிவில் 2 முறை கிராமி விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்ட இந்தியாவை பூர்வீகமாக கொண்ட ஒரே பெண்மணி, பால்குனி ஷா ஆவார். கிராமி விருது வென்ற பாடகி பால்குனி ஷாவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "கிராமி விழாவில் சிறந்த குழந்தைகளுக்கான இசை ஆல்பத்திற்கான விருதை வென்ற பால்குனி ஷாவிற்கு வாழ்த்துகள். எதிர்கால முயற்சிகள் சிறப்பாக அமைய வாழ்த்துகள்" என்று தெரிவித்துள்ளார்.

# பெண்குழந்தைக்காக ஹெலிகாப்டரை வாடகைக்கு எடுத்து வந்த தந்தை



குடும்பத்தில் பிறந்த முதல் பெண் குழந்தைக்காக அதன் தந்தை ஹெலிகாப்டரை வாடகைக்கு எடுத்து அதில் அழைத்து வந்தார்.

மராட்டிய மாநிலம் புனே மாவட்டம் ஷெல்காவோன் பகுதியை சேர்ந்தவர் விஷால் ஜரேகர் வக்கீலாக பணியாற்றி வந்தார். இவருடைய மனைவிக்கு கடந்த ஜனவரி 22-ம் தேதி பெண் குழந்தை ஒன்று பிறந்தது.

பிரசவத்திற்கு பிறகு விஷால் ஜரேகரின் மனைவி, போசாரி பகுதியில் உள்ள தாய் வீட்டில் வசித்து வந்தார்.

அவர்களது குடும்பத்தில் பல தலைமுறைகளாகப் பெண் குழந்தையே இல்லை. முதன்முறையாக இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

இதனை கொண்டாடும் விதமாக ஒரு லட்சம் ரூபாய்க்கு ஹெலிகாப்டரை வாடகைக்கு எடுத்துள்ளனர். போசாரியில் இருந்து ஷெல்ஹாவோனில் உள்ள தனது வீட்டிற்கு ஹெலிகாப்டரில் குழந்தையையும், மனைவியையும் விஷால் ஜரேகர் அழைத்து வந்தார்.

விஷால் ஜரேகரின் இந்த செயலை நேரில் பார்த்தவர்கள் வியப்பு அடைந்தனர். இதைப்பற்றி கேள்விப்பட்டவர்கள் பரபரப்பாக பேசி வருகிறார்கள்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# எத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் யாழ் மக்களின் பிரதிநிதியாக நான் எப்போதும் செயற்படுவேன்

## யாழ் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்

எத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் யாழ்ப்பாண மாவட்ட மக்களின் பிரதிநிதியாக எனது மக்களின் குரலாக நான் எப்போதும் செயற்படுவேன் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அங்கஜன் இராமநாதன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. அந்த செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த பாராளுமன்ற தேர்தலில் மாவட்டத்தில் அதி கூடிய வாக்குகளை ஆணையாக வழங்கிய என் மாவட்ட உறவுகளும், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வாரங்களில் மக்களை நேரில் சந்தித்து அவர்களது நிலைப்பாடுகளை நேரில் கேட்டறிந்து கொண்டேன்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில், மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை நான் மதிக்கின்றேன். எங்கள் உறவுகள் இன்று பசியோடு இருக்கிறார்கள், நீண்ட வரிசையில் நின்று பொறுமையிழந்து இன்று வீதிகளில் போராட ஆரம்பித்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டை முற்றாக முடக்கிய கொரோனா பாதிப்பின் உடனடி எதிர்வினைகளை இப்போதைய பொருளாதார நெருக்கடி நிலையினூடாக நாம் எதிர்கொண்டுள்ளோம். நாட்டில் "இல்லை" என்கிற வார்த்தைகளே இப்போது எங்கும் கேட்கிறது. இது இந்த தேசத்துக்கு மிகவும் சவாலான காலப்பகுதியாகும். இதிலிருந்து நாம் மீண்டேயாக வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியானது அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியாக பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வந்தது. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்குரிய அழுத்தங்களை நாட்டின் சிரேஷ்ட கட்சியாக நாம் பிரயோகித்தே வந்தோம். நாட்டின் எதிர்கட்சி செயல்திறனற்று இருந்த நிலையில் அரசாங்கத்தை வழிப்படுத்த கட்சியாக நாம் பாடுபட்டோம். ஆனால் இப்போது அனைத்தும் எல்லைமீறி விட்டது.

நாட்டின் நிகழ்கால பிரச்சனைக்குரிய தீர்வை மக்கள் கோரி நிற்கிறார்கள். அதனூடாக தமது எதிர்காலத்தை வளர்த்தெடுக்க அவர்கள் விரும்புகிறார்கள். தங்கள் குழந்தைகளோடு போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் நோக்கம் அதுவாகவே உள்ளது.

எனவே, பிரதான எதிர்க்கட்சி செயற்படுவதுபோன்று நாட்டை மீட்டெடுப்பதற்கான தீர்வுகளின்றி, வெறுமனே எதிர்ப்பரசியலை மாத்திரம் மேற்கொள்வதை நாம் விரும்பவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவே நாம் விரும்புகிறோம். அதன்படி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 14 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதாக தீர்மானித்தோம். கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இந்த அறிவிப்பை பாராளுமன்றத்தில் நேற்று நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

எனது யாழ் மாவட்ட உறவுகள், யுத்தத்துக்கு பின்னதான அபிவிருத்திகளையும், வாழ்வாதார மேம்பாட்டையும் எதிர்நோக்கியுள்ள நிலையில் இந்த பொருளாதார நெருக்கடி நிலை அவர்களை மேலும் பாதித்துள்ளது. கடந்த 20 மாதங்களாக மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவராக செயற்பட்டு எம்மக்களுக்கான அபிவிருத்திகளையும், வாழ்வாதார மேம்பாடுகளையும், அரசாங்கத்தின் திட்டங்களை அதிகப்படியாக எமது மண்ணிற்கு பெற்றுக்கொடுத்துள்ளேன். தேசிய பாடசாலைகள், சமுர்த்தி சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள், இளைஞர் மேம்பாட்டு திட்டங்கள், வாழ்வாதார திட்டங்கள், குடிநீர் வசதிகள், விவசாயத்திட்டங்கள் என பல்வேறு பணிகளை மக்களின் ஆதரவோடு நாம் முன்னெடுத்துள்ளோம்.

எங்கள் மக்களுக்கென்று தனியாக கனவுகள் உண்டு. நாட்டின் ஏனைய மாவட்டங்களை விட எம் மக்களின் தேவைகள் தனியானவை. யுத்தத்தால் இழந்தவற்றை மீட்கும் இலக்கோடு அவர்கள் பயணிக்கிறார்கள். கல்வி, தொழில், வர்த்தகம், விளையாட்டு, பிராந்திய தன்னிறைவு பொருளாதாரம் என அவர்களுக்கான தனித்துவமாக கனவுகள் உள்ளன. அந்த மக்களின் கனவுகளை நிறைவேற்றுவதை "என் கனவு யாழ்" எனக்கொண்டு மக்கள் பணி ஆற்றுவதற்கான ஆணையை மக்கள் எனக்கு வழங்கியிருந்தனர். அதனை நிறைவேற்றும் பணியில் நேர்மையோடு நாம் செயற்பட்டோம். தொடர்ந்தும் செயற்படுவோம். "என் கனவு யாழ்" ஒரு நீண்ட பயணம். மக்களின் தேவைகள் ஒவ்வொன்றும் இதற்குள் அடங்கும். அவற்றை நிறைவேற்றுவதே மக்கள் பிரதிநிதியான எனது பொறுப்பு. அந்த பொறுப்புக் கூறலின் அடிப்படையிலும், மனச்சாட்சிக்கு நேர்மையாகவும் என் மாவட்ட உறவுகளோடு எப்போதும் நிற்பேன், அவர்களின் குரலாக செயற்படுவேன் என உறுதிமொழிகிறேன்.



இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து மீண்டுவருவதற்கான திட்டங்களையும் முன்மொழிவுகளையும், ஆதரவுகளையும் கல்வியாளர்கள், பொருளாதார வல்லுநர்கள், தொழில்வல்லுநர்கள், புலம்பெயர் சமூகம் என அனைத்து தரப்பினரும் முன்வைத்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No:001100556)

**Notice of Annual General Meeting-2022**

All MAHAJANANS are invited to attend; and any members wish to propose any MOTIONS, are encouraged to communicate with the secretory prior to May 1, 2022, to have included them in the agenda of the AGM.

Venue: McGregor Community Centre,
2231 Lawrence Ave - E,
Scarborough, Ontario,
M1P2P5.

Time: Saturday May 07,2022 @ 5PM.
Registration at 5:00pm
Call to order at 6:00pm

Agenda items include:

- Presentation of Consolidated Activity Reports and financial statements of the Association
- Election of New Executive committee and the Office bearers.
- Consultations, Decisions and Approval of any motions presented.

All life members are eligible to vote in the any decision-making activities. New members are encouraged to obtain membership prior to May 6, 2022.

All members are encouraged to attend.

Refreshments will be provided.

C. Buvanasandra, President — N. Thanapal, Secretary

March 4, 2022

Patrons:
Dr. Shun Sunder
Mr. S. Subramaniam
Mr. K. Thuraisingam
Mr. W. Ranjan
Mr. T. Iswarakumar
Mr. N. Jeganathan
Mr. N. Santhinathan
Mr. K. Jeyandran

President:
Mr. C.Buvanasandra
president@mahajanan.org
(416) 414-7752

Vice President:
Mr. T.Vijayakumar

Secretary:
Mr. N. Thanapal
secretary@mahajanan.org
(416) 418-9036

Asst. Secretary:
Mrs. R.Sampavalingham

Treasurer:
Mr. M. Sivakumaran
treasurer@mahajanan.org
(416) 269-0282

Asst. Treasurer:
Mr. K. Indukumaran

Committee Members
Ms. R. Ambuja
Mr. S. Arulanantharajah
Mr. K. Balaskanthan
Ms. P. Devaki
Ms. S. Kumuthini
Mr. V.T.Mahalingam
Mr. S.Radheepan
Ms. J. Rajitha
Mr. R. Ravindran
Mr. S.Ravindran
Mr. T. Sakthitharan
Ms. V. Sakunthaladevy
Mr. S. Sasitharan
Mr. S. Sivathasan
Mr. M. Thiruketheesan
Ms. P. Yasotha
Mr. N. Yogathas

33 YEARS
3852 Finch Av. E, Unit G03, Scarborough, ON. M1T 3T9 CANADA
647 873 0706 www. mahajana.ca; www. mahajanan.org

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இருபத்தியொராம் நூற்றாண்டு தந்த ஈழத்தமிழினத்தின் இறைவாக்கினர் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை



மானிட மான்பின் காவலரும் மானிட நேயத்தின் மறு பெயருமான மன்னார் மறைமாவட்டத்தின் வாழ்நாள் ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களின் இறைசாட்சிய வாழ்வுக்கும் திருப்பணிக்கும் இறைபாதம் பணிந்து சிரந்தாழ்த்தி நன்றி கூறுகிறோம் தனியொரு திருச்சபையின் ஆயர் என்பதற்க்கு அப்பால் அவரின் திருப்பணி பரந்து வியாபித்துள்ளது.

கெடூர ஒடுக்குமுறைக்குட்பட்டு சிதைவடைந்து இன அழிப்புக்குடபட்டு நம்பிக்கையிழந்துபோன ஈழத்தழினத்தின் விடிவுக்காக தன்னை முழுமையாக அர்பணித்து அரும்பாடுபட்டு வரும் குரலற்று நலிந்துபோன மக்களின் குரலாகவும் வாழுகின்ற இறைவாக்கின் குரலாகவும் தமிழின விடுதலை இறையயலின் செயற்பாட்டாளராகவும் விளங்கியவர்.

அகில உலக தொடர்புகளை துண்டித்து ஊடகங்களையெல்லாம் இருட்டடிப்பு செய்து நிகழ்தப்பட்ட சாட்சிகளற்ற முள்ளி வாய்கால் தமிழின அழிப்பின் ஒற்றைச்சாட்சியாக நின்று இன இழிப்பிற்கு நீதி வேண்டி உலகின் மனச்சாட்சியைத் தட்யெழுப்பியவரான தனது மகத்தான பணியினை சாவின் இருள் நிறைந்த பூமியில் ஆற்றினார்.

அவ்வகையில் ஆயரவர்கள் ஈழத்தமிழினத்தின் இருள் அகற்ற இறைவால் இவ்வினத்திற்கு வழங்கப்பட்ட மாபெரும் கொடையாகும். இந்த நூற்றண்டில் ஈழத்தமிழினம் பெற்ற மோசே ஆவார்.

வரலாறு பல தலைவர்களை உருவாக்கிறது ஆனால் சில உயரிய மனிதர்கள் வரலாற்றை உருவாக்குகிறார்கள் அவ்வகையில் ஆயரவர்கள் புதிய வரலாற்றினை உருவாக்கி தனிமனித வரலாறாகத்திகழ்கிறார் இவரால் சமகால வரலாறும் ஈழத்தமிழினமும் பெருமையடைகின்றது.

இறைபணி புத்துயிர் பெறுகின்றது ஆண்டவர் இயேசுவின் விடுதலைப் பணி அர்த்தமுள்ளதாகின்றது. பிறப்பும் கல்வியும் ஈழவளநாட்டடின் நெற்றித்திலகமாக விழங்கும் பல வளங்களும் தமிழ் கலை கலாச்சார பண்பாடுகளுடனும் பல் சமய ஒற்றுமையுடனும் தமிழ் தேசிய பற்றுதியுடனும் மிளிரும் தீவாகிய நெடுந்தீவு கிழக்கில் வசித்துவந்த சுதேசிய வைத்தியரான திரு.இராயப்பு அவர்களுக்கும் அவர் இல்லாள் திருமதி அந்தோனியாப்பிள்ளளை அவர்கட்கும் 1940ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம்திகதி பிறந்தார் நான்கு சகோதரர்களையும் ஒருசகோதரியினையும் கொண்ட குடும்பத்தில் நான்காவது மகனாகப்பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியினை நெடுந்தீவு புனித சவேரியார் வித்தியாலயத்திலும் பின்னர் இவருடைய குடும்பத்தினர் செட்டிகுளத்தில் குடியேறியபின்னர் முருங்கன் மகாவித்தியலயத்திலும் இடைநிலை உயர்கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார் இறை அழைத்தலை உனர்து கொண்ட இவர் குருத்துவ உருவாக்க பயிற்சி செறியினை யாழி மாட்டீனர் சிறிய குருமடத்ததிலும் இறையில் மெய்யியல் கல்வியினை அம்பிட்டிய தேசியகுருமடம் மற்றிறும் திருச்சி தூய பவுல் இறையியல் கல்லுரியிலும் நிறைவு செய்து 1967ம் ஆண்டு குருவானவராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார் பின்னர் ரோமபுரியில் உள்ள ஊர்பன் பல்கலைக்கழகத்தில் திருச்சபை நியதிச்சட்ட கோட்பாட்டில் காலாநிதிப்பட்டம் பெற்றார்.

யாழ் மறை மாவட்டத்தல் பல பங்குகளில் பங்கு தந்தையாகவும் கொழும்புத்துறை புனித சவேரியார் பெரிய குருமடத்தின் பேராசிரியராகவும் சிறப்பாக பணியாற்றி 1992ம் ஆண்டு மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

## குரலற்ற மக்களின் குரல்

ஆயர் அவர்கள் ஆயராகப் பொறுப்பேற்ற காலம் தமிழின வரலாற்றில் மிகவும் இடர்மிகுந்ததும் இக்கட்டான காலமுமாகும் வடக்கு கிழக்கு பகுதிகளில் கடும் வன்முறை நிலவிய கலமாக இருந்தது தமிழ்மக்களுடைய போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறியிருந்த சூழலில் மக்கள்மீது போரும் பொருளாதாரதத்தடையும் கட்டவிழ்துவிடப்பட்டு மக்களின் உயிர் உடமை அழிவுகளெல்லாம் உலகிற்கு பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என மூடிமறைக்கப்பட்டு சர்தேசத்தை ஏமாற்றி அரசபயங்கரவாதம் தலைவிரித்தாடிய சூழலில் தனியொருவராக நின்று அனைத்து அழிவுகளையும் அநீதிகளையும் வெளிகிகொண்டு கிட்லரின் கொடூர ஆட்சிக்கெதிராக குரல்கொடுத்து தன்னையே தியாகப்பலியாக்கிய ஜேர்மன் தேச இறையியலாளர் டீயற்றிச் வொண்கொபர் (Dietrich Bongofer) பேன்று நீதியை இடித்துரைத்து உலகிற்கு உண்மையினை உணரவைத்தவர். யோவான் நற்செய்தி அதிகாரம்10 11ம் திருவார்த்தை கூறுவது போல நல்ல ஆயன் நானே நல்ல ஆயர் தன் ஆடுகளுக்காக உயிரைக் கொடுப்பார் எனனும் திருவார்த்தைகளின் இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

## மக்களின் துன்னபத்திலும் வேதனையிலும் பங்கெடுத்த மக்கள் ஆயர்

எங்கெல்லாம் மக்கள் துன்புற்றார்களோ அங்கெல்லர் உடன் நேரடியாகச் சென்று மக்களின் துன்பங்களில் பங்கெடுதத்து அவர்களின் துயர் துடைத்தவர் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை இடித்துரைத்தார்.

2009ல் வன்னியில் திட்டமிட்டு மானிடப்பேரவலம் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் மக்கள் ஏதிலிகளாய் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருக்கையில் கிநொச்சசி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வெளியில் இருந்து உள்நூளைய அரசினால் அனைவருக்கும் தடை விதிக்கப்பட்டிருந்த சூழலில் இடம் பெயர்ந்த மக்கள் புதுக்குடியிருப்பிலே முடக்கப்பட்டு செல்வீச்சுக்களாலும் விமானத்தாக்குதல்களாலும் மக்கள் தொடர்து வகைதொயின்றி கொல்லப்பட்டுக்கொண்டிருந்த சூழலில் ஆயர் துணிவுடன் தன்னுயிரை துச்சமென மதித்து...

அன்று புதுக்குடியிருப்பு பகுதிக்கு சென்றுமக்களை சந்தித்து ஆறுதல் படுத்தி வந்தவர் பின்னர் இம் மக்களுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்தவும் போர்ப் பிரதேசங்களில் சர்வதேசக் கண்காணிப்புடன் மோதல் தவிர்பு வலயங்களை ஏற்படுத்தி மக்களை பாதுகாக்க வெளிநாட்டு துர்தரங்களையும் சர்வதேச நாடுகளையும் இடையறாது தொடர்பு கொண்டு கடும் முயற்ச்சி எடுத்தவர். இறுதிப்போரின் பின்னர் இடம் பெயர்தவர்கள் காயமடைந்து மருத்துவமனைளில் அனுமதிக்கப்பட்டவர்கள் அனாதரவாய் நின்றோர் மீது அதிக கரிசகை கொண்டு பணியாற்றியவர்ச சிறப்பாக அனாதரவாய் இருந்த முதியோர் சிறார்கள் போன்றோரைப் பொறுப்பேற்று அவர்களுக்கான இல்லங்களை உருவாக்கி அவர்களைச் சிறப்பாக பராமரித்தார்.

போரினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமாவர்கள் மீது சிறப்பு கவனம் எடுத்து அவர்களை பராமரித்து சிகிற்சையளித்து குணப்படுத்த வவுனியாவில் கிளறீசியன் சபையினரின் உதவியுடன் வரோட் எனும் மிகப்பெரிய தொண்டு நிறுவனத்தினை நிறுவி பல்லாரிரக்கணக்கானோர் பயன் பெற வழிசமைத்தார்.

முள்ளிவாக்காலில் பெரும் இனவழிப்பு நிகழ்தப்பட்டு உரிமைப்போராட்டம் நசுக்கப்பட்டு விட்தாவுவம் தழிழினத்தின் தலைமைத்துவம் வெறுமைப்படுத்தப்பட்டுவிட்டது என்கின்ற சூழலில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மனித உரிமைகள் மீறல்களுக்காவும் குரல் காடுத்து செயலாற்ற வடக்கு கிழக்கு வாழ் சமுகசெயற்பாட்டாளர்கள் துறைசார்வல்லுனர்கள் கல்வியலாளர்கள் மனித உரிமைகள் ஆர்வலர்கள் ஆகியோரை ஒன்று திரட்டி 2012ம் ஆண்டு தமிழ் சிவில் சமுக அமையத்தினை ஆரம்பித்தார் இவ் அமைப்பே போருக்கு பின்னர் வடக்கு கிழக்கை மையமாகக் கொண்டு முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் மைய சுயாதினா சிவில் அமைப்பாகும்.

எல்லா நெருக்கடிகள் அச்சுறுத்தல்கள் மத்தில் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அழிப்புகளுக்கு நீதிவேண்டி சர்வதேசத்தின் மனச்சாட்சிகளை தட்டி. நிகழ்ந்த இறுதி போரில் ஒரலட்சத்து நாற்பத்தாறாயிரத்து அறுநூற்றி எழுபத்தி ஒன்பது பொதுமக்கள் கொலைசெய்யப்பட்டோ அல்லது காணாமலாக்கப்பட்டோ உள்ளனர் என்னும் எண்ணிக்கையிளை சரியான ஆதாரங்களுடனும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் சாட்சியத்தோடும் முதல் முதலில் முன்வைத்து ஆதாரப்படுத்தியவர் முள்ளிவாக்கால் இன அழிப்பபுக்கு பின்னரான கட்டமைக்கப்பட் இனவழிப்பு நடத்தப்பட்டு வந்த காலப்பகுதில் 2013ம் ஆண்டு ல் 131 இறைபணியளர்களுடன் ஒப்பமிட்டு கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிரா கடந்த வரும் நிறைவேற்றிய ஐ.நா சபைத்தீர்மானம் கானால் நீராகி விட்டது 2013 ம் ஆண்டுத் தீர்மானத்தினை வலுவுள்ளதாக்கும் படி ஐ.நா சபைக்கு கடிதம் அனுப்பினார். இவ்வியடம் இலங்கை அரசுக்கு மிகப்பொரும் பூகம்பமாக மாறியது எனினும் அவர் தனது நீதியின் பயணத்தில் பின் வாங்கவில்லை.

“பேசத்தெரியாதவர்கள் சார்பாக பேசு திக்கெற்றவர்கள் எல்லோருடைய உரிமைகளுக்காகவும் போராடு அவர்கள் சார்பாகப்பேசி நியாயமான தீர்ப்பை வழங்கு எளியோருக்கும் வறியோருக்கும் நீதி வழங்கு“ (நீதிமொழிகள்.31:8-9) எனும் மறைவார்த்தைகளை வாழ்வின் சாட்சியமாக்கிச் செயற்பட்டார்.

## வாழும் இறைவாக்கின் குரலாய் வாழ்ந்தவர்

இறைவாக்கினர் என்பவர்கள் இறைவனின் நாவாகச்செயற்படுகின்றவர்கள் இவர்கள் மானிட மான்பு சிதைக்கப்பட்டு மனிதம் மழுங்கடிக்கப்பட்டு போகின்ற சூழலில் இறைவனின் பிரதிநிதியாக அவரின் நாவாக செயற்பட்டு தீமையையும் அநீதியையும் இடித்துரைத்து மனிதம் மலர நீதி எழுற்சியுற அச்சறுத்தல்கள் ஆபத்துக்களை பொருட்படுத்தாது தீவிரமாகச் செயற்படுகின்றவர்களாவர். திருமறையில் படைப்பின் வரலாற்றில் நாம் காணும் கடவுள் அழிக்கப்படுபவர்கள் சார்பில் குரல் எழுப்புவபராக காாணப்படுகிறார்.

ஆபேல் அனியாயமாக கொல்லப்பட்டபோது அவன் சார்பாக கடவுள் குரலெழுப்புகிறவராக (தொ.நூல்.4:9) ஒடுக்குலுக்கும் அதனால் ஏற்படும் அழிவின் அவலக்குரல் கடவுள் சமுகத்தில் எழும் அதனுடன் இணைந்து கடவுள் நீதிகேட்பவராக உள்ளார் அது இறைவனின் நீதிக்குரலாக மாறுகிறது (தொ.நூல்.4:10).

அவ்வகையில் கடந்த மூன்று தசாப்தங்களாக ஆயர் அவர்கள் தனியொருவராக நின்று இருட்டடிக்கப்பட்ட சூழலில் இறைவனின் அழைப்புக்கு தன்னை அர்பணிர்து விடுதலைக்காக அதிகாரபலமும் வல்லமையும் பொருந்திய பார்வோனிற்கு முன்னால் நின்று கடவுளின் பெயரால் விடுதலை முளக்கமிட்ட கொடுங்கோல் அதிகாரத்துக்கு சவால் விட்ட விடுதலைப்பயண மோசேயைப்போல் 1980களில் எல்சல்வடோரில் இராணுவ ஒடுக்கு முறைக்கு எதிராக இறைவாக்ககின் குரலாக ஒலித்த பேராயர் ஒஸ்கார் றொமேராவைப்போல் (OscarRomero) இறைவாக்கின் இடையறாத தொடர்சியான இறைவாக்குப்பணியாற்றி மானிட விழுமியத்தின் நீதியின் காவலராக இனமான ஏந்தலாய் ஒடுக்குகின்ற அந்தகார எதோச்சாதிகார சக்திகளுக்கு சிம்ம சொற்பனமாக செற்பட்டார்.

## செயற்பாட்டு மைய விடுதலை இறையியலாளராக

திருமறையிலே நாம்காணும் கடவுள் விடுதலையின் கடவுளாக ஒடுக்கப்படுவோரின் கடவுளாக இருக்கிறார் கடவுள் எப்பொழுதும் உரிமையிழந்தவர்களின் சிறுபான்மையினரின் பிரதிநிதியாக அவர்களின் துன்பங்களில் பங்கெடுக்கின்றவராகவே காணப்படுகிறார் இவ்வகையில் விடுதலைப்பயணத்திலும் சரி திருமறையிலும் சரி கடவுளின் வெளிப்பாடு புரிந்துணர்வு இவ்வாறானதாகவே இருக்கின்றது. இவ்வகையிலே உலகத் திருச்சபை வரலாற்றிலே முக்கிய எழிற்சியாக 1960 களில் இலத்தின் அமெரிக்க நாடுகளில் தோற்றம் பெற்ற விடுதலை இறையியல் முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனையாகும் விடுதலை இறையியலின் ஆரம்பகர்தாவான அருட்பணி. குஸ்ராவோகுட்டரியஸ் (Gustavo Gutierrez) அவர்கள் விடுதலை இறையியலின் மையக்கருத்தாக முன்வைப்பது யாதெனில் செயற்படும் பற்றுதிமைய அர்பணிப்புடனான அநீதிக்கு எதிரான போராட்டம் இறையாட்சி மைய நீதியான சமுகம் நோக்கியது என்பதாகும் இவ்வகையில் இம்மண்ணிலிருந்து இவ்விறையியலுக்கு செயல்வடிவம் கொடுப்பவராக இறையாட்சி திருமறைசார் பற்றுதிமையத்திலிருந்து ஈழத்தமிழினத்தின் வாழ்வில் சூழல் சார் ஜதார்த்த விடுதலை இறையியலை செயற்படுத்தி இதனூடாக தமிழின விடுதலைக்கு வாழ்வாலும் செயலாலும் அரும்பாடுபட்ட்டார்.

இவ்வாறாக பல்வேறு வழிகளில் கருவறுக்கப்பட்ட ஈழத்தமிழினத்தின் விடுலைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் தன்னை முழுமையாக அர்பணித்து திருப்பணியாற்றிய ஆயர் அவர்களின் இழப்பு என்பது என்றும் ஈடு செய்யப்பட முடியாதவொன்றாகும் வரலாற்றில் பல அழிப்புக்களுக்கும் இழப்புக்களுக்கும் முகங்கொடுத்த தமிழினத்தின் ஒரே ஒரு அறுதலாகவும் நம்பிக்கையாகவும் விளங்கிய தன்னுடைய தலைமகனை விடுதலைக்கு வழிகாட்டிய மோசேயை எவ்விடர் வந்தபோதும் அஞ்சாமல் இன விடியலக்காய் குருசோத்திரத்தில் இருந்து அறப்போராடிய பீஸ்மரை எவ்வேளைகளிலும் ஆறுதல் தந்த பிதமகனை மானிட விடியலுக்காய் எந்தவித எதோச்சாதிகாரத்துக்கும் தலை வணங்காது நேர்மையுடனும் நெஞ்சுரத்துடனும் சாத்வீகப்பாதையில் போராடிய மகாத்மாவை ஈழத்தமிழினம் இழந்து பெருந்துயரத்தில் ஆழ்ந்து கிடக்கிறது மே 18 2009 பின்னர் உலகத் தமிழினத்தின் உள்ளங்களில் பேரிடியாய் விழுந்தநாள் 2021 ஏப்பிரல்.01. இந்த நிகழ்வும் இரண்டாது முள்வாய்க்கால் பெருந்துன்பமாய் தமிழ்பேசும் நல்லுகத்தை வாட்டுகிறது யாரொடு நோவோம் யாரக்கெடுத்து உரைப்போம் என எனவும் இதனால் எங்கள் இதயம் தளர்ந்து போயிற்று எங்கள் கண்கள் இருண்டு போயின என உலத் தமிழினம் அங்கலாய்த்து நிக்கிறது.

எனவே நாம் ஒன்று பட்டு ஆயர் காட்டிய வழியில் நின்று அவரின் பணியை தொடர்வே ஆயர்அவர்களுக்கு செய்யும் உண்மையான இதய பூர்வமான அஞ்சலியாகும்.

**அருட்பணி.கந்தையா ஜெகதாஸ்**
**மெதடிஸ்த திருச்சபை**
**சின்ன ஊறணி மட்டக்களப்பு**

# மீட்பரைத் தேடும் மக்கள்

- சிவா பரமேஸ்வரன் & கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி

இது சமூக ஊடகங்களின் காலம். எனவே எதையும் மறைக்க முடியாது, அடக்கி ஒடுக்க முடியாது. பல நாட்டு உச்சநீதிமன்றங்கள் சமூக ஊடகங்களில் வந்துள்ள காணொளிகளையும் புகைப்படங்களையும் சாட்சிகளாக ஏற்றுக்கொண்டுள்ளன.

வீட்டிற்குச் செல்லுங்கள் கோட்டா" என்கிற ஹேஸ்ஹ்டாக் டிவிட்டரின் டிரெண்ட் ஆக ஆரம்பித்தவுடன் அது தீயாகப் பற்றிக்கொண்டது. உள்நாட்டில் மட்டுமல்ல அந்த தீ வெளிநாடுகளுக்கும் பரவியது. அந்த தீ இன்னும் அணையவில்லை, அணைக்கப்படும் என்றும் தோன்றவில்லை.

போ, போ என்று சமூக ஊடகங்களில் கோட்டாவையும் அவரது சகோதரர்களையும் சபிக்கும் விதமாக மக்கள் கழுவுக்கழுவி ஊற்றுகின்றனர். "ஆனால் அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா" என்று அரசரும் அலரி மாளிகையும் அதை துடைத்திறிந்துவிட்டு கவலைப்படாமல் உள்ளனர்.




இது தனிநபர் ஒருவருக்கு எதிரான போராட்டம் அல்ல ஒரு குடும்பத்திற்கு எதிரான போராட்டம். நாட்டை சொந்த நிறுவனம் போல் நடத்தும் ராஜபக்ஷக்களுக்கு எதிரான கோபாவேசம். இதில் பதவி விலகல் என்று ஒரு நாடகம். துப்பியதை மீண்டும் வாயிற்குள் போட்டுக்கொள்வது போல் மீண்டும் நால்வருக்குப் பதவி. அதில் ஒருவர், ஒரே நாளில் பதவி வேண்டாம் என்று ஓடிவிட்டார். மற்றொரு நன்றியுள்ள மற்றும் எஜமானருக்கு விசுவாசமாக அவர் போடும் எலும்புத் துண்டிற்காக குறைக்கும் பைரவர் போன்று, ஒரு அமைச்சர், "எக்காரணத்திற்காகவும் ஜனாதிபதி பதவி விலக மாட்டார்" என்று ஊளையிடுகிறார். மஹிந்த வீட்டில் நாயாக இருப்பதில் பெருமைப்படுகிறேன் என்று கூறிய மெர்வின் சில்வாவை விட ஜொன்ஸ்டன் ஃபெர்ணாண்டோவின் வாலாட்டும் விசுவாசம் ஒருபடி மேலே சென்றுள்ளது.

ராஜபக்சக்களின் ஆட்சி இவ்வளவு விரைவாக இவ்வளவு கேவலமாக மக்களால் வெறுக்கப்படும் நிலை ஏற்படும் என்று எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

ஈவு இரக்கமற்ற வகையில் மனிதாபிமானமற்ற முறையில் கையாளப்பட்ட உள்நாட்டு யுத்த வெற்றியை ஏதோ வெளிநாடொன்றுடன் சண்டையிட்டு வெற்றிவாகை சூடிக்கொண்டது போலப் பாற்சோறு சமைத்து பட்டாசு கொளுத்திக் கொண்டாடி மகிழ்ந்து கட்அவுட் வைத்து மகாராசாவே நீவிர் நீடூழி வாழ்க என்று வாழ்த்திய அதே கூட்டம் 2015 இல் அதே மகாராசாவை தேர்தலில் தோல்வியுறச் செய்து வீட்டுக்கு அனுப்பியது.

"நல்லாட்சி என்று கூறி" என்ன நோக்கத்திற்காக ஆட்சி மாற்றம் நடைபெற்றதோ அந்த நல்லாட்சியை நாட்டைவிட நாற்காலியே முக்கியம் என்று சிந்தித்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிய காரணத்தால் 2019இல் நல்லாட்சி அரசாங்கம் மீது ஏற்பட்ட காழ்ப்புணர்வினாலும் இதன் பின்னர் ஏற்பட்ட குண்டு வெடிப்பினாலும் ராஜபக்சக்களால் மாத்திரமே நாட்டைக் காப்பாற்ற முடியும் என்றும் இஸ்லாமியத் தீவிரவாதம் நாட்டை விழுங்கிவிடும் என்ற மாயை உருவாக்கப்பட்டதாலும் அறுதிப் பெரும்பான்மையுடன் ராஜபக்சக்களால் மீண்டும் ஆட்சிபீடம் ஏறமுடிந்தது.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்கிவிடும் என்ற ஒரு பிம்பம் ஏற்படுத்தப்பட்டதன் விளைவே ராஜபக்சேக்களே நாட்டின் மீட்பர் என்ற மாயத்தோற்றம் மக்கள் மனதில் குடிகொண்டிருந்தது. அந்த மாயத்தோற்றமே ராஜபக்சேக்கள் மீண்டும் மகுடம் சூட்டிக்கொள்ள வழிவகுத்தது. அதேவேளை கோட்டும் சூட்டும் போட்டு வெயிலிலும் திரியும் ரணில், யானை பலம் கொண்டிருந்த ஐக்கியமில்லாத தேசியக் கட்சியை சுய லாபத்திற்காக பலிகடா ஆக்கினார்.



இரண்டாம் ராஜபக்ச ஆட்சியைக் கொண்டுவருவதில் பெரும்பான்மைச் சிங்கள மக்களது வாக்குகளே பிரதான காரணியாகச் செயற்பட்டது என்பதை "நான் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி" என்று போர்க்குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள கோட்டாபய ராஜபக்ச வெளிப்படையாகக் கூறியதான் மூலம் நிரூபணமாகியது. இனவாதத்துடன் இணைந்து நாட்டில் "வியத் மக" என அழைக்கப்பட்ட சிங்கள பௌத்த கற்றோர் குழாத்தின் வழிகாட்டலும் பௌத்த விகாரைகளை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட சிறுபான்மை முஸ்லிம் மற்றும் தமிழர்களுக்கு எதிரான அரசியல் பிரசார நடவடிக்கைகளும் மக்களின் வாக்குகளை அவருக்கு அள்ளிக் குவித்தன.

இத்தாலி போன்ற மேற்குலக நாடுகளில் வாழும் சிங்கள மக்கள் சார்டட் விமானங்களைப் பதிவு செய்து வாக்களிப்பதற்காக இலங்கைக்கு வந்தனர். அசைக்க முடியாத ஒரு பெரும்பான்மையுடன் சிறுபான்மையினக் கட்சிகளின் பேரம் பேசல்களின் அழுத்தங்கள் முற்றிலும் இன்றி தனிச் சிங்கள ஆட்சியாக அந்த ஆட்சி அமைந்திருந்தது. மிகவும் பலம் பொருந்திய இந்த அரசாங்கத்தை அடுத்துவரும் தசாப்தங்களுக்கு அசைக்கவே முடியாது என்று வெகுசன அபிப்பிராயம் நிலவியது. ஆனால் அத்தனையும் தவிடுபொடியாகி இரண்டே ஆண்டுகளில் எந்த மக்கள் சிம்மாசனத்தில் இருத்தினார்களோ அவர்களே இப்போது வீட்டுக்குப் போ என்கிறார்கள் வேறுசிலர் வீட்டுக்கு அல்ல சிறைக்கு அனுப்ப வேண்டும் என்கிறார்கள் மொத்த திருடர் கூட்டத்தையும் பிடிக்க வேண்டும் என்கிறார்கள். அரசாங்கமும் ஜனாதிபதியும் கூண்டோடு ராஜினாமா செய்யவேண்டும் என்கின்றனர். ராஜபக்ஷ்ர்களால் வீடுகளில் இருக்க முடியவில்லை. அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தி ஊரடங்குச் சட்டமிட்டு சமூக ஊடகங்களைத் தடை செய்து ஏற்பட்டுவரும் எதிர்ப்பலையைச் சமாளிக்க ராஜபக்ச அரசு முயன்றாலும் மக்கள் அலை வேகமாக வீசிவருகிறது.

எந்த ஒரு அரசியல் பின்புலங்களும் இன்றி மக்கள் தாமாகவே கைக்குழந்தைகளுடன் வீதியில் இறங்கி எதிர்ப்பு கோஷம் இடுவதைக்காண முடிகிறது. கைது செய்யப்பட்டவர்களை மிக்க நூற்றுக் கணக்கில் வக்கீல்கள் நீதிமன்றங்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் இலவசமாக ஆஜராகின்றனர். இது முன்பொரு போதும் காண இயலாத ஒன்று. அரசியல் வாதிகளால் வெளியில் இறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வீடுகளில் இருக்க முடியாதுள்ளது. அவ்வாறு நிலைமை பாதகமாக மாறுவதைக் கண்டு ராஜபக்ச



குடும்ப அங்கத்தவர்களும் அவரது தொண்டரடிப்பொடிகளும் குடும்பத்துடன் வெளிநாடுகளுக்கு விமானம் ஏறுவதைக் காண முடிகிறது.

அவுஸ்திரேலியா நியூஸிலாந்து இத்தாலி இங்கிலாந்து அமெரிக்க போன்ற நாடுகளில் வாழும் இலங்கையர்கள் ராஜபக்சேகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். முன்னர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகையில் அது பிரிவினை வாதம், விடுதலைப் புலிகளின் தூண்டுதல், நாட்டை துண்டாடும் முயற்சி, வெளிநாட்டுச் சதி என்று இதே ஆட்சியாளர்கள் கூரைமேல் ஏறிக் கூவினர்.

அத்தோடு அமைச்சரவை ராஜினாமா செய்தது. ஜனாதிபதியோ பிரதமரோ ராஜினாமாவைப் பற்றிப் பேசவில்லை. மாறாக சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தூண்டில் வீசப்பட்டது. ஆனால் அதற்குச் சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை. அரசாங்க அலுவல்களைக் கவனிக்க நான்கு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். ஆயினும் நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட அலி சப்ரி 24 மணிநேரத்தில் தமது பதவியை இராஜினாமா செய்திருக்கிறார். நிதியமைச்சின் செயலாளரும் மத்திய வங்கி ஆளுநரும் பதவி துறந்துள்ளனர். இந்தப் பதவிகளை நிரப்ப சிலரது பெயர்கள் அடிபடுகின்றன. இப்போதைய நெருக்கடி நிலையில் மக்கள் முழுமையான ஆட்சி மாற்றத்தையே விரும்புவது தெரிகிறது.

ஆனால் ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ பதவி துறப்பது இலகுவில் நிகழக் கூடியதல்ல. சிலவேளை அது இப்போதுள்ள பிரச்சினையை இன்னமும் மோசமாக்கக் கூடும். மாறாக அவ்விருவதும் தமது கதிரைகளைத் தக்க வைத்துக்கொண்டு இப்போது தமக்கு எதிராக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலை சமாளித்து விட்டால் நிலைமையைத் தமக்கு சாதகமாக மாற்றி விடலாம் என நம்புவதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும் நிதியமைச்சர் மத்திய வங்கி ஆளுநர், நிதியமைச்சுச் செயலாளர் ஆகிய மூன்று பதவிகளும் வெற்றிடமாகியுள்ளன. இந்த மூன்று பதவிகளுக்கும் நியமிக்கப்பட உள்ளவர்கள் எவராயினும் பொதுநிதியியல் பொருளியல் முகாமைத்துவம் சர்வதேச பொருளியல் கணக்கியல் போன்ற துறைகளில் பாண்டித்தியமும் அனுபவமும் மிக்கவர்களாக இருத்தல் அவசியம்.



ஏழு மூளைகளைக் கொண்ட ஒருவராக புகழப்பட்ட பசில் ராஜபக்ஷ போன்ற ஒரு அரைவேக்காட்டை நிதியமைச்சராக நியமிப்பதன் மூலம் இலங்கை தனது இயலாமையை-யே மீண்டும் வெளிப்படுத்தக் கூடும். அத்தகைய ஒரு திறமைசாலி பாராளுமன்றத்திலும் தேடிப்பிடிக்க முடியாதிருக்கக் கூடும். இத்தகைய சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கே பட்டியல் எம் பி பதவிகள் உள்ளன. அவற்றைப்பயன்படுத்தி அனுபவமுள்ள பொருத்தமான ஒருவரை அப்பதவிக்கு நியமிக்கலாம். அலிசப்ரி ஒரு சிறந்த வக்கீல் ஆனால் நிதியமைச்சராக பொருத்தமானவரல்ல.

ஒரு அவசர சத்திரசிகிச்சைப்பிரிவு எவ்வாறு இயங்குமோ அவ்வாறு நாட்டின் பொருளாதாரத்தை இயக்கிச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். பொருளாதார நெருக்கடிகளோடு அரசியல் நெருக்கடிகளும் சேர்ந்து கொள்ளும் போது நிச்சயமற்ற தன்மைகள் மேலும் தீவிரமடைந்து நாட்டை இலகுவில் மீளமுடியாத பாரிய வீழ்ச்சிக்குள் இட்டுச்சென்று விடும்.

எந்த மக்களின் வலிகளுக்காக எந்த மக்கள் இப்போது மக்கள் விதியில் இறங்கிப்போராடுகிறார்களோ அந்த வலிகள் ராஜபக்ச குடும்பமும் அவர்களது வால்களும் பதவி நீக்கப்படுவதன் மூலம் மாத்திரம் தீர்ந்துவிடாது. இப்போதைய நிலையில் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறக் கூடாது. மாறாக நாட்டில் இருந்து அவர்கள் செய்யக் கூடாததை செய்தமைக்காகவும் செய்யவேண்டியதைச் செய்யாமல் விட்டமைக்காகவும் பொறுப்புக் கூற நிர்ப்பந்திக்கப்பட வேண்டும்.

ஆட்சி மாற்றம் ஒன்றுக்காகத் தேர்தலுக்கு செல்வது மிகவும் செலவு கூடிய ஒன்று. இப்போதைய நிதிநிலைமையில் அது பொருத்தமானதாகவும் இருக்காது. தொடர்ந்து கடன்களை நம்பி வாழ்க்கை நடத்தும் இலங்கையின் பொருளாதாரத்தை வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களால் தூக்கிநிறுத்த முடியும். ஆனால் இங்கு வாழும் இனவாதிகள் புலம்பெயர்ந்து வாழும் மக்களை பயங்கரவாதிகள் என அர்த்தம் கற்பிக்கின்றனர். எனவே வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் பணமோ முஸ்லிம்களின் பணமோ நாட்டிற்குள் முதலீடாக வருவதை பயங்கரவாத பணமாகப் பார்க்க இந்த நெருக்கடியான நிலையிலும் முயல்கின்றனர்.

இலங்கையை இப்போதைய நிதி நெருக்கடியிலிருந்து காப்பாற்ற இந்தியாவால் முடியும். 10 தொடக்கம் 15 பில்லியன் டொலர்கள் என்பது சுமார் 600 பில்லியன் டொலர் ஒதுக்குகளைக் கொண்டுள்ள இந்தியாவுக்குப் பெரிய தொகை அல்ல. ஆனால் அது அவ்வளவ இலகுவான முடிவாக இருக்காது.

எனினும், ஒரு முக்கிய விஷயத்தை மனதில் கொள்ளவேண்டும். இப்போதுள்ள அரசு பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டம் செய்யும் பெரும்பான்மை சிங்கள மக்கள், வரும் காலத்தில் தமிழர்களுக்கு சர்வதேச அனுசரணை-யுடன் அரசியல் தீர்வுவொன்றை எட்ட முயற்சிகள் எடுக்கப்படும் சமயத்தில், அப்படி எந்த தீர்வும் வழங்கக் கூடாது என்று இதைவிடத் தீவிரமான ஆர்ப்பாட்டத்தில் இறங்குவார்கள் என்பது மறுக்க முடியாத கசப்பான உண்மை.




இப்போது நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அந்த மீட்பர் யார் என்பதே இப்போதுள்ள மிகப்பெரிய கேள்வி.

*கட்டுரையாளர்கள் பற்றி:*
*சிவா பரமேஸ்வரன்: மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்*
*கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி: பேராசிரியர். பொருளாதார பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.*



# உக்ரைன் சிறுமிகள் யுத்தகளத்தில் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டார்களா?

- குரு அரவிந்தன்

**தொ**ழில்நுட்ப வளர்ச்சிகாரணமாக ரஸ்யா-உக்ரைன் யுத்த களத்து நிருபர்களை விட அதிகளவு யுத்தமுனை செய்திகளை மக்களும், யுத்தத்தில் பங்கு கொள்ளும் போர்வீரர்களுமே நேரடியாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சாமுவேல் பென்ட் என்ற ஆய்வாளர் தெரிவித்தார். செல்போன்கள் மட்டுமல்ல, ரோன்களும் களத்தில் நடக்கும் சம்பவங்களை உடனுக்குடன் வீடியோ படங்களாக்கி அனுப்பு கின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். கனடாவில் இருந்தும் தனிப்பட்டவர்கள் ரோன்கள் கொடுத்து உதவியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு வாரத்தில் முடித்து விடவேண்டும் என்ற எண்ணத்தில்தான் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பை ரஸ்யா தொடங்கியது. ஆனால் தவிர்க்க முடியாத சில காரணங்களால் இது தள்ளிப் போய்விட்டது. 40 நாட்களுக்கும் மேலாகிவிட்ட நிலையில், உக்ரைன் பெரும் அழிவைச் சந்தித்தாலும், ரஸ்யாவின் எண்ணம் இதுவரை நிறைவேறவில்லை. ஐ.நாவின் எதிர்ப்பு, உலகநாடுகளின் எதிர்ப்பு, நேட்டோ நாடுகளின் உக்ரைனுக்கான ஆதரவு போன்ற காரணிகள் இந்த யுத்தத்தை இழுபறியாக்கிவிட்டன. உக்ரைன் இராணுவமும் கிடைத்த ஆயதங்களைக் கொண்டு ஆங்காங்கே எதிர்த்துத் தாக்கிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் ஐரோப்பிய நாடுகளின் முழு ஒத்துழைப்பும் கிடைக்காததற்குக் காரணம், அனேகமான நாடுகள் எண்ணெய், எரிவாயு போன்ற எரிபொருட்களுக்கு ரஸ்யாவை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால், ரஸ்யாவைப் பகைத்துக் கொள்ள அவை விரும்பவில்லை.

ஐ.நா. பொதுச்சபை மீண்டும் கூட்டப்பட்டு ரஸ்ய-உக்ரைன் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொதுச்சபை வாக்கெடுப்பின் போது 140 நாடுகள் ஆதரவாகவும், 5 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. எதிராக வாக்களித்த நாடுகளில் ரஸ்யா, சிரியா, பெலாரஸ், வடகொரியா, எரித்ரியா ஆகிய நாடுகள் அடங்குகின்றன. 38 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கு பற்றவில்லை. பங்கு பற்றாத நாடுகளில் சீனா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளும் இருக்கின்றன.

ரஸ்யா உளரீதியான அணுகுமுறையை ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருக்கும் தனது இராணுவத்தினரிடம் மேற்கொள்வது இப்போது தெரிய வந்துள்ளது. 2ஆம் உலகயுத்தத்தின்போது ரஸ்யா மீது படை எடுத்த கிட்லரின் நாஜிப்படைகள், கடும் குளிலுக்குள் அகப்பட்டுத் தறுமாறி, இறுதியில் மே மாதம் 9 ஆம் திகதி ரஸ்ய படைகளிடம் சரணடைந்தன. மே மாதம் 9 ஆம் திகதியை வெற்றிவிழாவாக இன்னும் ரஸ்யாவில் கொண்டாடப் படுகின்றது. எனவேதான் மேமாதம் 9 ஆம் திகதிக்கு முன்னபாக உக்ரைனைக் கைப்பற்றிவிட வேண்டும் என்று ரஸ்யா நினைத்தது. உக்ரைன் இராணுவத்திடம் சரணடைந்த ரஸ்ய படை வீரர்களைத் துருவித் துருவி விசாரித்த போது, அவர்களிடம் இருந்து இந்தத் தகவல் வெளிவந்தது.



ரஸ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்த அமெரிக்கா இப்போது, ரஸ்யா உக்ரைன் மீது இரசாயனத் தாக்குதலை நடத்தலாம் என்றும் கூறுவது, உலக நாடுகளின் கவனத்தைத் திசைதிருப்பும் அரசியல் தந்திரம் என்று ரஸ்யாவின் அதிபர் மாளிகைச் செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் தெரிவித்தார். உக்ரைனில் உள்ள லுஹான்ஸக் பிராந்தியத்தையும், டொனெட்ஸ்க் பிராந்தியத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபின் இரண்டையும் ஒன்றாக இணைக்கப்போவதாக ரஸ்யாவில் இருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே சுமார் 4 இலட்சம் மக்களை ரஸ்யா வலுக்கட்டாயமாகத் தனது நாட்டுக்குக் கொண்டு சென்றுள்ளதாக உக்ரைன் புகார் செய்திருக்கின்றது. இதில் 84,000 சிறுவர்களும் அடங்குவர். ஆனால் அவர்களின் விருப்பத்தின் பெயரில்தான் அவர்கள் அங்கு வந்ததாக ரஸ்யா தெரிவித்திருக்கின்றது.

உக்ரைன் போலாந்து எல்லையில் போலாந்தில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கப் படையினரை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சந்தித்து உரையாடினார். நேட்டோ உச்சி மகாநாட்டுக்காகப் பெல்ஜியம் சென்ற இடத்தில் இவர் போலாந்திற்கும் விஜயம் செய்தார். சுமார் 12,000 படைவீரர்கள் இங்கே நிலைகொண்டுள்ளனர். உலகிலேயே சிறந்த படைவீரர்கள் என்று அவர்களை ஜனாதிபதி பாராட்டினார்.

உக்ரைன் படையினர் கெரிலா யுத்தம் போல, ரஸ்ய படைகளின் உயர் அதிகாரிகளைப் பார்த்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். பொதுவாக சினைப்பர் தாக்குதல்கள்தான் இப்படியான உயர் அதிகரிகள் மீது நடத்தப் படுவதுண்டு. உயர் அதிகாரிகளை வீழ்த்தினால் படையினர் உளரீதியாக நிலை குலைந்து போவார்கள். சென்ற வியாழக்கிழமை 49வது படைப்பிரிவைச் சேர்ந்த ரஸ்ய இராணுவ உயர் அதிகாரியான லெப்ரினன் ஜெனரல் யக்கோவ் ரிசென்சிவ் தளத்தில் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருந்தது. சென்ற வருடம்தான் இவர் பதவி உயர்வு பெற்றிருந்தார். இவர் உக்ரைன் யுத்தத்தில் கொல்லப்பட்ட 7வது உயரதிகாரியாவார். இதே தளத்தில்தான் சென்றவாரம் மார்ச் 18 ஆம் திகதி இன்னுமொரு லெப்ரினன் ஜெனரல் அன்ட்றி மோடிவிச்வ் என்பவரும் கொல்லப்பட்டார். இவர் 8வது படைப் பிரிவைச் சேர்ந்தவர். யுத்தத்தின் போது, பொதுவாக இது போன்ற உயரதிகாரிகளை முன்னிலை தளத்திற்கு அனுப்புவது கிடையாது. கட்டாயத்தின் பெயரில் அவர்கள் சென்றிருக்கலாம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் பிரச்சனை காரணமாக ரஸ்யா மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டதால் ரஸ்யாவின் நேசநாடான சீனா இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. சீனாவில் இயங்கும் முக்கியமான எரிசக்தி நிறுவனங்களாக சினோபெக், சைனா நேஷனல் பெற்றோலியம் கோப்ரேஷன், சைனா நேஷனல் ஓவ்ஷோர் ஓயில் கோப்பரேஷன் ஆகிய நிறுவனங்கள் இருக்கின்றன. இதில் ஆசியாவில் பெரிய எண்ணெய் நிறுவனமான சினோபெக் நிறுவனம் ரஸ்யாவுடனான 500 மில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்திருக்கின்றது. சீனாவின் வெளிவிவகாரச் செயலகம், "சீனா சுதந்திரமான பெரியதொரு நாடு, உலகின் எந்தப் பகுதியிலும் வர்த்தகம் செய்யும் உரிமை எங்களுக்கு உண்டு" என்ற செய்தியையும் வெளியிட்டிருக்கின்றது. இதே நேரம் ரஸ்யாவின் மேற்கு நகரமான பெல்கோரோட் நகரத்தில் உள்ள எண்ணெய் கிடங்கு ஒன்று தாக்கப்பட்டதால் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது. இரண்டு ராணுவ ஹெலிகொப்டர்கள் தாழ்வாகப் பறந்து வந்து தாக்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் - ரஸ்யாவுக்கு இடையிலான யுத்த நிறுத்தம் பற்றிய பேச்சுவார்த்தை இதுவரை பெலாரஸில் மூன்று தடவைகள் நடைபெற்றாலும் எந்த முடிவுக்கும் அவர்கள் வரவில்லை. துருக்கியில் மீண்டும் ஒருமுறை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இந்த நிலையில் இரு நாட்டு அதிபர்களும் பேச்சுவார்த்தை நடத்துமுன் ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களைத் தெளிவு படுத்த வேண்டும் என்று ரஸ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் குறிப்பிட்டார். குறிப்பிட்ட சில இடங்களில் இருந்து ரஸ்யா தனது படைகளைக் குறைப்பதாக பேச்சுவார்த்தையின் போது ஒப்புக் கொண்டாலும், இதுவரை எந்த இடத்திலும் படைகள் திருப்பி அழைக்கப்டவில்லை என்று உக்ரைன் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஆனால் வியாழக்கிழமை உக்ரைனின் அணு உலைகள் இருந்த செர்னோபி என்ற இடத்தில் நிலை கொண்டிருந்த ரஸ்யப்படைகள் திரும்பிச் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிதளவு அணுக்கதிர் வீச்சு அப்பகுதியில் இருந்ததால் அவர்கள் அந்த இடத்தை விட்டுச் சென்றிருக்கலாம் என்றும் நம்ப இடமுண்டு. அவர்கள் திரும்பிச் செல்லும் போது பெப்ரவரி மாதம் கைது செய்திருந்த உக்ரைன் தேசிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களையும் தங்களுடன் கொண்டு சென்றிருக்கிறார்கள். தலைநகர் கிவ்வில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புச்சா என்ற சிறிய நகரத்தைக் கைப்பற்றியிருந்த ரஸ்ய படைகள், அந்த இடத்தை விட்டு விலகிச் செல்லும் போது பல பொதுமக்களை சுட்டுக் கொன்றதாக உக்ரைன் தெரிவிக்கின்றது. சுமார் 300 உடல்கள் புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்டன. சிலரது கைகள் கட்டப்பட்டு மிகஅருகே இருந்து சுடப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சிறுமிகளையும் பாலியல் வன்முறை செய்ததாக உக்ரைன் நாட்டு அரசின் மக்கள் பிரதிநிதியான லெசியா என்பவர் குறிப்பிட்டார். ரஸ்யா அந்தக் குற்றச்சாட்டை மறுத்திருக்கின்றது. சுமார் 35,000 மக்கள் வரை இந்த நகரத்தில் வாழ்ந்தார்கள். இதே போன்றதொரு அவலநிலை 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் போதும் முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது நினைவிருக்கலாம். அரசியல் இலாபம் கருதிச் சர்வதேசம் கண்மூடிக் கொண்டு வேடிக்கை பார்ப்பதால்தான், இது போன்ற அவலநிலை ஆங்காங்கே உருவாகிக் கொண்டிருக்கின்றது.



மார்ச் 16 ஆம் திகதி உக்ரைனுக்கு 800 மில்லியன் டொலர் உதவி செய்வதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்திருந்தார். இந்தத் தொகைக்கான ஒரு பகுதி ஆயுதங்களும், மருந்து வகைகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. கவச வாகனங்களை அழிக்கக்கூடிய ஆயதங்களும், விமான எதிர்ப்புப் பீரங்கிகளும், எம்ஐ 17 ரக ஹொலிக்கெப்டர்களும், மற்றும் சிறிய ஆயதங்களும் அதற்கான வெடிமருந்துகளும் இதில் அடங்கும். இதே நேரம் ரஸ்ய அதிபர் புதினின் இரண்டு மகள்களான மரியா மற்றும் கதரினா ஆகியோரது வங்கிக் கணக்குகளும், சொத்துக்களும் முடக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 29
***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

ஏழை ஒருவன் குளிர்காய
என்னை விறகாய் நான்தருவேன்!
கோழை நெஞ்சம் புலியாக
கவிதைத் தீயாய் நான்வருவேன்!

வீணை யாக இருப்பதிலும்
விறகாய் இருக்கச் சம்மதிப்பேன்!
ஞால மென்னும் ஆலயத்தில்
ஞான ஒளியாய்ச் சங்கமிப்பேன்!

நன்றி மறந்தார் நிழல்நாடேன்
நட்பை மறந்தார் முகம்தேடேன்!
பன்றி விரிக்கும் பந்திதனில்
புத்தி யிழந்து நான்சேரேன்!

தமிழைப் போலே தலைநிமிர்ந்தே
தரணி எங்கும் நான்வருவேன்!
தமிழே என்றன் உயிர்மூச்சாய்
தங்கக் கவிகள் நான்தருவேன்!

என்னை உரித்துப் பிரித்தாலும்
நெருப்பில் கிடத்தி எரித்தாலும்
இன்பத் தமிழே எனில்காண்பீர்
இறவாக் கவிதை எழில்காண்பீர்!



# Annual Awards Ceremony-2021 of Re/Max Community Realty Inc was a very Colourful Event

# Re/Max Community Realty Inc. நிறுவனத்தின் 2021 ஆண்டிற்கான வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழா




Annual Awards Ceremony - 2021 of Re/Max Community Realty Inc. was hosted by it's Founder Mr. Rajeef Koneswaran and his Associate Mr. Logan VelumMaylum.

The colorful event took place at Markham Convention Centre in Scarborough and more than 200 Agents were presented with Awards, according to their Sales Achievements.

Awards Ceremony and Banquet Services was provided by Mr. Bala of BandB Event Planners.

கனடாவில் கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும் Re/Max Community Realty Inc, நிறுவனத்தின் 2021 ஆண்டிற்கான வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஸ்காபுறோவில்



அமைந்துள்ள Markham Convention Centre மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிறுவனத்தின் ஸ்தாபகரும் அதிபருமான திரு. ரஜீவ் கோனேஸ் மற்றும் அவரது சகா திரு. லோகன் வேலும் மயிலும் ஆகியோர் மேற்படி விருதுகள் வழங்கும் விழாவை நடத்துவதற்கு உரிய அனைத்து ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

சுமார் 200 விற்பனை முகவர்களுக்கு அவர்களின் விற்பனைத் திறனுக்கு ஏற்ப சிறப்பு விற்பனை விருதுகள் வழங்கப்பெற்றன.

விழாவை BandB Event Planners நிறுவனத்தின் அதிபர் பாலா அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்









## Ribbon Cutting Ceremony of U.S.N Traders, at GTA Plaza in Scarborough, Canada, took place last Friday

# ஸ்காபுறோவில் உள்ள GTA Plaza வர்த்தகத் தொகுதியில் திறந்து வைக்கப்பெற்ற U.S.N Traders, நிறுவனம்



Ribbon Cutting Ceremony of U.S.N Traders, at GTA Plaza in Scarborough, Canada, took place April 1, 2022. Special Guests invited by the Owner of the Company, are Ontario's Minister Hon. Raymond Cho, MPP for Scarborough Agincourt, Mr Aris Babikian and City Councilor for Scarborough Agincourt Mr. Nick Mantas. U. S. N Traders is owned by Mr Uthayakumar.

கடந்த வெள்ளிக்கிழமை ஸ்காபுறோவில் உள்ள GTA Plaza வர்த்தகத் தொகுதியில் திறந்து வைக்கப்பெற்ற U.S.N Traders, நிறுவனத்தின் நாடா வெட்டும் வைபவத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக Ontario's Minister Hon. Raymond Cho, MPP for Scarborough Agincourt, Mr. Aris Babikian மற்றும் City Councilor for Scarborough Agincourt Mr. Nick Mantas ஆகியோர் அழைக்கப்பெற்றிருந்தனர்.



U.S.N Traders, நிறுவனத்தின் உரிமையாளர் திரு. உதயகுமார் அனைவரையும் வரவேற்று உபசரித்தார். அத்துடன் சிறப்பு விருந்தினர்களுக்கு மலர் மாலை அணிவித்து கௌரவித்தார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்களும் யுகம் வானொலி அதிபர் கணபதி ரவீந்திரன் அவர்களும் அங்கு அழைக்கப்பட்டிருந்தனர். நண்பர்கள் உறவினர்கள் மற்றும் வர்த்தக அன்பர்கள் என பலர் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.





Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

நீதி மற்றும் அதற்கான பரிகாரம் ஆகியவற்றைப் பெற போராடும் தமிழ் சமூகத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்கள் போராட்டத்தில் நானும் ஒரு பங்காளியாக இருப்பதில் பெருமை கொள்கிறேன். ஸ்காபுறோவில் தமிழ் சனசமூக நிலையத்தைக் கட்டியெழுப்பவும், தமிழ் இனப்படுகொலைக் கல்விச் சட்டத்தை ஆதரிப்பதற்காகவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

அத்துடன் மாகாண அரசாங்கம் சார்ந்த எந்த உதவிக்கும் எனது அலுவலகமும் உங்களுக்காக திறந்தே உள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்..

இங்ஙனம்,
அரிஸ் பாபிகியன், ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்
ஸ்கார்பரோ-அஜின்கோர்ட்

-----------------

My best wishes to the Tamil Community in its struggle to attain justice and redress. I am honoured to be part of your struggle. I am also thrilled to work with you to build the Tamil Community Centre and support the Tamil Genocide Education Act.

My office is also available for any help.

Aris Babikian, MPP
Scarborough-Agincourt



ONTARIO

**Aris Babikian**

MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT

**Constituency Office:**
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com






## என்றுமே மாறாத மதுரைச் சுவையுடன் உணவு படைக்கின்றோம்





# Taste of MADURAI

Taste Of Madurai

Telephone: (416) 332-8000

திறப்பு விழாவையொட்டி விசேட விலைகளில்
சைவ, அசைவ உணவுகளைப் ஆடர் செய்து வாங்கிச் செல்லுங்கள்




## திறப்பு விழா ஸ்பெஷல்

**Madurai Killi Parotta (2 Pcs) $9.99**

மேலும், நாவுக்கு விருந்தாகும் பல வகை உணவுகள்: தோசை வகைகள், பரோட்டா வகைகள் அத்துடன் மதுரைச் சாப்பாடு பல கறிகளுடன், சூப் வகைகள், இன்னும் பல...


AVAILABLE
DOORDASH
Uber Eats
SKIP THE DISHES










3500 McNicoll Ave. Unit-7
Scarborough, ON
(Markham / McNicoll)

Telephone: (416) 332-8000
Email: mahendran1980@hotmail.com

# அழகான இலங்கையில் மக்கள் புரட்சி வெடித்திருக்கிறது. இராபக்ச குடும்ப சாம்ராச்சியம் தப்புமா?

- கனடா நக்கீரன்

*ஹம்ப்டி டம்ப்ரி சுவரில் அமர்ந்தான்*
*ஹம்ப்டி டம்ப்ரி கீழே விழுந்தான்*
*அரசனின் ஆட்கள் அரசனின் குதிரைகள்*
*தூக்கவே முடியலை ஹம்ப்டி டம்ப்ரியை மீண்டும்!*

இந்த வரிகள் ஆங்கிலத்தில் மழலையர்களுக்கு எழுதப்பட்ட எதுகை மோனைப் பாடல். இந்து சமுத்திரத்தின் முத்து என்று அழைக்கப்படும் இலங்கைத் தீவில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை இந்தப் பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது. சென்ற வாரம் (மார்ச் 31, 2022) வியாழன் மாலை வரை இராபக்ச குடும்பம் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒன்றாக இருந்தது. மக்கள் அந்தக் குடும்பத்துக்கு அரச குடும்பத்துக்குக் கொடுக்கும் மரியாதையை-க் கொடுத்தார்கள். நொவெம்பர் 16, 2019 ஆம் ஆண்டு நடந்த சனாதிபதி தேர்தலில் 69 இலட்சம் (52.25%) மக்கள் கோட்டாபய இராசபக்சவுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்கள். வெற்றிவாகை சூடிய கோட்டாபய **"**பெரும்பான்மை சிங்கள - பவுத்த மக்களது வாக்குகளினால்தான் நான் தேர்தலில் வெற்றி பெற்றேன். அவர்களது விருப்பப்படியே ஆட்சி நடத்துவேன்**"** என அறிவித்தார்.

அடுத்து ஓகஸ்ட் 05, 2020 அன்று நடந்த இலங்கையின் 16 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் அவரது கட்சியான சிறிலங்கா மக்கள் பெரமுனை 145 இடங்களில் வெற்றி பெற்று மகிந்த இராசபக்சவின் தலைமையில் ஆட்சி அமைத்தது.

அமைச்சரவையில் அண்ணன், தம்பி, மகன் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் இடம் பிடித்தார்கள். மொத்த வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் 70 மூநிதி பங்கீடு அவர்களது கையில் இருந்தது. இராசபக்ச குடும்பத்தினது எடுபிடிகள் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்தார்கள். செல்லுமிடம் எல்லாம் அரச மரியாதை-யோடு வரவேற்கப்பட்டார்கள்.

ஆனால் இரண்டு ஆண்டுகள் கழித்து கடந்த வாரம் வியாழக்கிழமை மாலை சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவர்களது கோட்டை ஆட்டம் கண்டது. அவர் குடியிருக்கும் வீட்டுக்குச் செல்லும் பென்கிறி தெருவி-ல் **(Pengiriwatte Road)** கூடிய மக்கள் நாட்டில் நி-லவும் எரிபொருள், சமயல் எரிவாய்வு, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, உணவுத் தட்டுப்பாடு, விலை-வாசி உயர்வு போன்றவற்றுக்கு எதிராக உரத்துக் குரல் எழுப்பினார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்தோடு நின்றுவிடவில்லை. **"**கோட்டாபய வீட்டுக்குப் போ**" "**கோட்டாபய பதவி விலக வேண்டும்**"** கோட்டாபய **"**கள்ளன்**"** கோட்டாபய **"**பயித்தியக்காரன்**"** என முழக்கம் இட்டார்கள். இதனை யாரும் எதிர்பார்க்கவில்லை.

இலங்கையின் வரலாற்றில் பல பிரதமர்கள், சனாதிபதிகள் வந்து போனார்கள். ஆனால் யாருக்கும் எதிராக மக்கள் **"**ஆண்டது போதும் வீட்டுக்குப் போ**"** என்று முழக்கம் எழுப்பியதில்லை.

இராசபக்ச குடும்பம் நாட்டின் சொத்துக்களை கண்மண் தெரியாமல் கொள்ளையடித்து விட்டார்கள், வெளிநாட்டவர்களுக்கு விற்று விட்டார்கள் என்ற குற்றச் சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு வருகிறது.




இராசபக்சாவின் சொந்த வீட்டுக்கு அருகாமையில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதை எப்படியோ முன்கூட்டி முகந்து கொண்ட அரசாங்கம் நூற்றுக் கணக்கான சிறப்பு அதிரடிப் படையினரையும் இராணுவத்தினரையும் அங்கு குவித்திருந்தார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. சிறப்பு அதிரடிப் படையினரை ஏற்றிவந்த வாகனம் எரியூட்டப்பட்டது. இராணுவ ஜீப்வண்டி ஒன்றுக்கும் தீவைக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்புகைக் குண்டுகள் வீசப்பட்டன. தண்ணீர் பீய்ச்சப்பட்டது. ஆனால் மக்கள் அசையவில்லை. நள்ளிரவு தாண்டிய பின்னரே மக்கள் கலைந்து சென்றார்கள். அடுத்த நாள் ஏப்ரில் முட்டாள் நாளில் சனாதிபதியின் ஊடகப் பிரிவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை **"**பயங்கரவாதிகள்**"** என வருணித்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலும் மூவினங்களையும் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தினர். எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்கள். இவர்களில் பெரும்பாலோர் சனாதிபதி கோட்டாபயவுக்கும் மொட்டுக் கட்சிக்கும் வாக்களித்தவர்கள். நல்வாழ்வுத்துறை அமைச்சின் மருத்துவர்கள், செவிலியர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தில் குதித்துள்ளார்கள். வடக்கு, தெற்கு, மலையகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

எந்தப் போராட்டம் என்றாலும் அதற்குத் தலை-மை தாங்கும் பவுத்த தேரர்கள் இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. கலந்து கொள்ள முயற்சி செய்த சில பவுத்த தேரர்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து மரியாதையாக வெளியேறச் செய்தார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சிங்களம் - தமிழ் இரண்டு மொ-ழியிலும் முழக்கம் எழுப்பினர். பிடித்திருந்த பதாதை-கள் பெரும்பாலும் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தன. இருந்தாலும் தமிழில் எழுதப்பட்ட பதாதைகளும் காணப்பட்டன. ஒரு பெரிய பதாதையில் "74 ஆண்டுகால சாபக்கேட்டில் இருந்து நாட்டை மீட்போம்" என எழுதப்பட்டிருந்தது. உண்மையும் அதுதான்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் ஆட்சிக்கு வந்த அனைவரும் இனவாதத்தைக் கக்கியே ஆட்சியைப் பிடித்தார்கள். இருபத்து நான்கு மணித்தியாலயத்தில் "சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்" என உறுதிமொழி வழங்கியே எஸ். டபுள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆட்சிக் கட்டில் ஏறினார்.

1972 இல் சிறிமாவோ பண்டாரநாயக்க மேலும் ஒருபடி மேலே சென்று சோல்பரி அரசி-யல் யாப்பை முற்றாகத் தூக்கிக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டு **"**இலங்கைக் குடியரசு ஒரு ஒற்றையாட்சி அரசாகும். இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு முதன்மைத் தானம் வழங்கப்படுதல் வேண்டும். ஏனைய மதங்களின் உருமைகளுக்கு உத்தரவாதமளிக்கின்ற அதே வேளை பௌத்த சாதனத்தை பாதுகாத்தலும், பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்**"** எனக் கூறும் புதிய அரசியல் யாப்பை உருவாக்கினார். 1978 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன அதனை மேலும் கூர்மையாக்கினார். இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை வழங்குவதுடன், 10 மற்றும் 14(1)(இ) உறுப்புரைகள் மூலம் அனைத்து மதங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரி-மைகளை உறுதிப்படுத்தும் அதே வேளை-யில் புத்த சாசனத்தைப் பாதுகாத்து வளர்ப்பது அரசின் கடமையாகும்.




நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் நாட்டை சிங்கள மயப்படுத்துதலிலும் பவுத்த மயப்படுத்துவதிலும் ஆட்சியாளர்கள் போட்டி போட்டு நாட்டைக் குட்டிச்சுவராக்கினார்கள். தமிழினத்துக்கு எதிராக 30 ஆண்டுகளாக கொடிய போரை நடத்தினார்கள். அத-னால் நாடு இன்று கடனில் மூழ்கி ஒட்டாண்டியாகிவிட்டது. மக்கள் பட்டினியிருக்க வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது.

மார்ச் 31 வியாழக் கிழமை அன்று நள்ளிரவுக்குள் முன்னரே சனதிபதி கோட்டாபய அவர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் பற்றி தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்கள் பரபரப்பான செய்திகளை வெளியிட்டன. அடுத்த நாள் போராட்டங்கள் வெடித்தன. அதனைத் தொடர்ந்து சன-ாதிபதி அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தி ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். ஆனால் மக்கள் அதனை மீறிக் கடந்த ஒரு வாரமாக கோட்டாபய இராசபக்ச மற்றும் அவரது குடும்ப ஆட்சிக்கு எதிராக முழு நாடுமே போராடிக் கொண்டிருக்கிறது.

பிரதமர் வசிக்கும் அலரிமாளிகை, அமைச்சர்களது வீடுகள் மக்களால் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கின்றன. இராசபக்ச குடும்பம் நாட்டின் சொத்துக்களைக் கொள்ளையடித்துள்ளது என ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம்சாட்டுகிறார்கள்.

ஆளும் மக்கள் பெரமுன கட்சியில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 15 உறுப்பினர்களும் விமல் வீரவன்ச தலைமை-யில் 14 உறுப்பினர்களும் மற்றும் அனுர பிரியதர்'ன தலைமையில் 11 உறுப்பினர்களும் வெளியேறிவிட்டார்கள். இதனால் ஆளும்கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து விட்டது. இருந்தும் ஆளும் கட்சித் தலைவர்கள் தங்கள் பக்கம் 117 உறுப்பினர்கள் இருப்பதாகச் சொல்கிறது. கடந்த ஏப்ரில் 05, 06 நாட்களில் கூடிய நாடாளுமன்றம் அமளிதுமளியில் முடிந்திருக்கிறது.



அமைச்சர்கள் எல்லோரும் தங்கள் பதவி-களை துறந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் பழைய அமைச்சர்களில் நாலு பேரை மீண்டும் அமைச்சர்களாக நியமித்துள்ளார்கள். அதிலும் குழப்பம். நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட நீதி அமைச்சர் 24 மணித்தியாலயத்தில் தனது பதவியைத் துறந்துவிட்டார்.

திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிக்கல பதவி விலகிவிட்டார். மத்திய வங்கி ஆளுநர் நிவாட் அஜித் கப்ரால் பதவி துறந்து விட்டார். இவை மூழ்கும் கப்பலில் யாரும் ஏறித் தற்கொலை செய்ய மறுப்பதைக் காட்டுகின்றன.

இதனால் நாட்டில் ஒரு நிதியமைச்சர் இல்லை. நிதியமைச்சில் செயலாளர் இல்லை. மத்திய வங்கிக்கு ஆளுநர் இல்லை. இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின் படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை ரூபா 319.99 ரூபாவாக பதிவாகியுள்ளது. இது விரைவில் ரூபா 450 ஆக உயரும் என எதிர்கூறப்படுகிறது. அதேபோல், ஒரு கனடிய டொலரின் பெறுமதி ரூபா 250.00 ஆக உள்ளது.

மே 18, 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டை எதிர்கொண்டிருந்த இனச் சிக்கலுக்கு ஒரு நியா-யமான, நீதியான தீர்வை இராசபக்ச அரசு கண்டிருக்க வேண்டும். அப்படி ஒரு தீர்வை முன்வைக்கப் போவதாக பிரதமர் மகிந்த இராசபக்ச ஐநா சபையின் செயலா-ளர் நாயகம் பான் கீன் மூனுக்கு உறுதி மொழி அளித்திருந்தார் ஆனால் அதை அவர் செய்யவில்லை. தமிழர்களுக்கு இனச் சிக்கல் இல்லை, இருப்பது பொருளாதார சிக்கல்தான் எனக் கூறினார். தான் 13ஏ என்பது மேற்சபையைக் குறித்தது என்று சடைந்தார்.

போர் முடிவுக்க வந்த கையோடு படையி-னரின் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்திருக்கலாம். படைச் செலவை குறைத்திருக்கும். 2022 ஆம் ஆண்டில் அ.டொலர் 2.50 பில்லியன் இராணுவத்துக்கு செலவழிக்கப்பட்டது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (அ.டொலர் 87.36 பில்லியன்) 2.86**%** ஆகும்.

சரி நோய் தெரிகிறது. அதற்கான பரிகாரம் என்ன? எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்?

(1) உடனடியாகச் சட்ட திருத்தம் 20 ஒழிக்கப்பட்டு 19 ஆவது சட்டத்தை மீள் நடைமுறைப்படுத்தல்.

(2) ஒரு புத்தம் புதிய வெஸ்ட் மின்ஸ்ரர் பாணி அரசி-யல் யாப்பு. அந்த யாப்பு மதசார்பற்றதாக இருக்க வேண்டும். அதில் மத்திய அரசி-ன் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு உச்சகட்ட பகிர்வு.

(3) மத பூசாரிகள் அரசியலில் ஈடுபடுவதைத் தடுத்தல்.

(4) சிங்களம், தமிழ் இரண்டும் உத்தியோக மொழிகள். வட கிழக்கில் தமிழ் நிர்வாக மொழி. ஆங்கிலம் தொடர்பு மொழி.

(5) தேசியக் கொடி மூன்று இனங்களையும் குறிக்கும் மூவர்ணக் கொடி.

(6) நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், அரச ஊழியர்களது எண்ணிக்கையைப் பாதியாகக் குறைத்தல்.

(7) வெளிநாட்டு தூதுரவாலயங்களை பாதியாகக் குறைத்தல்.

(8) சுயாதீனமான நீதித்துறை. நீதிபதிகளை நியமிக்கும் சுயாதீனமான ஆணைக் குழு.

(9) சட்டத்துக்கு முன் சகலுரும் சமம் உட்பட அடிப்படை மனித உரிமைகள் உறுதிசெய்தல்.

(10) ஒழிக்கப்பட்ட சிவில் சேவை மற்றும் வெளிநாட்டு சிவில் சேவை மறு சீரமைப்பு.

தமிழ்மக்கள் அல்லல்பட்டு அழுத கண்ணீர் இராசபக்ச குடும்ப ஆட்சியை ஆட்டம்காண வைத்துள்ளது. குறிப்பாக சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவர்களை ஊழ்வினை உருத்துவந்து ஊட்டுகிறது.

போர் முடிந்த பின்னர் வெள்ளைக் கொடியோடு சரணடைந்த வி.புலி உறுப்பினர்கள் உட்பட நூற்றுக் கணக்கில் சரணடைந்த வி. புலிகள் கொல்லப்பட்டதற்கு கோட்டாபயதான் பொறுப்புக் கூற வேண்டும். "எனது தந்தையை கொன்ற கொலைகா-ரன் இலங்கையை அழித்துக் கொண்டிருக்கின்றான்" என அமெரிக்காவில் இருந்து குரல் எழுப்புகிறார் சண்டே லீடரின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க அவர்களின் மகள் அஹிம்சா.

ஆனால் சனாதிபதி கோட்டாபய எக்காரணம் கொண்டும் துறக்க மாட்டேன் என அடம் பிடிக்கிறார். தனக்கு மக்கள் 5 ஆண்டு கால ஆணை தந்திருக்கிறார்கள் என்கிறார். மகிந்த இராசபக்ச பிரதமர் பதவியை விட மாட்டேன் என்கிறார். நாடாளுமன்றத்தில் 121 நா.உறுப்பினர்களது ஆதரவு அரசுக்கு இருப்பதாகக் கூறுகிறார். புதிய அமைச்சரவை நாளை பதவி ஏற்க இருக்கிறதாம். நிறைவேற்று அதிகார சனாதிபதி முறை-யை ஒழிக்கலாமா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா யோசிக்கிறாராம்.

அழகான இலங்கையில் மக்கள் புரட்சி வெடித்திருக்கிறது. இராபக்ச குடும்ப சாம்ராச்சியம் தப்புமா?

# இ.தொ.காவின் சாவிக்கோத்து தொண்டமான் குடும்பம் வசம்!

*(சென்ற வார தொடர்ச்சி)*

தெற்காசியாவின் சாபக்கேடு குடும்ப ஆட்சி. இதில் எந்த நாடும் கட்சியும் விதிவிலக்கல்ல. இலங்கையில் தற்போது நடைபெறும் ஆட்சியும், அத்துடன் கூட்டணியில் இருக்கும் கட்சிகளும் இதற்கு மிகச் சிறந்த உதாரணம். ராஜபக்ச சகோதரர்கள் நால்வரும் ஆட்சியின் உயர் பொறுப்புகளில் உள்ளனர். "இளவரசர்" நாமல் அமைச்சர், மற்றும் சில ராஜபக்சக்கள் வேறு சில அமைச்சு மற்றும் இதர பொறுப்புகளில்.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். பெரியவர் தொண்டமான், பின்னர் ஆறுமுகன் தொண்டமான், பிறகு அவரது என்று வரிசை செல்லுகிறது.

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவும், பொதுச் செயலராகவும், நிர்வாகத்தில் முக்கியப் பொறுப்பு ஆகியவை தொண்டமான் குடும்பத்தினர் வசம் சென்றுள்ளது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற அக்கட்சியின் தேசிய சபை? கூட்டத்தில் நடந்தது என்ன?

மலையகத் தமிழர்களுக்கான மாபெரும் அரசியல் மற்றும் தொழிற்சங்க இயக்கமாக கருதப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பதவி மீண்டுமொருமுறை தொண்டமான் குடும்பம் வசம் சென்றுள்ளது. காங்கிரஸின் புதிய தலைவராக செந்தில் தொண்டமானை, எதிர்ப்பின்றி - ஏகமனதாக தேசியசபை புதன்கிழமை (30) ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் பதவி ஜீவன் தொண்டமான் வசம் உள்ள நிலையில், கட்சியின் நிர்வாகப் பொறுப்பு ஆறுமுகன் தொண்டமானின் மகளான விஜி தொண்டமான் கைகளுக்குள் உள்ளது. தற்போது தலைமைப்பதவி செந்தில் தொண்டமானின் கைகளுக்குள் வந்துள்ளது. அந்தவகையில் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தின் முழுமையான சாவிகொத்து தொண்டமான் குடும்ப வசம் சென்றுவிட்டதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இ தொ கா தலைவராக செயற்பட்ட அமரர். ஆறுமுகன் தொண்டமானின் மறைவின் பின்னர், அப்பதவி வெற்றிடமாகவே காணப்பட்டது. எனவே, புதிய தலைவர் உட்பட இதர பதவிகளுக்காக உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கொட்டகலையில் கூடியது.

தலைவர் பதவிக்கு செந்தில் தொண்டமானை நியமிக்க வேண்டும் என ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டுவிட்டதால், அப்பதவிக்கு போட்டி நிலவவில்லை. அவர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

தலைமைப் பதவிக்கு சவால் விடுப்பாரென பெரிதும் எதிர்ப்பார்க்கப்பட்ட மருதபாண்டி ராமேஸ்வரனுக்கு நிதிச்செயலாளர் பதவிக்கு மேலதிகமாக கட்சியின் தவிசாளர் பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நியமனத்துக்கும் தேசிய சபையில் ஆட்சேபனை எதுவும் முன்வைக்கப்படவில்லை. பிரதி தவிசாளர் பதவி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான ராஜதுரையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதித் தலைவர்களாக மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான கணபதி கனகராஜும், அனுசியா சிவராஜாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். காங்கிரஸின் சார்பில் ஆசிரியர் சார் தொழிற்சங்க விவகாரத்தை கணபதி கனகராஜ் கையாண்டுவருகின்றார். பொதுச்செயலாளர் உட்பட முக்கிய பதவிகளை அனுசியாவும் வகித்துள்ளார்.

மத்திய மாகாணசபையின் அவைத் தலைவராக செயற்பட்ட அதேபோல காங்கிரஸின் நீண்டகால உறுப்பினரான துரை மதியுகராஜா திட்டமிட்ட அடிப்படையில் ஓரங்கட்டப்பட்டுள்ளார். பிரதித் தலைவருக்கான போட்டியில் அவர் தோற்கடிக்கப்பட்டுள்ளார். இதன் பின்னணியில் சூழ்ச்சி இருப்பதாக அவரின் ஆதரவாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் தோல்வி ஏற்படும் என தெரிந்ததால் கடந்த பொதுத்தேர்தலில் களமிறங்கும் வாய்ப்பை மதியுகராஜா மறுத்தார். அவரின் எதிர்ப்பையும்மீறி பாரத் அருள்சாமி களமிறக்கப்பட்டார். அவரால் வெற்றிபெறமுடியாமல் போனது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே துரை மதியுகராஜா (கண்டி துரை) ஓரங்கப்பட்டுள்ளார். பிரஜாசக்தி திட்ட பணிப்பாளராக செயற்படும் பாரத் அருள்சாமிக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனுக்கும், சிவராஜாவுக்கும் போஷகர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் தேசிய அமைப்பாளராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பி.சக்திவேல் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அரசியல் பிரிவுக்கான உதவி தேசிய அமைப்பாளராக ராஜமணி பிரசாந்தும், தொழிற்சங்க பிரிவுக்கான தேசிய அமைப்பாளராக பழனி சசிகுமாரும் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உப தலைவர்களின் எண்ணிக்கை இம்முறை குறைக்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்புமூலமும், பரிந்துரைமூலமும் சுமார் 12 உப தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிலிப்குமார், சென்பகவள்ளி, யோகராஜ், சச்சிதானந்தன் ஆகியோருக்கும், பதுளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அசோக்குமார், சிவலிங்கம் ஆகியோருக்கும் உப தலைவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்டத்தில் உப தலைவர் பதவி சிவஞானத்திடமும், இரத்தினபுரி மாவட்ட உப தலைவர் பொறுப்பு ராஜமணியிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தை சேர்ந்த பாஸ்கரன், களுத்துறை மாவட்டத்தை சேர்ந்த எம்.மேரி, கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் செல்லசாமி திருகேதீஸ் ஆகியோரும் உப தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக இரத்தினபுரி மாவட்ட அரசியல் அமைப்பாளராக ரூபன் பெருமாளும், நுவரெலியா மாவட்ட அரசியல் அமைப்பாளராக பாரதிசாதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் கட்டுப்பாட்டுக்குள் காங்கிரஸ் வந்த பிறகு, இரு தசாப்தங்கள்வரை அவர் தலைமைப்பதவியில் நீடித்தார். அதன்பிறகு ஆறுமுகன் தொண்டமான் தெரிவானார், இடையில் முத்துசிவலிங்கத்துக்கு தற்காலிகமாக தலைமைப்பதவி ஒப்படைக்கப்பட்டது. தற்போது அப்பதவியை செந்தில் தொண்டமான் பொறுப்பேற்றுள்ளார்.

"சந்தா பெறாத கட்சியாக காங்கிரஸை மாற்ற வேண்டும் என்பதே மறைந்த தலைவரின் இலட்சியம். அந்த இலக்கை அடையவே நாம் எதிர்ப்பார்க்கின்றோம்." - என்று தலைமைப்பதவியை ஏற்ற பிறகும் அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார் செந்தில் தொண்டமான்.

அதேபோல இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்கி பதவி பங்கீடு இடம்பெற்றுள்ளது எனவும், காங்கிரஸின் இனி தனிநபர் முடிவுக்கு இடமில்லை எனவும் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் அறிவித்தார். ஆறுமுகன் தொண்டமான் காலத்தில் தனிநபர் முடிவே ஆதிக்கம் செலுத்தியது என்ற விடயத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

"சந்தா வாங்காத சங்கம்" என்ற இலக்கு சாத்தியமா? "கண்டி துரை"க்கு "வெட்டு" - பாரத்துக்கு பதவி!!

இ.தொ.காவின் சாவிக்கொத்து தொண்டமான் குடும்பம் வசம்!



# இலங்கையின் அதிகரித்த இராணுவச் செலவீனங்களே பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணி !

## தமிழர் தாயகத்தில் இருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும்!!

- பிரதமர் வி. உருத்திரகுமாரன்




இன்று இலங்கைத்தீவு எதிர் கொள்ளும் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு சிங்கள அரசின் தமிழ்மக்களுக்கு எதிரான இனவழிப்புப்போரும், பெருந்தொகை பணம் இராணுவச் செலவுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தமையும் கூட முக்கிய காரணிகளாக அமைகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து சிறிலங்கா இராணுவம் முற்றாக அகற்றப்பட வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் உருத்ரகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தீவின் இன்றைய பொருளாதார நெருக்கடி குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இப்பொருளாதார நெருக்கடிக்கு கொரோனா வைரஸ் பொருந்தொற்று, அதனால் ஏற்பட்ட சுற்றுலாத்துறை வீழ்ச்சி, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பில் ஏற்பட்ட பாதிப்பு, சிறிலங்காவின் வரிக்குறைப்பு மற்றும் விவசாயத்தில் ஏற்படுத்தப்பட்ட உர மாற்றீடுகள் என இன்னோரன்ன காரணங்கள் கூறப்பட்டாலும், தமிழின அழிப்புப் போரும், பெரும் இராணுச் செவீனமும் இந் நெருக்கடி ஏற்படுவதற்கு முக்கிய பங்கு வகித்தமையின சிங்கள மக்களும், அனைத்துலக சமூகமும் கவனத்தில் எடுக்கவில்லை என்பதனை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிராக சிங்கள் அரசு நடத்திய கொடிய இனவழிப்பு யுத்தத்துக்கும் முள்ளிவாய்க்கால் இனஅழிப்புக்கும், அதனைத் தொடர்ந்து தமிழர் தேசத்தினை ஆக்கிரமித்து தமிழர்களை அடக்கி வைக்கவும், கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புக்கு தமிழர் தேசத்தினை உள்ளாக்கவும் சிறிலங்கா அரசு பெரும் இராணுவச் செலவீனங்களைச் செய்து வந்தது. தொடந்தும் செய்து வருகிறது.

கிடைக்கப்பெறும் தரவுகளின்படி மூன்றாம் கட்டஈழப்போர்க் காலத்தில் (1995-2002) 1346 மில்லியன் டொலர்களும், சமாதான காலப்பகுதியில் (2002-2005) 1056 மில்லியன் டொலர்களும், நான்காம் கட்ட ஈழப்போரில் (2006-09) 1499 மில்லியன் டொலர்களும் தமிழ் மக்களுக்கு எதிரான போருக்காக தனது இராணுவச் செலவீனங்களாக சிறிலங்கா செலவு செய்துள்ளது.

2009 ஆம் ஆண்டு காலத்தின் பின்னரும் தனது இராணுவத்தினையும், விசேட அதிரடிப்படையினையும், காவல்துறையினையும் பெருமளவில் பேணிக் கொண்டு தனது செலவீட்டில் 11 வீதத்தினை பாதுகாப்புக்கு என ஒதுக்கி வருகிறது. (2009-17) இக் காலப்புகுதியிலும் போர்க்காலத்தினை விட அதிகமாவே 1716 மில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது.

உலக அளவில் தனது இராணுவத்தினை 99 வீதமான படையினரை இயங்கு நிலையில் வைத்திருக்கும் நாடாக சிறிலங்கா மாறியுள்ளதோடு, ஆண்டுக்கு 170 மில்லியன் டொலர்களை இராணுவத்தின் ஓய்வூதியத்துக்கு செலவிடுகின்றது.

போரின் ஓய்வுக்கு பின்னராக பாதுகாப்பு தரப்பினரின் சம்பளத்தினை 45வீதத்தினால் அதிகரித்துள்ள சிறிலங்கா அரசு, தனது இராணுவத்தின் பெரும்பகுதியினை தனது ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தாயகத்தில் நிலைநிறுத்தியுள்ளது.

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு, தமிழர்கள் ஆக்கிரமிக்கப்புக்கு உள்ளாகியுள்ள தமது தேசத்தினை விடுவிக்கவும், இனப்படுகொலைக்கு நீதி வேண்டியும், அரசியல் இறைமையை அடைந்து கொள்ளவும் அமைதிவழியில் போராடி வரும் இன்றைய நிலையில், சிறிலங்காவின் இந்த இராணுவம் செலவீனங்களின் அவசியம் குறித்து சிங்கள மக்களும், சர்வதேச சமூகமும் பாராமுகமாக இருப்பது எமக்கு கவலையளிக்கிறது.

“தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் திறன் சிறிலங்கா இராணுவத்துக்கு இருக்கிறது” என இலங்கைக்குள் இந்தியப் படையினர் நுழைந்ததாக சமீபத்தில் வெளியான செய்திகள் தொடர்பில் சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலாளரும் ஜெனரலுமான கமல் குணரத்ன கருத்து வெளியிட்டிருந்தார்.

உள்நாட்டில் அச்சுறுத்தல் இல்லையெனவும், எந்தவொரு வெளிநாட்டு அச்சுறுத்தலையும் தமது இராணுவம் எதிர்கொள்ளும் நிலையில் உள்ளதெனவும் சிறிலங்காவின் இராணுவ தரப்பு தொடர்சியாக வெளியிட்டு வருகின்ற கருத்தானது இந்தியாவை நோக்கியானதாவே கருதப்படவேண்டியது. இது, இந்தியா இலங்கைத்தீவை நோக்கி படையெடுக்கும் என்ற சிங்கள தேசத்தின் மகாவம்ச மனோபாவத்தினை வெளிப்படுத்துகின்றது.

பொருளதார நெருக்கடியில் மக்கள் சந்தித்து வருகின்ற வாழ்வாதார நெருக்கடிகளுக்கு தோழமையுடன் உதவிசெய்யும் நோக்கில் சிறிங்காவுக்கு மனித நேய உதவிகளை வழங்கி வரும் இந்தியா, சிறிலங்காவின் இந்த கட்டுகடங்கா இராணுவ செலவீனங்கள் எதற்காக என்ற கேள்வியினை எழுப்ப வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தேசத்தில் இருந்து இராணுவத்தினை முற்றாக விலக்குவதற்கான அழுத்த்தினை இந்தியா கொடுக்க வேண்டும் இக் இக் கோரிக்கைகளுக்கான தூண்டுதலை தமிழக மக்கள் இந்திய அரசினை நோக்கி முன்வைக்க வேண்டும்.

சர்வதேச சமூகம், சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் பிரச்சினகளைக் கவனத்தில் எடுக்கும் போது, தமிழ்மக்களின் தனித்துவமான தேசிய இனப்பிரச்சனையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ்த்தேசிய இனப்பிரச்சனையில் இரு முக்கியகூறுகளாக நீதிக்கான பொறுப்புக்கூறல், சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான அரசியல் தீர்வு ஆகியன கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடி, வாழ்வாதார பிரச்சனை காரணாமாக வீதிக்கு இறங்கி போராடி வரும் சிங்கள உறவுகளை தோழமையோடு காண்கின்றோம். ஆனால் ஆட்சி மாற்றம் என்பது இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வாக அமையாது என்பதனை தெரிவிப்பதோடு நிலையான தீர்வு என்பது தமிழர்களின் தேசிய இனப்பிரச்சனை தீர்க்கப்படும் போதே நிகழும் என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

ஆழ வேரோடிப்போயுள்ள சிங்கள பௌத்த இனவாத கட்டமைப்பில் உருப்பெற்றுள்ள சிங்கள அரச இயந்திரத்தில், தமிழ்மக்களின் நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான வெளியில்லை என்பதே யதார்த்தம்.

ஈழத் தமிழர் தேசத்தின் தாயகப்பிரதேசம் சிங்கள அரசின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதால், தமிழ் மக்களும் இந் நெருக்கடிக்குள் சிக்குண்டு போயுள்ளார்கள். சிங்கள அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்படாதவகையில் தமிழர் தாயகப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு உதவிகளை வழங்கி அவர்களைப் பாதுகாப்பதற்கு எடுக்கக்கூடிய முயற்சிகள் குறித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் உருத்ரகுமாரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடந்தவையும் கடப்பவையும் (26)

- உமா மோகன் -

*பன்நெடுங்காலமாய் அந்நியர் காற்றடம் எம்மண்ணில்*
*சொன்னார்கள் பெரியோர்கள் அவர்கால நிலைமையை*

*அந்நிலை போகாமல் இருப்பது என்பது*
*அன்றைய நாளிலும் வேதனை தந்தது*

*வேண்டுவோர் வேதனை தீர்த்திடவும் - அவர்தம்*
*பண்டைய ஊழ்வினை அகற்றிடவும் - அங்கு*

*காவல் தெய்வமாய்த் துர்க்கையம்மன் - புன்*
*முறுவல் செய்தே வீற்றிருக்கும் - அந்த*

*சங்கத்தமிழ் மணக்கும் சந்தனவீதி - எம்*
*சிந்தையில் வந்திடவே தேடின கண்கள்*

*சைவமும் தமிழும் சேர்ந்து வளரும்*
*நறுமணப் பொழில் சூழ்ந்த சந்நிதியின்*

*வரவேற்பு வளைவைக் கண்டபோது - அங்கு*
*தெருவோரம் நின்றோரை மறந்து போனாம்*

*அன்பும்அருளும் தான் வழங்கி ,ஆதரவு அற்றோர்க்கு - நற்*
*பண்போடு ஆதரவும் தான் அளித்து*

*அன்னமிட்டு அரவணைத்து அடியார்கள் நல்லபடி வாழ்வதற்கு*
*நற்சிந்தனையோடு சமய தீட்சையையும் கொடுத்து வரும்*

*நல்லோரையும் நினைந்தவாறு, அம்மனின்*
*எல்லையில்லா அன்பினைப் பெற்றவராய்*

*அவ்வூரைச் சிறப்பித்த வணக்கத்திற்கு*
*உரியவரின் சிறப்பினையும்*
*சொல்லிக்கொண்டே நகருகின்றோம்*

*இவர்*

*பார்த்துப் பார்த்து வளர்த்தெடுத்த*
*நேர்த்தியான மாணவர்கள் பலரிடத்தில்*

*நேரடியாய்த் தமிழ் படித்த பெருமையோடு*
*ஈடு இணையற்ற இப் பெரியவரின் புகழ்*

*கூறுவதில் பெருமை கொள்வேன்,*

*உயர்ந்த சற்று அகன்ற உருவம் - அழகிய*
*பெரிய விழிகளுடன் நன்கு சீவிய சிகை*

*புலமைசார் அவர் உடையில் - மிக*
*அழகாக அவர் இருப்பார் - பின்னாள்*

*கைலாசபதிக் கலையரங்கில் முதன்முதலில் இருந்தபோது*
*அகலவில்லை பலவிழிகள் அவர் உருவைப்பார்த்து - அங்கு*

*படமாகத்தான் அவர் இருந்தார் - எனினும்*
*நெடுநேரம் பார்த்துவிட்டு புலம்பி நின்றோம்*

*அழகும் அறிவும் ஒருங்கே அமைந்த அப் பேராசானிடம் படிப்பதற்கு*
*ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதற்காய்*

*என்றும் அழியா நல்ல தமிழியல் ஆய்வதனை*
*நன்றமிழ் உலகிற்குத் தந்து சென்ற பேராசானின்*

*பன்முகப் பெருமைகளை மென்மேலும் பேசிக்கொண்டே - அவர்*
*கல்வி கற்ற கல்லூரி வரை செல்லுகின்றோம்...*

(தொடரும்)


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# இன்றைய அலைபேசியின் முன்னோடி அலெக்சாண்டர் கிரகாம்பெல்



**தொ**லைபேசியாகத் தொடங்கி, அலைபேசியாக வளர்ந்து இன்று பேசுவதற்கு மட்டுமல்ல் பேச பார்க்க ரசிக்க என, ஆண்ட்ராய்டு மொபைல்கள் மூலம் உள்ளங்கையில் உலகத்தை காணும் அளவிற்கு அறிவியல் வளர்ந்துள்ளது. ஆண்ட்ராய்டு மொபைல் இன்றி ஒரு நாளும்... ஓர் அணுவும் அசையாது என்கின்ற அளவுக்கு நம்மில் பலர் வந்து விட்டோம்.

இதற்கெல்லாம் வித்திட்ட மாபெரும் மேதை தான்,அலெக்ஸாண்டர் கிரகாம் பெல். 1847 மார்ச் 3-ல் ஸ்காட்லாந்து எடின்பேர்க்கில் பிறந்த ஓர் அறிவியலாளர், பொறியாளர், கண்டுபிடிப்பாளர், ஆசிரியர்.

ஆரம்ப கால தொலைபேசியைக் கண்டுபிடித்த மேதை இவர் தான். தனது இளமையில் பிரித்தானியக் குடிமகனாக இருந்தார். பின்னர் அமெரிக்கக் குடியுரிமை பெற்றார். இவருடைய தாயாரும் மனைவியும் காது கேளாதோர் என்பதால் அவரது ஆய்விற்கு இது ஓர் உந்துசக்தியாக அமைந்திருக்கலாம். இவரது ஆய்வுகள் ஊடாக 1876 ஆம் ஆண்டு தொலைபேசி உருவாக்கப்பட்டது. இவர் பெல் தொலைபேசி நிறுவனத்தின் நிறுவனரும் ஆவார்.

அவருடைய குடும்ப நண்பரான அலெக்சாண்டர் கிரகாம் என்பவரின் மேல் மிகுந்த மதிப்பு கொண்டு அவருடைய பெயரையும் சேர்த்து அலெக்சாண்டர் கிரகாம் பெல் என்று இவருக்குப் பெயர் சூட்டப்பட்டது.

அலெக்சாண்டருக்கு மெல்வில்லி ஜேம்ஸ் பெல், எட்வர்டு ஜேம்ஸ் பெல் என்ற இரண்டு சகோதரர்கள். இவர்கள் இருவரும் காசநோயால் மரணமடைந்து விட்டனர். இவருடைய தந்தை அலெக்சாண்டர் மெல்வில்லி பெல் ஒரு பேராசிரியர். தாயார் எலிசா கிரேஸ்.

எட்டு வயதிலேயே கிரகாம் நன்றாகப் பியானோ வாசிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். பத்து வயதான போது அவருக்குப் பள்ளி செல்ல நாட்டமில்லாமல் போனது. இலத்தீன், கிரேக்க மொழிகளைப் படிப்பதைவிட பியானோ வாசிப்பதிலும், ஒலி அலைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் தனது நேரத்தைப் போக்கினார். பேச்சை மின் ஒலியாக மாற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது வந்த காது கேளாத பெண்ணை விரும்பி அவரையே திருமணம் செய்துகொண்டார்.

கிரகாம் பெல்லின் குடும்பம் கனடாவிற்குக் குடி பெயர்ந்தது. போஸ்டன் நகரத்தில் வசித்த போது காது கேளாதோர் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருவதற்காக பெல் ஒரு பள்ளிக் கூடத்தை ஏற்படுத்தினார். அதில் பேச்சுமுறை பற்றிய அடிப்படைகளைக் கற்பித்தார். அவரது ஆய்வுமுறை, அறிவாற்றல் எங்கும் பரவியதால், பாஸ்டன் பலகலைக் கழகம் பேச்சு அங்கவியல் பேராசிரியராக இவரை பணியில் அமர்த்தியது.

பியானோவில் ஒலி எழுப்பி மின்சாரம் மூலமாக அந்த இசையை ஒரு குறிப்பிட்ட தொலைவுக்கு அனுப்பினார் பெல். தந்தி முறையில் வெறும் ஒலிகள் மட்டுமே அனுப்பப்பட்டன. பேச்சுகளையும் அந்த முறையில் அனுப்பலாமே என்று கிரகாமுக்கு 18 வயதிலேயே தோன்றியது. அதனால் அந்த முயற்சிகளில் ஈடுபட்டார். அக்காலத்தில் மனிதனின் பேச்சொலிகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு தந்திகள் மூலம் அனுப்பப்பட்டு வந்தன. அந்த முறைகள் இவருடைய ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாயிருந்தன. 1875 இல் இந்த முயற்சிகள் ஓரளவு வெற்றி பெற்றன. முதலில் தெளிவில்லாத பேச்சொலிகளை அனுப்ப முடிந்தது.

தொலைபேசியில்பதிவான முதல் சொற்றொடர் இது தான்..

1876 ஆம் ஆண்டு உலகின் முதல் தொலைபேச பேசியது பெல். அவருடைய உதவியாளர் வாட்சன் என்பவரிடம் பேசினார். அவர் முதலில் தொலைபேசியில் பேசிய சொற்றொடர் "வாட்சன் இங்கே வாருங்கள். உங்களைக் காண வேண்டும்." என்பதுதான். இந்த சொற்களை வாட்சனால் தெளிவாகக் கேட்க முடிந்தது.

ஆனால் பெல் கண்டுபிடித்த தொலைபேசியைப் பற்றி யாரும் அக்கறை கொள்ளவில்லை அதனால் அவர் மிகவும் சோர்வடைந்தார். பிலெடெல்பியாவில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் தனது தொலைபேசியைப் பார்வைக்கு வைத்தார். அங்கு வந்த பிரேசில் நாட்டு மன்னர் அதை வியப்போடு எடுத்துப் பயன்படுத்திய பின்னர் தான் தொலைபேசியின் பெருமை எங்கும் பரவியது.

அமெரிக்காவில் உள்ள தனது மாமனாரின் உதவியுடன் 1876 மார்ச்சு 7 ஆம் தேதி தொலைபேசிக்கான காப்புரிமையைப் பெற்றார். 1877 இல் தன் உதவியாளர் வாட்சனுடன் சேர்ந்து "பெல் தொலைபேசி கம்பனி" என்ற பெயரில் தொலைபேசி நிறுவனம் ஒன்றை நிறுவினார். தொலைபேசியைக் கண்டுபிடித்ததற்காக பிரெஞ்சு அரசு அவருக்கு வழங்கிய 50,000 பிராங்க் பரிசுத் தொகையைக் கொண்டு வோல்டா ஆய்வுச் சாலை என்ற பெயரில் ஓர் அமைப்பை நிறுவினார்.

பெல் தொலைபேசியுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அரசு நிறுவனத்தின் மூலம் பொட்டோ போன், ஆடியோ மீட்டர், மெட்டல் டிடக்டர், இன்டக்ஷன் பேலன்ஸ், வாக்ஸ் ரிகார்டிங் சிலிண்டர், கிராமபோன் போன்ற கருவிகளைக் கண்டு பிடித்தார். பெல் விமானம் கண்டு பிடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார். ஆனால் அது அவருக்கு வெற்றி தரவில்லை. ஆனால் சில கண்டுபிடிப்புகளைச் செய்தார்.

விமானத்தின் எய்லிரான் என்ற பகுதியைக் கண்டுபிடித்தவர் பெல் ஆவார். பிற்காலத்தில் கடல் விமானத்தைச் சீர்திருத்தி அமைப்பதில் வெற்றி கண்டார்.

ஆடுகள் வளர்க்கும் முயற்சியில் புதுமையைப் புகுத்தினார். ஒவ்வொரு முறையும் இரட்டைக் குட்டிகளை ஈனும் பெண் ஆடுகளை உருவாக்கவும் திட்டமிட்டார். பாலைவனங்களில் நாடுகாண முற்படும் படைவீரர்களுகு, காற்றிலுள்ள மிகுந்த ஈரத்தை வடிகட்டி உதவக் கூடிய அரிய கருவியைக் கண்டுபிடித்தார். காது கேளாதோருக்குப் பேச்சுப் பயிற்சியை வளர்ப்பதற்கான சங்கம் ஒன்றை நிறுவினார். கண் தெரியாதவர்களுக்குப் பிரெய்ல் முறையைக் கண்டு பிடித்த ஹெலன் கெல்லருக்கு பெல் பல உதவிகளைச் செய்துள்ளார். ஒலியியல் அடிப்படையில் உலக ஆங்கிலம் என்பதை உருவாக்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினார். தனிப்பட்ட முறையிலும், பிற அறிவியலறிஞர்களுடன் சேர்ந்தும் 59 கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமையை பெல் பெற்றுள்ளார் என்பது அவருடைய வரலாற்றில் மிக முக்கியமான அம்சமாகும்.

அமெரிக்காவில் உள்ள பாடக் என்ற ஊரில் 1922 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் தேதி அலெக்சாண்டர் கிரகாம் பெல் காலமானார். அவர் மறைந்த தினத்தன்று அமெரிக்காவில் உள்ள தொலைபேசிகள் அனைத்தும் 5 நிமிடங்கள் நிறுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.



# இலங்கையில் மக்கள் போராட்டங்கள் ஆட்சியை மாற்றுமா?

- திருமலை நவம்

தனக்கும் தன்னுடைய அரசாங்கத்துக்கும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இடைக்கால அரசொன்றை அமைக்க கட்சி தலைவர்களுக்கும் பாராளுமன்றில் அங்கம் பெறும் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணையுமாறு கூவி அழைப்பு விடுத்திருக்கிறார் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ. தேசிய நெருக்கடிக்கு தீர்வுகாண ஆதரவு தாருங்கள் என்பது அந்த அழைப்பின் நோக்காக காணப்படுகிறது. அது மட்டுமன்றி "113 ஆசனங்கள் கொண்ட எவரும் வாருங்கள் நாட்டை கையளிக்க தயாராக இருக்கிறேன். அமைச்சுப் பதவிகளை ஏற்று நாட்டின் நெருக்கடியை தீர்க்க உதவுங்கள்" என அவரால் பகிரங்க அழைப்பொன்று விடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை நாட்டின் பல பாகங்களிலும் "கோத்தபாய பதவி விலக வேண்டும். பிரதமர் மஹிந்த எமக்கு வேண்டாம். ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் அனைவரிடமிருந்தும் நாட்டை பாதுகாக்க போராடுகிறோம் அனைவரும் எமது போராட்டத்தில் கலந்து கொள்ளுங்கள் என மக்கள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். "225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பதவிவிலகச் சொல்லுங்கள். இவர்கள் எமக்கு வேண்டாம்" என்று தெருத்தெருவாக மக்கள் கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதனால் நாடு கதி கலங்கிக் காணப்படுகிறது. குழப்பமும் கொந்தளிப்பும் அமைதியின்மையும் நாட்டை சீரழியும் நிலைக்கு தள்ளியுள்ளது.

இப்போராட்டத்தின் பின்னணியில் ஏதாவது கட்சிகள் இருக்கிறதா? அரசியல்வாதிகள் உள்ளனரா? நாடுகள் உள்ளதா? என்று துருவிப்பார்த்தால் யாரும் இருப்பதாக தெரியவில்லை. இதுவொரு தன்னிச்சையான மக்கள் போராட்டமாக வெடித்துள்ளது. இப்போராட்டத்தில் இளைஞர்கள், யுவதிகள், சட்டத்தரணிகள், அதிகாரிகள், கல்விமான்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் எனவும் சிங்களவர், முஸ்லிம்கள், தமிழர்கள் என்ற வேறுபாடின்றி எல்லாத்தரப்பினரும் பங்குகொண்டு வருவதை காணமுடிகிறது. சுருக்கமாக கூறுவதாயின் பசிக்கும் பட்டினிக்குமான போராட்டமாக இது மாறியிருக்கிறது. ஆளும் அரசாங்கத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற தீவிரத்துடன் மக்கள் போராட்டங்களை நடாத்துவதாக விவரிக்கப்படுகிறது.

இதன் எதிரொலியாக அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருந்த அமைச்சர்கள் அனைவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03.04.2022) கூட்டாக பதவிவிலகியுள்ளனர். பாராளுமன்றில் ஆளும்கட்சி ஆசனத்தில் அமர்ந்துகொண்டு அரசை அலங்கரித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தாம் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அறிவித்து வருகிறார்கள். அரசுக்கு ஆதரவு நல்கியிருந்த இரட்டையர்களில் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது சகாக்கள் 14 பேரும் சுயாதீனமாக செயற்படப் போவதாக உண்ணி கழன்றதுபோல் கழன்றுள்ளனர். ஏலவே வெளியேறிய அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் அமைச்சர்கள் கூட்டாக பதவி விலகியது மக்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கான வெற்றி என வாழ்த்தி கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதன் ராஜாங்க அமைச்சராக விளங்கிய ஜீவன் தொண்டமான் அமைச்சுப்பதவியிலிருந்து விலகி தனது கட்சியின் ஆதரவையும் விலத்திக் கொண்டுள்ளார். பங்காளிக் கட்சிகளாக இருந்த 11 கட்சிகள் என அரசுக்கு ஆதரவு நல்கிய உறவினர்களும் கைகழுவிய நிலையில் பிரதி சபாநாயகர் பதவி விலகியுள்ளார். மத்தியவங்கி ஆளுநர் உட்பட பல முக்கிய பதவியாளர்கள் பதவிவிலகிக் கொண்டிருக்கிறார்கள். வெளி நாட்டிலுள்ள இலங்கை தூதரங்களான ஒஸ்லோ பாக்தாத் மற்றும் சிட்னி தூதரங்கள் மூடப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஒட்டு மொத்த நிகழ்வுகளையும் பார்ப்பின் வரலாற்றில் என்றுமே நடந்திராத பயங்கர அரசியல் சூறாவளியொன்று இலங்கையில் வீசிக்கொண்டிருக்கிறது. ஆனால் மக்கள் யாரை பதவி விலகவேண்டுமென்று இப்போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் பதவி விலகிக்கொண்டதாக எந்த செய்தியும் வெளிவரவில்லை.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று கூட்டரசாங்கத்தை அல்லது தேசிய அரசாங்கத்தை அமைக்க தாம் உதவப்போவதில்லை அல்லது இணையப்போதுமில்லை என பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, மற்றும் தமிழ் மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லீம் சமூக கட்சிகளான முஸ்லீம் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மலையக மக்களின் தமிழ் முற்போக்கு கூட்டணி என எல்லாத்தரப்பினரும் கூட்டரசங்கத்துக்கோ அன்றி இடைக்கால அரசாங்கத்துக்கோ தாம் உடன்பாடில்லையென பகிரங்கமா அறிவித்துள்ளனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாட்டின் தலைவராகிய ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாத இக்கெட்டான நிலையொன்று உருவாகியுள்ளது என தெளிவாகவே உணர்த்தப்படுகிறது. எந்தவொரு நாட்டு அரசியல் வரலாற்றிலும் இத்தகையதொரு நெருக்கடியும் இக்கெட்டுக்களும் பதிவாகியுள்ளதாக அறியப்படவில்லை.

இலங்கை தமிழர்களுக்கு எதிராக இறுதிப் போர் நிகழ்ந்த காலத்தில் தெருவில் இறங்கி ஆதரவு தெரிவித்த தென்னிலங்கை மக்கள் பாற்சோற்றை அன்னதானமாக்கியவர்கள் இன்று அரசுக்கு எதிராக வீதியில் இறங்கி போராடிக்கொண்டிருக்கிறார்கள் அதுவும் 69 லட்ச மக்களால் தெரிவாகிய தலைவருக்கு எதிராக இந்த நிலை இன்றைய ஆட்சியாளர்களுக்கு ஏன் உருவாகியது என்ற வரலாற்று பின்னணியை அறியவேண்டியது அவசியமானது.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்த துட்டகைமுனு என ஜனாதிபதி கோத்தபாயாவை புகழ்ந்த சிங்கள மக்கள் இப்பொழுது அவர்களிடமிருந்து இலங்கையை மீட்பதற்கான போராட்டை தொடங்கியிருக்கிறார்கள். பௌத்த சிங்கள பேரினவாதத்தை வெளிக் கிளப்பி அந்த வெறி எழுச்சியில் 69 லட்சம் சிங்கள மக்கள் வாக்களித்து இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய தலைவருக்கு எதிராக இன்று அதே மக்கள் தமது வெறித்தனமான கோபத்தை காட்டும் வகையில் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்புரட்சி செய்யும் துரதிஸ்டவசமான நிலைமை இன்று இலங்கையில் நடந்து கொண்டிருக்கிறது.

இனவாதத்தையும் மதவாதத்தையும் உருவாக்கிய ராஜபக்ஷகளின் குடும்பத்தை அழிக்க வேண்டும் என்று கோஷமிட்டபடி ஆர்ப்பாட்டக்காரார் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

- சுதந்திரக்குப்பின் முதல்முறையாக அரசாங்கத்துக்கு எதிராக ஒரு மக்கள் போராட்டம்.
- அரச தலைவர் மற்றும் ஆட்சியாளர்கள் வீடுகள் சுற்றி வளைப்பு.
- ஐந்து பேர் கொண்ட குடும்ப ஆட்சிக்கெதிரான கிளர்ச்சியாக இது மாற்றப்பட்டிருக்கிறது.
- பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைதர வீழ்ச்சிகளைக் கண்டு விரக்தி அடைந்த மக்களின் முதல் பொருளாதாரப் போராட்டமாக இது எண்ணப்படுகிறது.
- அரசியல் கட்சிகளின் தூண்டுதலோ, பின்னணியோ அற்ற மக்கள் ஆர்ப்பாட்டம் என விவரிக்கப்படுகிறது. பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற அச்சம் ஒரு புறமிருக்க கலைக்கப்படவேண்டுமென்ற கோஷங்கள் தீவிரமடைந்து வரும் நிலை.
- இராணுவ மய ஆட்சி ஏற்படுமா என்ற பீதியும் பயமும் கொண்ட நிலை
- இந்திய இராணுவம் வரவழைக்கப்படுமா? என்ற சந்தேகம்

இத்தனைக்கும் கால்கோள் இட்டதாக காணப்படுகிறது கடந்த 31 ஆம் திகதி 31.3.2022 இலங்கை ஜனாதிபதி வீட்டுக்கு முன் நாத்தப்பட்ட போராட்டம் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலனோர் இளைஞர்கள், யுவதிகள் மின்னாமல் முழங்காமல் இந்தப்போராட்டம் நடாத்தப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை (03.04.2022) அரசாங்கத்துக்கு எதிராக நாடு தழுவிய போராட்டத்துக்கு அழைப்பு விடப்பட்டிருந்த நிலையில் இப்போராட்டம் திடீரென ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு, மின் தண்டிப்பு மற்றும் பொருட் தட்டுப்பாடு, அத்தியாவசிய பொருட்களுக்கான விலையேற்றம் என்பவற்றை முன்வைத்து விரக்தி, வெறுப்பு மெலிட ஆட்சியாளர்களுக்கும் ஜனாதிபதிக்கும் எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் கடந்த 31ஆம் திகதி வியாழக்கிழமை 31.03.2022 நுகேகொடையில் ஜனாதிபதி இல்லம் அமைந்துள்ள மிரிஹானை சந்தியில் மக்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவமானது நாடு தழுவிய அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டமாக மாறும் நெருக்கடியொன்றை உருவாக்கியிருந்தது.

இதனால் சம்பவிடத்துக்கு பொலீசாரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். அமைதியை கொண்டு வருவதற்காக மின்தடை, தொலைதொடர்ப்பு தடங்கல், ஊரடங்கு உத்தரவு என்ற பல தடைகளை விதித்ததோடு முடியாநிலை காரணமாக இராணுவம் பொலீஸ் விஷேட அதிரடிப்படை வரவழைத்து கண்ணீர்ப்புகை பிரயோகம், போலி இறப்பர் குண்டு வீச்சு, தண்ணீர்த்தாரகை பிரயோகம், தடியடி போன்றவற்றை பிரயோகித்து ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்தவேண்டிய நெருக்கடி நிலை உருவாகியிருந்தது. இந்த நெருக்கடிநிலை காரணமாக பல பொதுமக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடகவியலாளர்கள் படுகாயப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். பொது மக்களுக்கும் பொலிசாருக்குமிடையில் வாக்குவாதங்கள் வன்முறைகள் இடம் பெற்றிருக்கின்றன. பொது மக்கள் காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பொலீசார் காயத்துக்குள்ளாகி உள்ளாகியுள்ளனர். வாகனங்கள் பல தீக்கிரை ஆக்கப்பட்டிருக்கின்றன.

1970 ஆம் ஆண்டுக்குப்பின் பட்டினி போரை எதிர்கொண்டிருக்கும் மக்களின் சுய சிந்தனைப் போராட்டமாக இது வெடித்துள்ளது. குறிப்பாக 1953ஆம் ஆண்டு லங்கா சமாசமாஜ கட்சியால் நடத்தப்பட்ட ஹர்த்தால் என்று அழைக்கப்பட்ட நிர்வாக முடக்கப்போராட்டத்துக்கு நிகராக ஆட்சியை மாற்றுவதற்கான போராட்டமாக இது பரிணமித்திருக்கிறது.

நாட்டில் குறிப்பாக கோத்தபாய அரசாங்கத்துக்கு எதிராக ஏன் இந்த ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும் ஏற்பட்டது என்பது சாதாரணமாக ஆராயப்படக்கூடிய அரசியல் நிகழ்ச்சியல்ல. ஆழமாகவும் அடிப்படை தேடலுடனும் ஆராயப்படவேண்டிய சம்பவங்களாகும்.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கிய கொவிட்-19 தொற்று காரணமாக நாடு பொருளாதார ரீதியாக நோய்வாய்ப்பட தொடங்கியது. உள்நாட்டு உற்பத்தியில்லை, ஏற்றுமதிகள் வீழ்ச்சி, உல்லசப்பயணத்துறை படுமோசமாகியது. அலுவலக சேவைத்துறைகள் முடங்கிப்போயின. தனியார் வருமானங்கள் வீழ்ச்சி கம்பனிகளும் தொழிற்சாலைகளும் கூட்டுத்தாபனங்களும் நட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. பெருந்தோட்டத்துறை மற்றும் சிறு கைத்தொழிற்துறை ஸ்தம்பிதம் அடைந்தன. வெளிநாட்டு வியபாரம், வர்த்தகம் ஆகியன தடுமாறிப்போயின.

இவ்வேளையில் தான் விவசாயத்துக்கான உரப்பாவனையில் எந்த திட்டமுமின்றி ஜனாதிபதி கை வைத்துக்கொண்டதனால் ஒட்டு மொத்த விவசாயிகளின் சினத்துக்கும் ஜனாதிபதி ஆளாகவேண்டி வந்தது. விவசாயிகள் நாடு தழுவிய போராட்டங்களை நடத்தினார்கள். தங்கள் எதிர்ப்பை ஜனநாயக வழியில் முன்னெடுத்து சென்றார்கள்.

ஏலவே, அரசியல் மாற்றங்கள் என்றவகையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை காரணம் காட்டி 20ஆவது அரசியல் திருத்தம் மூலம் அதிவல்லமையுடைய அதிகாரங்களை தனதாக்கிக் கொண்டதுடன், நிர்வாக நடவடிக்கைகள் என்ற வகையில் ஜனாதிபதி மேற்கொண்ட நியமனங்களில் இராணுவத் தளபதிகளையும் படைத்துறைசார் துறையினரையும் நியமித்து அரச நிர்வாகத் துறையை இராணுவமயமாக்க முயற்சிக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கள் எதிர்க்கட்சியினராலும் அரச அதிகாரிகளாலும் முன்வைக்கப்பட்டது.

இவையெல்லாவற்றையும் மீறியே கடந்த ஒருவருடத்துக்கு மேலாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விஷம்போல் ஏறிக்கொண்டமை. பால்மா, அரிசி, சீனி, பருப்பு என்பவற்றுக்கு உண்டாகியிருந்த தட்டுப்பாடுகளும், விலையேற்றங்களும் எரிபொருள்களுக்கான தட்டுப்பாடுகள், விலையேற்றங்கள் குறிப்பாக எரிவாயுக்கான தட்டுப்பாடுகள் சாதரணமான பாமர மக்கள் தொடக்கம் மத்தியத்தர மற்றும் சீமான் வாழ்க்கை வாழுகின்றவர் வரை நேரடியாக தாக்கமுற்றட்டன.

எரிபொருள் தட்டுப்பாடு டொலர் பற்றாக்குறை ஆகியவற்றை காரணம் காட்டி மின்வெட்டு என்ற அடிப்படை வசதிகள் மீது கை வைக்கத் தொடங்கியதன் விளைவையே இன்றைய போராட்டங்களின் நதி மூலகங்களாக அமைந்தது. இது ஒரு புறமிருக்க ஜனாதிபதியின் வெளிநாட்டு பொருளாதார அரசியல் கொள்கைகள் மீது நேரடியாகவே வெறுப்புக்கொண்ட சர்வதேச நாடுகளும் நிறுவனங்களும் மேற்கொண்ட சதி-யின் வெளிப்பாடு இவ்வாறு நச்சு வளையம்போல் நாட்டை தாக்கதொடங்கியது.

**(தொடர்ச்சி 27ம் பக்கம்)**

(26ம் பக்கத் தொடர்ச்சி)

# இலங்கையில் மக்கள் போராட்டங்கள் ஆட்சியை மாற்றுமா?

அனுபவமற்ற அதிகாரிகளின் வழிகாட்டல்கள் ஆலோசனைகளை உள்வாங்கிக் கொண்டு எதையுமே தீர அராயாமல் ஜனாதிபதி நாட்டை வழிநடத்த முற்பட்டது, பிழையான வாய்ப்பாடாக போய்விட்டது.

அனைத்தையும் மீறிய பலவீனமாக மாறிய டொலர் பிரச்சனை இலங்கையின் பொருளாதாரத்துக்கு பாரிய பாதிப்பை உண்டு பண்ணியதாக பொருளாதார அறிஞர்கள் சுட்டிக் கட்டுகிறார்கள். இதுவே எரிபொருள் தட்டுப்பாடு, ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்பு, இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிப்பு, மின்துண்டிப்பு அனைத்து சுழற்சிக்கும் காரணமாகியது என்று எடுத்துக்காட்டப்பட்டது.

உள்நாட்டு பொருளாதாரத்துக்கு இத்தகைய ஊறுகளை விளைவித்த டொலரின் வீழ்ச்சியினால் இலங்கை அரசாங்கத்துக்கு அன்னிய நாடுகளிடமும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமும் பெற்ற கடனுக்கான கடன் மீள்செலுத்துகை கடனுக்கான வட்டி இறுப்பு ஆகியவற்றில் பாரிய பாதிப்புக்களை உண்டு பண்ணியதன் ஒட்டுமொத்த விளைவாகவே இன்றைய நெருக்கடிக்கான காரணங்களாக மாறியுள்ளன.

டொலர் இன்மை நெருக்கடி என்பது இவ்வாறு பொருளாதார முறையில் விளக்கப்படுகிறது. உலக வங்கியின் ஒரு பிரதான பிரிவாக இயங்கிவருவது சர்வதேச நாணய நிதியம் இதை ஆங்கிலத்தில் (I.M.F) என்று அழைப்பார்கள். உலக நாடுகளின் நாணய நிதிக்கொள்கையை தீர்மானிப்பதில் இந்நிறுவனம் பிரதான பங்கு வகிக்கிறது. இதில் முக்கியமான விடயம் அமெரிக்க டொலரின் பெறுமதியிலையே நாடுகளின் நாணயங்கள் மதிக்கப்படும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இலங்கை தனது பொருளாதார நடவடிக்கைகளுக்காக குறித்த அளவு டொலரை இருப்பாக சர்வதேச நாணய நிதியத்திடம் வைத்திருக்கவேண்டும். உதாரணமாக 6 பில்லியன் என அவை வரையறுக்கப்பட்டிருந்தபோதும் அந்தளவு இருப்பை பேணாததன் காரணமாகவும் டொலரை பெறும் வருமான மூலகங்களாக ஏற்றுமதிகள், சுற்றுலாத்துறை, நாடுகளின் கடன் சர்வதேச நிதிநிறுவனங்களின் கடன்கள், உதவிகள், நன்கொடைகள் என்பன தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டதே இன்றைய டொலர் பற்றாக்குறைக்கான காரணங்களாக மாறியுள்ளன.

இனி தற்போதைய போராட்ட நிலைமைகளையும் அதன் மறுதலிப்புக்களையும் பார்ப்போம். கடந்த ஒரு வாராமாக இந்த ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அரசாங்கம் அல்லது பாராளுமன்றம் கலையும் மட்டும் இப்போராட்டங்கள் தொடரலாம். ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகவேண்டும் என்ற கோஷங்கள் இடம்பெறவேண்டுமாயின் அவ்வாறனதொரு நிலைமை தோன்றுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஜனாதிபதி பதவிவிலகுவதற்கோ அன்றி பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படுவதற்கோ சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரியவில்லை. இவை இடம்பெறவேண்டமாயின் அரசியல் யாப்புக்கு அமைய காரியங்கள் நடந்தேறவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

ஆனால், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவரும் மக்கள் எழுப்பும் கோஷங்கள் அவற்றை வலியுறுத்துவதாகவே அமைகிறது.

ஜனாதிபதி அவர்களே அமெரிக்காவுக்கு ஓடுங்கள்.
ஒரு குடும்பத்தை பாதுகாக்கவா அவசரகால சட்டத்தை பிறப்பித்துள்ளீர்கள்.
இலங்கை மக்களாகிய எங்கள் எதிர்காலம் எங்கே?
நீங்கள் திருடிய பணத்தை திறைசேரியில் இடுங்கள்.
டொலர் இல்லை என்றுகூறி எமது பணத்தை வெளிநாட்டுக்கு அனுப்புகிறீர்கள்
மக்களே பசிபோக்க எங்களோடு வந்து சேருங்கள்.
ராஜபக்ஷக்களின் ஆட்சி எமக்கு வேண்டாம்.


இவ்வாறு காரசாரமான கோஷங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கும் எதிரான இத்தகைய நெருக்கடிகளும் ஆர்ப்பாட்டங்களும் ஆரவாரங்களும் மக்கள் எழுச்சிகளும் அரசாங்கத்தை மாற்றியகைக்கப்போகிறதா ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை பதவியிலிருந்து தூக்கி எறியுமா? பாராளுமன்றம் கலைக்கப்படுமா? என்ற சந்தேகங்களையும் எதிர்பார்ப்புக்களையும் சங்கடங்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இதேவேளை பலம்பொருந்திய ஆட்சியை அமைத்துள்ளோம் என்று பெருமை பேசிக்கொண்டிருந்த இன்றைய ஆட்சியாளர்களான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சி பாராளுமன்றில் பெரும்பான்மையை இழக்கும் நெருக்குவாரமொன்று உருவாகியுள்ளது என்பது தவிர்க்கமுடியாத உண்மையாக காணப்படுகிறது.

2020ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலுக்குப்பின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கான கூட்டணிக்கு 145 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றதுடன், மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட ஆதரவுடன் ஆட்சி அமைக்கப்பட்டது.

இன்றைய அரசுக்கு எதிரான நெருக்கடிகள், ஆர்ப்பாட்டங்கள் என்பன தலைதூக்கி நிற்கும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்தரிபாலசிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சேர்ந்த 14 பேரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த 10 பேரும் அரச பங்காளிக் கட்சிகளை சேர்ந்த 15 பேரும், இரலங்கை தொழிலாளர் காங்கிரஸை சேர்ந்த 2 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸை சேர்ந்த ஒருவருமாக மொத்தமாக 42 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ள நிலையில் ஆளும் கட்சியினுடைய பலம் தற்பொழுது குறைவடைந்துள்ளது. இந்நிலையில் பொதுஜன பெரமுன 113 என்ற பெரும்பான்மையை இழக்கவேண்டிய நிர்க்கதி ஏற்பட்டுள்ளது. அண்மையில் பொதுஜன பெரமுன சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்துக்கு 160 வாக்குக்கள் அளிக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது இவ்விடத்தில் கவனத்துக்குரிய விடயமாகும். இவ்வாறான அரசுக்குத்தான் நெருக்கடி நிலையொன்று தற்போது உருவாகியுள்ளது. இந்நிலையில் பாராளுமன்றுக்கு என்ன நடக்கப்போகிறது? பிரதமர் என்ன செய்யப்போகிறார்? ஜனாதிபதி என்ன முடிவை எடுக்கப்போகிறார்? என்பதெல்லாம் மக்களும் சர்வதேசமும் நிதானமாக அவதானித்துக்கொண்டிருக்கிறது.

---



மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்




# 'மஹாகவி' பாரதி பாடல்கள்

அத்தியாயம் - 16

"புவியனைத்தும் போற்றத் தமிழ் மொழியைப் புகழில் ஏற்ற, கவியரசன் இல்லை யென்ற குறை என்னால் தீர்ந்தது".

"நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற்குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல்
உமைக்கினிய மைந்தன் கணநாதன்,
நம் குடியை வாழ்விப்பான்!
சிந்தையே இம்மூன்றும் செய்!", என்றும்
சுவை புதிது
பொருள் புதிது
வளம் புதிது
சொல் புதிது
சோதிமிக்க நவகவிதை, என்று

சூளுரைத்த கவித தெய்வம் சுப்பிரமணிய பாரதியை எந்நாளும் வணங்கிடுவோம்.






"எட்டயபுரத்துக் கருப்பையைக் கொண்டதாய்,
எப்படிப் பெற்றாள் இந்தச் சூரிய நெருப்பை

என்று வியந்து வியந்து நோக்கும் வண்ணம், அவரால் எழுதப்பட்ட கவிதைகளும், பாடல்வரிகளும் தமிழ் சினிமாவின் இலக்கியக் கற்பு சேதமுறாமல் தொடர்வதற்க்கும் உதவியதே எனப் பேரானந்தம் கொள்கிறேன்.

திரைப்படத்தின் காட்சிகளுக்கு ஏற்ப தேவையான நவரசங்களை வெளிப்படுத்தும் பாடல்வரிகள் பாரதியின் கவிதை வரிகளுள் செறிந்திருப்பதால் தான் அவை திரைப்படங்களிலும் வெற்றிகரமாகப் பாவிக்கப்பட்டன.

பாரதி நினைவு நூற்றாண்டு கொண்டாடப்பட்டு வரும் இக்காலத்தில் நானும் பாரதி ஐயாவை நினைவு கொண்டு எழுத வேண்டும் என எண்ணிய முயற்சியும் - தேடலும் இதுவாகும்.

எதிர்காலத்தில் நமது பிள்ளைகள் "பாரதி ஐயா" பற்றி அறியவோ - எழுதவோ - ஆய்வு செய்யவோ முன்வரும்போது - எனது தொடர் கட்டுரைச் செய்திகள் பயன் தருமானால் மிகுந்த பேருவகை அடைவேன்!

"மகாகவி" பாரதியின் திரைப் பாடல்கள் முழுமையும் நமக்கு கிடைக்கவில்லை. எனக்கு கிடைத்த அல்லது எனது சினிமா நினைவில் உறைந்திருந்த பாடல்கள் மட்டுமே பதிவாகியுள்ளன.

மகாகவி பாரதி ஒரு "வரகவி"யாவார். காளியின் அருள் பெற்றவர். பால பருவத்திலேயே யாப்பிலக்கணத்துடன் கூடிய செய்யுள்களையும் - தாளகதியுடன் பாடல்களையும், எழுதும் ஆற்றல் பெற்றிருந்தவர். ஆனால் அவரது வாழ்நாளில் அவரது கவிதைகள் பெற்றிருக்க வேண்டிய முழுமையான மரியாதையை பெறவில்லை என்பது பொதுவானதொரு கருத்தாகும். ஏனெனில், அன்றைய கால ஆங்கிலேய ஆட்சியை பாரதி எதிர்த்த காரணத்தால், அவரது கவிதைகள் மீதான தடைகள் இருந்தன. அதையும் மீறித்தான் அவரது தேசபக்தி பாடல்கள் சுதந்திர தாகத்துடன் வீறுகொண்டு பாடப்பெற்றவையாகும்.

தனது பாடல்களை பாரதியே ராகத்துடன் பல பொதுக்கூட்டங்களில் பாடியிருக்கிறார். தனது பல இசை பாடல்களுக்கு ராகம், தாளம், ஸ்வரவரிசையையும் பாரதியே எழுதியுள்ளார்.

பாரதியின் எழுத்துலகில் அவரது கவிதைகளின் பங்களிப்பு சுமார் 10% மட்டுமே! அவரது பத்திரிகைப் பணியில் செய்தி கட்டுரைகள், மொழிபெயர்ப்பு கட்டுரைகள், சிறுகதைகள், புதினங்கள், மதிப்புரைகள், கடிதங்கள், சித்திர விளக்கங்கள், வரலாற்று கட்டுரைகள் ஆகியவை இன்னமும் தமிழ் வாசகர்கள் அனைவரும் அறிந்தாரில்லை. மக்களுக்கும் அறியத் தரப்படவில்லை என்பது துர்ப்பாக்கியமே!

தனது குறுகிய வாழ்நாளில் அவர் நிகழ்த்தி சென்ற சாதனைகளை நாம் எட்ட வேண்டுமானால், அதற்கு தெய்வத்தின் கருணை வேண்டும். அத்தனையும் எழுதிக் குவித்திருக்கிறார். ஒருமுறை கவியரசு கண்ணதாசன் "பாரதி" கவிதை தொகுப்பு நூலைக் கையில் வைத்துக்கொண்டு நூலையே பார்த்துக் கொண்டிருந்ததை கண்ணுற்ற அவரது உதவியாளர், அண்ணே! வெகுநேரமாக கையில் வைத்துப் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள்.

"அட தம்பி! நான் பல நூல்களை எழுதியுள்ளேன், பாரதி ஒரே தொகுப்புக்குள் உலகையே அடக்கி விட்டான். ஆச்சரியமாக வியக்கிறேன்"! என்றாராம்.

அப்படி எழுதிக் குவித்திருக்கிறார். குறுகிய வாழ்நாளில் இது தெய்வபலம்.

அதுபோலவே, பாரதியின் பாடல்கள் மக்களை கவர்ந்த காரணத்தால் பல திரைப்படங்களிலும் இடம் பெற்றிருக்கின்றன. கடந்த பல ஆண்டுகளில் பாரதியின் கவிதைகள் பல திரைப்படங்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், தமிழ் இலக்கிய உலகின் மெத்தனத்தால் தமிழின் தவப்புதல்வர் மகாகவி பாரதியின் திரைப் பாடல்களின் பட்டியல் கூட முழுமையாக நம்மிடம் இல்லை என்ற வேதனை இங்கு பதிவு செய்தாக வேண்டியுள்ளது!


பாரதியின் வாழ்க்கையில் பொதுவான சில குறிப்புகளை வாசகர்களுக்காக பதிவு செய்கிறேன்.

* எட்டையபுரம் சமஸ்தானப் புலவர்கள் "பாரதி" என்ற பட்டம் வழங்கினர்.
* தன்னை "செல்லிதாசன்" என்று அழைத்துக்கொண்டார்.
* தமது "பூனூலை" கனகலிங்கம் என்ற ஆதி திராவிடர்க்கு வழங்கினார்.
* தம் பாடல்களுக்கு தாமே மெட்டமைத்த கவிஞர்.
* 1905ல் "சக்கரவர்த்தினி" என்ற இதழை தொடங்கினார்.
* "கர்மயோகி" - "பாலபாரதி" இதழ்களை நடத்தினார்.
* "சுதேசமித்திரன்" துணை ஆசிரியர்.
* "இந்தியா" இதழின் ஆசிரியர்.
* சென்னை ஜனசங்கம் இதழை நடத்தினார்.
* சகோதரி நிவேதிதாவை சந்தித்த பின் தீவிரவாதி ஆனார்.
* இவரின் "ஞானகுரு" சகோதரி நிவேதிதா தேவி.
* இவரின் "அரசியல் குரு" லோகமான்ய திலகர் இவர்.
* அறிந்த மொழிகள் 14 ஆகும்.

அடுத்த இதழில் இத்தொடர் நிறைவு பெறும். - *வீணை மைந்தன்.*

# இலக்கிய வெளியில் சர்ச்சையை கிளப்பிய குரு அரவிந்தனின் 'சதிவிரதன்'

- சுலோச்சனா அருண்




**செ**ன்ற ஞாயிற்றுக்கிழமை (3-4-2022) இலக்கிய வெளியின் 19வது இணைய வழிக்கலந்துரையாடலில் "சிறுகதை நூல்களைப் பற்றிப் பேசுவோம்" என்ற தலைப்பில் புலம்பெயர்ந்தோரின் 4 சிறுகதைத் தொகுப்புக்கள் திறனாய்வுக்கு எடுக்கப்பட்டன. முறையே வ.ந.கிரிதரனின் "கட்டடக்கா(கூ)ட்டு முயல்கள்" பற்றி சு.குணேஸ்வரன், குரு அரவிந்தனின் "சதிவிரதன்" பற்றி முனைவர். கோவிந்தராயூ (இனியன்), சாத்திரியின் "அவலங்கள்" பற்றி தானாவிஷ்ணு, சயந்தனின் "பெயரற்றது" பற்றி ந.குகபரன், ஆகியோர் உரையாற்றினார்கள். புலம்பெயர்ந்த மண்ணில் தங்கள் நேரத்தைச் செலவிட்டு இதுபோன்ற மிகச்சிறந்த சிறுகதை வடிவங்களைத் தமிழில் உருவாக்கித் தந்த எழுத்தாளர்களையும், இந்த நிகழ்வை சிறப்பாக ஒழுங்கு செய்து நடத்திய எழுத்தாளர் அகில் அவர்களையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பாராட்டினார்கள். சிலர், தமிழ் இலக்கியம் இன்னும் செழித்து வளர, இது போன்ற இன்னும் பல நிகழ்வுகள் தொடர்ந்தும் இடம் பெறவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்கள்.

கேள்வி நேரத்தின் போது பலரும் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். மணிமேகலைப் பிரசுரத்தின் வெளியீடாக வெளிவந்த குரு அரவிந்தனின் "சதிவிரதன்" பற்றி, நிகழ்வில் பங்குபற்றிய ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வி சர்ச்சைக்குரியதாக எடுக்கப்பட்டுப் பலராலும் விவாதிக்கப்பட்டது. இந்தச் சிறுகதை நூல் பற்றித் திறனாய்வு செய்த தமிழகத்தைச் சேர்ந்த முனைவர் கோவிந்தராயூ அவர்கள், மொத்தமாகப் 17 கதைகள் இதில் இடம் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டு, எல்லாக் கதைகளுமே மிகவும் சிறப்பாக, வெவ்வேறு கோணத்தில் அமைந்திருக்கின்றன, ஆனாலும் நேரம் கருதி சில கதைகளை மட்டுமே தெரிந்தெடுத்து தனது கருத்துக்களைச் சொல்வதாகக் குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக நூலில் இடம் பெற்ற சுமை, 401, சிந்துமனவெளி, சௌளப்படி, அட மானிடா நலமா?, சதிவிரதன் போன்ற கதைகளைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

இலங்கையில் நடந்த யுத்தத்தின் பின் நடந்த ஒரு சம்பவத்தைச் "சுமை" என்ற கதை குறிப்பிடுகின்றது. வறுமைச் சூழ்நிலை காரணமாக, சிறையில் வாடிவதங்கி முதுமையின் இயலாமையோடு வெளிவந்த அப்பாவியான பெற்ற தகப்பனையே, சுமையாக நினைக்கும் மகளைப் பற்றியது. சிறை வாழ்க்கையும், வறுமையும் எவ்வளவு கொடியது என்பதை எடுத்துக் காட்டும் கதையிது. இந்தக் கதையின் கடைசி வரிகள் தன்னை உறைய வைத்து விட்டதாக அவர் குறிப்பிட்டார். இந்தக் கதை கனடா தமிழ் வானொலி நடத்திய போட்டியில் முதல் பரிசு பெற்றது. உதயன் பத்திரிகையிலும் வெளிவந்தது. இன்னுமொரு கதை "சிந்துமனவெளி" என்பது, கணவன் மனைவிக்கான உறவைக் குறிப்பது. சந்தேகம் எவ்வளவு பொல்லாதது என்பதை எடுத்துக் காட்டுகிறது கனடா உதயனில் வெளிவந்த, இந்தக் கதை.

"சௌளப்படி" என்ற கதை தமிழகத்தில் இருந்து வெளிவரும் "இனிய நந்தவனத்தில்" வெளிவந்தது. வயதுக்கு வந்த பெண்களை மாதத்தில் மூன்று நாட்கள் இருட்டறைக்குள் ஒதுக்கி வைத்து, சிறைக் கைதிகள்போல, ஆண்கள் மட்டுமல்ல மூத்த பெண்களும் சேர்ந்தே வேடிக்கை பார்த்த அன்றைய சமூகத்தின் மனநிலையை எடுத்துக் காட்டும் கதையிது. இன்றும் தமிழ் நாட்டில் சில இடங்களில் இதுபோன்ற கொடுமை நடக்கிறது என்று இனியன் அப்போது குறிப்பிட்டார். "அட மானிடா நலமா?" கூர்க்கனடாவில் வெளிவந்தது.

ஆறறிவு கொண்ட மானிடரைவிட அறிவில் கூடிய ஒரு கூட்டத்திடம் தற்செயலாக அகப்பட்ட ஒரு இளம் பெண்ணையும், ஆணையும் பற்றிய கதையிது. இந்தக் கதையின் முடிவிலும் "நலமெடுத்தல்" என்ற அழகான தமிழ் சொல்லை ஆசிரியர் பாவித்திருக்கின்றார். "மானிடருக்கு மகிழ்ச்சி தருவதில் உடலின்பமும் முக்கிய இடம் வகிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும், அதையும் வேண்டுமென்றே எடுத்து விட்டால் வாழ்வதில் என்ன பயன்?" என்ற கேள்வியை அப்போது எழுப்பினார்.

நூலின் தலைப்பாக இடம் பெற்ற கதை "சதிவிரதன்". என்னதான் அறிவியல் முன்னேறினாலும், இயற்கையின் தேவைகள் அவ்வப்போது தவிர்க்க முடியாமல் குறுக்கிடத்தான் செய்யும் என்பதை எடுத்துச் சொல்லும் கதையிது. தமிழகத்தில் இருந்து வெளிவரும் "இனிய நந்தவனம்" இதழில் சர்ச்சைக்குரிய இந்தச் சிறுகதை வெளிவந்திருந்து.

மெய்நிகர் நிகழ்வில் பங்குபற்றிய ஒருவர் இந்தத் தலைப்பு ஏற்படையதாக இல்லை என்று தனது கருத்தை முன்வைத்தார். காரணம் "சதிலீலாவதி என்று ஒரு படம் வெளிவந்தது, அது போல எதையாவது வைத்திருக்கலாம், "சதிவிரதன்" என்ற ஒரு சொல்லே இல்லை, அதற்கு ஒரு அர்த்தமும் இல்லை" என்று குறிப்பிட்டார்.

அப்போது முனைவர் கோவிந்தராயூ "அதனால்தான் எழுத்தாளர் குரு அரவிந்தன் அந்த சொல்லைப் புதிதாக உருவாக்கி இருக்கின்றார். கணவனுக்கு உண்மையாக மனைவி இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது போல, மனைவிக்கு உண்மையாகக் கணவனும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லையே" என்று சுட்டிக்காட்டி, "சதிபதி" என்ற சங்க இலக்கியச் சொல்லை முன்வைத்து, "பதிவிரதை" என்ற சொல்லின் எதிர்ப்பால்தான் "சதிவிரதன்" என்று விளக்கம் தந்தார்.

ஆனாலும் முனைவரின் விளக்கத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அவர் "ஆளுக்காள் இப்படியான புதிய சொற்களைத் தமிழ் மொழிக்கு அறிமுகப் படுத்துவதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது, "சதி" என்றால் "சூழ்ச்சி" என்றுதான் பொருள் படுமே தவிர மனைவியை அல்ல" என்று உடனே வாதிட்டார். "எங்களால்" என்று அவர் யாரைக் குறிப்பிட்டார் என்பது தெரியவில்லை.

"ஒரு எழுத்தாளனுக்குப் புதிய சொல்லை உருவாக்குவதற்கான உரிமை உண்டு. சங்ககாலத்தில் இருந்து இப்படியாக உருவாக்கப்பட்ட தமிழ்ச் சொற்கள்தான், குறிப்பாக வள்ளுவர், கம்பன், இளங்கோவடிகள் மற்றும் புலவர்கள், சான்றோர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட சொற்கள்தான் இன்று அகராதியில் இடம் பெற்று இருக்கின்றன. எழுத்துக்களைப் படைப்பவன் என்பதால்தான் எழுத்தாளனைப் "பிரமன்" என்கிறோம். படைப்பாளி என்ற வகையில் எழுத்தாளர் குரு அரவிந்தனுக்கு அந்த உரிமை உண்டு." என்று முனைவர் சுப்ரமணிய ஐயா அவர்கள் எடுத்துரைத்தார்.

மேலும் அவர் குறிப்பிடும் போது, "பேசாப்பொருளைப் பேசுவது எழுத்தாளனுக்கு மிகவும் அவசியமானதாகும். ஒரு காலகட்டத்தில் சமூகக் கட்டுப்பாடுகள் காரணமாகச் சொல்லத் தயங்கியதை ஜெயகாந்தன் துணிந்து பேசவந்ததால்தான் ஜெயகாந்தனை நோக்கி இலக்கிய ஆர்வலர்களின் பார்வையும் திரும்பியிருந்தது. அது போலத்தான் குரு அரவிந்தனின் சிலகதைகளும" இதில் இடம் பெற்றிருக்கின்றன. அதனால் சமுதாயத்திற்கு நன்மை தருமெனில், சீர்திருத்தம் பெறுமெனில் அதில் தவறில்லை." என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பங்குபற்றியவர்களில் ஒருவரான எழுத்தாளர் அகில், "தமிழில் ஒரு சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. சதி என்றால் சூழ்ச்சி என்பது மட்டுமல்ல, மனைவி என்ற அர்த்தமும் உண்டு. "சதி" வழமை என்பது முற்காலத்தில் "பதி" யான கணவனுடன் சேர்ந்து உடன் கட்டை ஏறுவது, 1800 களின் தொடக்க காலத்திலும் சில இடங்களில் இந்த வழக்கம் இருந்திருக்கிறது" என்று இணையத்தளத்தில் இருந்த விளக்கத்தையும் தந்தார். எழுத்தாளர் வ.ந. கிரிதரன், எழுத்தாளர் போல் ஜோசெப் ஆகியோரும் முன்னாள் பேராசிரியர் முனைவர் சுப்ரமணிய ஐயாவின் கருத்தை ஆமோதித்து தமது கருத்துக்களையும் முன்வைத்தனர்.

இந்த மெய்நிகர் நிகழ்வின் மூலம், எழுத்தாளர் குரு அரவிந்தன் உருவாக்கிய "சதிவிரதன்" என்ற சொல் சான்றோர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது, தமிழ் இலக்கியப் பரப்பிற்கு ஆரோக்கியமானது என்றே நான் கருதுகின்றேன். இது போன்று இன்னும் பல புதிய சொற்களை எழுத்தாளர் தமிழுக்குத் தரவேண்டும் என்று வாசகர் வட்டத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்
சிறுகதைத் தொகுப்பு
நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய
சர்வதேச சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற 16 சிறுகதைகள் அடங்கிய
'சர்வதேச தமிழ்ச் சிறுகதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு
ஏப்ரல் மாதம், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில்
வெளியிட இருப்பதால், இலக்கிய ஆர்வலர்களை இந்த நிகழ்வில்
கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்:
ஏப்ரல் 17, 2022
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3:00-6:00 மணிவரை

இடம்:
Bhairavi Music Academy
27 Casebridge Ct. Unit- 5
Scarborough, ON
M1B 4Y4






தலைவர்: குரு அரவிந்தன்
செயலாளர்: ஆர்.என். லோகேந்திரலிங்கம்

தொடர்புகளுக்கு: (647) 274-2618
அல்லது (416) 732-1608




30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Coriander
Chilli
Jaffna
Briyani
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோ கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
My 123 Mini Library
NESCAFE Sunrise
Baidyanath
MAHANARAYAN TAILA
Fair & Lovely
BRU
KILLI
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 51)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

இதைக் கேட்ட இளவரசர் கோபம் கொதிக்க, 'ஊமை ராணிக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்தால் என்னால் பொறுக்க முடியாது பழுவேட்டர் குலத்தை பூண்டோடு அழித்து விட்டு மறு காரியம் பார்ப்பேன்' என்றார். 'நான் உடனே தஞ்சை போக வேண்டும் நாளை காலை ஒரு வியாபாரி வேடமிட்டு இவனையும் அழைத்துக் கொண்டு போகிறேன்' என்றார். மறுதினம் பொன்னியின் செல்வரும், முருகையனும் வீதியில் இறங்கினர். அப்பொழுது ராக்கம்மாள் ஓடிவந்தாள். இளவரசர் என்று கண்டு கொண்டாள். உடனே 'சக்கரவர்த்தியின் திருமகனே வீராதி வீரனே பொன்னியின் செல்வா! சோழ நாட்டின் தவப் புதல்வா தாங்கள் பிழைத்து வந்தீர்கள் என் கண்கள் என்ன பாய்கியம் செய்தன!' என்று கூச்சலிட்டாள். இதைக் கேட்டு வீதியில் போய்க் கொண்டு இருந்தவர்கள் எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள். உடனே முருகையன் அவளைத் தடுக்க எண்ணினான். ஆனால் முடியவில்லை. இளவரசனும் பலவாறு முயன்று பார்த்தார். அவராலும் முடியவில்லை. மக்கள் பெருவாரியாகக் கூடினார்கள். பொன்னியின் செல்வர் வாழ்க! ஈழம் கொண்ட வீராதி வீரர் வாழ்க! என்று பெரிய கோஷம் எழுப்பினர். அப்பொழுது அந்தக் கூட்டத்தில் தலைவன் ஒருவன் முன்வந்து, 'கோமகனே தாங்கள் பாதம் பட்டது இந்த நகரின் பாய்க்கியம் எங்கள் உபசாரத்தைப் பெற்றுக் கொண்டு போக வேண்டும்' என்றான். இளவரசரால் மக்களின் அன்பை மீறிக் கொண்டு போக முடியவில்லை அவர்கள் மனக் கஸ்டம் அடைவார்கள். இவர்களை சமாதானப் படுத்தி மதியம் மட்டும் இருந்து போவதாக முடிவெடுத்தார் 'என்னை வெளிப்படுத்தினால் நகரில் குழப்பம் உண்டாகும் என்று குந்தவை சொல்லியிருந்தாள் அது எவ்வளவு உண்மை' என்று உணர முடிகிறது நகரத் தலைவரை நோக்கி 'ஐயா மக்களின் அன்பை புறக்கணிக்க விரும்பவில்லை ஆனால் நான் அவசரமாக தஞ்சை போக வேண்டும் மதியம் வரை இருந்து விட்டு போகிறேன்' என்றார். 'இளவரசே புயல் மழை காரணமாக சாலைகள் எல்லாம் தடைப்பட்டுக் கிடக்கின்றன கால் நடையாக சென்று எப்பொழுது போயச் சேர்வீர்கள் தங்களை யானை மீது வைத்து ஊர்வலமாக அனுப்புகிறோம் நாங்கள் அனைவரும் தஞசாவூர் வந்து விட்டு வருகிறோம்' என்றார். இளவரசர் தங்கியிருக்கிறார் என்றதும் மக்கள் குதுாகலித்தனர். வாத்தியங்கள் முழங்கியது. கத்தி விளையாட்டுக்கள், களி விளையாட்டுக்கள், குரவைக் கூத்து என்பன ஆரம்பமாகியது. இளவரசர் இளைப்பாற முடியவில்லை திரள் திரளாக சனங்கள் வந்து இளவரசரைப் பாரக்க வேண்டும் என்ற ஆவலைத் தெரிவித்தனர். அவரும் வெளியில் வந்து அவர்களைப் பார்த்து அவர்களுடன் உரையாடினார். பின்னர் விருந்து உபசாரம் முடிவடைந்தது இளவரசர் மேல் மாடத்தின் முகப்பில் வந்து கை கூப்பி நின்றார். அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று நின்றது. ஊர்வலம் புறப்பட யாவரும் ஆயத்தமாக நின்றனர். ஆர்ப்பபாட்டமாக இருந்தது. இளவரசர் மனக் கவலை பெருகிக் கொண்டேயிருந்தது. ஈழத்து ராணியின் கதி என்ன? சக்கரவர்த்திக்கு எதிராக ராஜ்ஜியத்தை கைப்பற்ற விரும்பும் பழுவேட்டரையர் என்ன சொல்லிக் கொண்டிருந்தார். இந்த மக்கள் செய்யும் ஆர்ப்பாட்டம் அதை நிரூபித்து நிற்கிறது நகரத் தலைவர் பேசியது அதாவது, பழுவேட்டரும், சிற்றரசர்களும் சேர்ந்து சக்கரவர்த்திக்கு பின்பு மதுராந்தகருக்கு முடி சூடத் தீர்மானித்துள்ளார்கள். அவர் போர்க்களம் சென்று அறியாதவர் அதனால் பழுவேட்டரையர் நாட்டை ஆள்வார்கள் சிற்றரசர்கள் சட்டம் போடுவார்கள் ஆதித்தகரிகாலரிற்கு முடி சூட விருப்பம் இல்லை என்கிறார்கள். அதனால் அடுத்து பட்டத்திற்கு வருவதற்கு தகுதி உள்ளவர் நாம் தான் அதற்கு மக்களும் ஆமோதித்தனர் 'ஐயா நீங்கள் எல்லோரும் என்னிடம் கொண்டுள்ள அன்பை பற்றி நான் ஆனந்தம் கொள்கிறேன் அடுத்து பட்டத்திற்கு உரிமை பற்றி சக்கரவர்த்தி தானே த ீர்மானிக்க வேண்டும் நானும் நீங்களும் பேசுவது முறையாகாது' என்றார் இளவரசர். 'இளவரசே தங்களுடன் தொடர்ந்து தஞ்சைக்கு வந்து அவருக்குப் பிற்பாடு தாங்கள் தான் சிங்காசனம் ஏற வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்வோம் பின்னர் அவர் முடிவு செய்யட்டும்' என்றனர். இதைக் கேட்ட இளவரசர் 'வாருங்கள் புறப்படுவோம்' என்றார். சிறிது நேரத்தில் இளவரசர் யானை மீதேறி பிரயாணப்பட்டாார். அவரைத் தொடர்ந்து பெரிய ஊர்வலம் தஞ்சை நோக்கிப் புறப்பட்டது ஊர்வலம் பெரிதாகிக் கொண்டே போனது. இதே நேரத்தில்தான் ஆதித்தகரிகாலன், வந்தியத்தேவன், மணிமேகலை, நந்தினி ஆகியோர் வீர நாராயண ஏரியின் கரையில் உள்ள நீராழி மண்டபத்தில் இருந்து மணிமேகலையின் தந்தை சம்புவரையர் அனுப்பிய பெரிய கப்பலில் ஏறிக் கடம்பூர் சென்றனர். அந்தப் பெரும் புயலில் அகப்படாமல் நால்வரும் பாதுகாப்பாக இருப்பது கண்டு சம்புவரையர் பெருமூச்சு விட்டார். இதே வேளை நாகபட்டினத்தில் அருள் மொழிவர்மரும், தலைமைப் பிக்குவும் அங்கு அடித்த பெரும் புயலில் அகப்படாமல் முருகையனின் படகில் ஏறி ஆனைமங்கல சோழ மாளிகைக்கு சென்றனர். இந்த தருணத்தில் தான் பெரிய பழுவேட்டரையரும் கடம்பூரில் இருந்து தஞ்சை நோக்கிப் புறப்பட்டார். அவர் கொள்ளிடத்தைக் கடக்க திருவையாற்றுக்கு நேராகச் சென்றார். மக்களின் கவனத்தை ஈர்க்காது இருக்கும் பொருட்டு பத்துப் பேருடன் பயணம் செய்தார். படகில் ஏறியபோது பெரும் புயல் காற்றினால் படகு ஆட்டம் கண்டது. படகோட்டிகள் பெரும் அவலப்பட்டார்கள் படகு முன்னோக்கிச் செல்லாது வட்டமிட்டு சக்கரம் போல் சுழன்றது. தஞ்சைக்குப் போய் மதுராந்தகரை அழைத்து வரும்படி ஆதித்ததரிகாலன் கேட்டுக் கொண்டான். அதற்கு நந்தினியும் ஆமோதித்து வலியுறுத்தினாள். இதை நிறைவேற்ற பெரியபழுவேட்டரையர் சென்று கொண்டிருந்தார். அவர் உள்ளத்தில் பல கேள்விகள் எதை நாம் செய்ய உத்தேசிக்கும் போது நாம் செய்வது சரியாக இருக்குமோ என்று சிந்திக்க வேண்டும் நாம் செய்வோம் என்று மற்றவர்களிடம் வாக்குக் கொடுத்தால் முடிந்தவரை அதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். வாக்கு கொடுக்க முன் பலத்த யோசனை செய்து முடிவெடுக்க வேண்டும் நாம் செய்ய வேண்டியவற்றை செய்ய முற்பட்ட போதும் நாம் செய்ய வந்த காரியம் செய்து கொணடு இருக்கும்போது அது தவறு என்று உணர்ந்தால் அதை திருத்த வேண்டும். நிறுத்த வேண்டும் தவறான காரியத்தை செய்து முடிப்பதை விட நிறுத்துவதே சிறப்பானது என்று எண்ணுகிறேன். நந்தினி எது சொன்னாலும் நான் ஒத்துக் கொள்கிறேன் அது சரியா? தவறா? என்று எண்ணிக் கூட நான் பார்ப்பதில்லை. என் தம்பி சின்னப் பழுவேட்டரையர் கூட அவள் பெயரில் நம்பிக்கை இல்லை அவள் பிறப்புப் பற்றிக் கூட இன்னமும் சரியாகத் தெரியாது. கந்தமாறன், ஆதித்தகரிகாலன், வந்தியத்தேவன் மூவரும் அவள் பருவத்தை ஒத்தவர்கள். அவர்கள் மத்தியில் அவளை விட்டு விட்டு வந்தேனே! அன்று தஞ்சை பொக்கிஷ நில அறையில் நள்ளிரவில் நானும், நந்தினியும் வந்தபோது கந்தமாறன் மதுராந்தகரை அழைத்துக் கொண்டு எதிரே வந்து நந்தினியை தன் மகள் என்று குறிப்பிட்டதால், அவனில் கோபம் கொண்டு அந்தக் காவலரிடம் அவனைக் கொன்று விடும்படி சொன்னதும் அவன் பிழைத்து வந்து நந்தினியின் அரண்மனையில் தங்கி, அவள் பணிவிடையைப் பெற்றுக் கொண்டதும் என் நெஞ்சில் காயத்தை ஏற்படுத்தியது. வந்தியத் தேவன் கடம்பூர் வந்து எம் சூழ்ச்சியை அறிந்து கொண்டது எனக்குப் பிடிக்ககவில்லை. எம் சூழ்ச்சியை பற்றி சக்கரவர்த்தியிடம் எச்சரிக்கை செய்து விட்டு அங்கிருந்து தப்பி ஓடியது எனக்கு மேலும் ஆத்திரத்தை ஊட்டியது. கரிகாலர் நந்தினியை கல்யாணம் செய்ய விரும்பியதாக கேள்விப் பட்டேன்.




இப்பொழுது அவர்கள் சந்தித்து இருக்கிகிறார்கள் என்ன நடக்குமோ? ஆனால் அவன் சோழ குலத்தில் உதித்தவன் அவன் பிழை செய்யத் துணியான் அவன் பெண்கள் விடயத்தில் மாசுமறு அற்றவன். நந்தினி என்னை வஞ்சித்து விடுவாளோ? என்று பெருமூச்சு விட்டார். பின்னர் தான் படகில் பத்துப் பேர்கள் மத்தியில் இருப்பதை உணர்ந்தார். அவ்வேளை புயலின் உக்கிரமம் படகை கவிழ்க்கும் அளவிற்கு படகு ஆடியது. எல்லோரும் திணறினர் அவ்வேளை கரையும் நெருங்கிக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் திடீரென்று ஒரு மரம் முறிந்து வீழ்ந்து படகு உடைந்தது. அதில் உள்ளோர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள். பெரிய பழுவேட்டரையர் ஒரு மரக்கட்டையை எட்டிப் பிடித்துக் கொண்டு கரையேற முற்பட்டு பெரும்பாடு பட்டார். வெள்ளத்தின் வேகத்துடனும், புயலின் வேகத்துடனும் போராடி இறுதியில் கரை கண்டார். அந் நகரம் குடந்தையாக இருக்க வேண்டும் என்று எண்ணினார். அப்பொழுது கொள்ளிடக் கரை உடைந்து வெள்ளம் பாய்ந்து வந்து அவரை அடித்துச் சென்றது. அந்த வெள்ளத்தில் அவர் உருண்டு புரண்டு சென்று கொண்டிருந்தார். 'எத்தனை போர்க்களம் கண்ட எனக்கு இந்த போர்க்களம் தான் சாவை தரப் போகிறது என் விதி என் உடல் கூட கண்டெடுக்க முடியாத அளவிற்கு என்னை உருட்டிக்கொண்டு போய்விடும் துர்கக்கா பரமேஸ்வரியே உன் கருணை' என்றார். அவரை உருட்டிய வெள்ளம் ஒரு அம்மன் கோயில் சந்நிதியில் சேர்த்தது. அதன் வெளிச்சத்தில் அவர் கண்கள் திறந்தார். அங்குள்ள திரைத் துணியை எடுத்துக் கட்டிக் கொண்டார் தேங்காய் பழங்கள் உண்டு தன் பசியைப் போக்கினார். வெள்ளத்துடன் போராடி உடல் மிகக் களைப்புற்றிருந்தது. அதனால் பெரும் தூக்கத்திலும் ஆழ்ந்தார். நன்றாகத் தூங்கி எழுந்த பெரியபழுவேட்டரையர் வெளியில் பார்த்தார் கிழக்குத் திசையிலும், தெற்குத் திசையிலும் ஒரே வெள்ளக் காடாக இருந்தது. வெகு தூரத்தில் காட்டுப் பிரதேசம் காணப்பட்டது. அது திருப்புறம்பயம் கிராமத்தை அடுத்த காடாக இருக்க வேண்டும் என்று ஊகித்தார். இங்கே தான் கங்க மன்னனின் வீரக் கல் நாட்டிய பழைய பள்ளிப் படைக் கோவில் இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டு, இந்த வெள்ளப் பெருக்கில் இருந்து எப்படித் தப்பி அங்கே போவது? அங்கு போனால் உதவி கிடைக்கும் பின் தஞ்சைக்குப் போகலாம் என்றபடி சுற்றுமுற்றும் பார்த்தார். அப்பொழுது ஒரு வேப்பமரம் வெள்ளத்தில் அடிக்கப்பட்டு தான் இருக்கும் துர்க்கா கோவிலுக்குள் அந்தக் காட்டுப் பாதைகளும் போகும் வழியாக குறுக்காகக் கிடந்தது. அதில் தாவிக் கொள்ள வேண்டும் என்று நினைத்த கணம், ஒரு குரல் கேட்டது. அது மந்திரவாதி! மந்திரவாதி! என்று அழைத்தது. பின்னர் ரவிதாசன் ரவிதாசன் என்று அழைத்தது. அப்பொழுது தன் சகோதரன் சொன்னது ஞாபகம் வந்தது. ரவிதாசன் என்ற மந்திரவாதி நந்தினியை பார்க்க வருவதாகவும் தனக்கு அவனில் சந்தேகம் என்றும் எச்சரித்ததும் ஞாபகம் வர, உடனே முன் மண்டபத்திற்குச் சென்று பார்த்தார். முறிந்து குறுக்காக கிடந்த அந்த வேப்ப மரத்தில் தாவிக் கொண்டு ஒருவன் வந்தான் உடனே பழுவேட்டரையர் கீழே படுத்து உறங்குவது போல் பாசாங்கு செய்தார். தான் அறிந்திராத மர்மத்தை அறிந்தே ஆக வேண்டும் நந்தினியின் அந்தரங்கத்தை அறிய இந்த மந்திரவாதி பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் நந்தினி தன்னை ஏமாற்றி வருகிறாளா? என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று உறுதி கொண்டார். அந்த மனிதன் அங்கே வந்தான் அவன் தேவராளன் அவன் பழுவேட்டரையரின் உடலை புரட்டி முகத்தை உற்றுப் பார்த்தான: ஊ ஆ என்று கத்தியபடி ஓட்டம் பிடித்தான். பழுவேட்டரையரும் அவனைத் தொடர்ந்தார். அவன் வேகமாக ஓடி மறைந்தான். அவன் கால் அடையாளத்தை பின்பற்றி பழுவேட்டரையர் பின் தொடர்ந்து, ஒரு காட்டுப் பாதை வழி சென்றார். இந்த வழி ஒரு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றது. அங்கே இருவர் பேசிக் கொண்ட குரல் கேட்டது. தேவராளன் 'மந்திரவாதி உன்னைத தேடிக் கொண்டிருக்கிறேன் எங்கே போனாய்?' என்றதும் மந்திரவாதி சிரித்தபடி 'நாள் நெருங்குகிறது யமனும் அவர்களை நெருங்குகிறான் நாம் இலங்கையில் சுந்தர சோழனின் இளைய புதல்வனைக் கொல்ல முயன்றோம் முடியவில்லை இப்பொழுது சுந்தரசோழர், கரிகாலன், அருள்மொழிவர்மன் மூவரையும் ஒரே நாளில் கொல்லப் போகிறோம் இது நடந்தே தீரும் நீ தைரியமாக இரு ஏன் பதட்டமாக இருக்கிறாய்' என்று கேட்டான் மந்திரவாதி. அதற்கு தேவராளன் 'நீ கூறியபடி நான் இங்கு வந்தேன் உன்னைக் காணவில்லை பக்கத்தில் இருந்த சிறிய கோவிலில் யாரோ படுத்திருப்பதைக் கண்டு, அங்கு சென்றேன் அது அந்த கிழவன் பழுவேட்டரையர். அவர் யமனின் அண்ணன் திடுக்கிட்டு ஓட்டம் பிடித்தேன் இப்பொழுதும் அவரைப் பார்த்து எனக்கு நடுக்கமாக இருக்கிறது' என்றான். 'பரமேஸ்வரா நீ முட்டாள் அவனை ஏன் கொல்லவில்லை சும்மா விட்டு விட்டு வந்திருக்கிறாயே பரவாயில்லை அவன் உயிரோடு இருக்கட்டும் நாம் சுந்தர சோழரையும் அவர் புதல்வர்களையும் கொன்ற பின்னர் இரு பிரிவாகப் பிரிந்து பழுவேட்டரையர்களும் சம்புவரையரையரும் ஒரு பக்கமும், கொடும்பனாரும், வேளாளரும், திருக்கோவலூர் மலையமானும் இன்னொரு பக்கமாகவும் நின்று சண்டை செய்து, சோழ ராஜ்ஜியம் அல்லோல கல்லோலப்படும் நேரம் நாம் பாண்டிய நாட்டில் படை திரட்டிச் சேர்க்கலாம்' என்றான். அதைக் கேட்ட பரமேஸ்வரன் 'இவன் பழுவேட்டரையர்களால் அரசாங்க உத்தியோகத்தில் இருந்து நிறுத்தப்பட்டவன். பின்னர் தன் பெயரை தேவராளன் என மாற்றிக் கொண்டான். நாக பட்டணத்தில் அருள்மொழிவர்மர் உயிரோடு இருக்கிறாராம் மக்கள் அவரைச் சூழ்ந்து நின்று அவரைச் சக்கரவர்த்தியாக்க வேண்டும் என்று ஆர்ப்பரிக்கிறார்கள்' என்றார். அதற்கு மந்திரவாதி சிரித்தவாறு 'அவரை படகோட்டி முருகையன் மனைவி ராக்கம்மாளை வைத்து வெளிப்படுத்தியவன் நானே இளவரசனை மக்கள் யானை மீது வைத்து அழைத்து தஞ்சை வருவார்கள் யானைப் பாகனை வைத்தே அவன் உயிரை எடுக்கப் போகிறேன் இதற்கு தேவதாஸக் கிராம வித்தனை யானைப் பாகனாக அமர ஏற்பாடு செய்து இருக்கிறேன். தஞ்சையில் பழுவேட்டரையருடைய கருவூல நிலவறையில் சோம்பன் சாம்பவனை விட்டுவிட்டு வந்திருக்கிறேன். அங்கிருந்து தான் சுந்தர சோழருடைய அரண்மனைக்கு சுரங்கப் பாதை போகிறது அங்கிருந்து வேலை எறிந்தால் அவரைக் கொன்று விடலாம் கரிகாலரைக் கொல்ல எங்கள் பழுவூர்ராணி பாண்டிமாதேவி வீர பாணடியர் மரணத்திற்கு பழிக்குப் பழி வாங்க சபதம் செய்திருக்கிறாள். அவள் கையில் இருக்கும் பாண்டிய குலத்து மீன் சின்னம் பொறித்த வீரவாள் அவனைக் கொல்லப் போகிறது. அந்தக் கொலைப் பழி அவன் நண்பன் வந்தியத்தேவன் மீது விழப் போகிறது. அந்த வாலிபனுக்கு தன் மனதைப் பறிகொடுத்திருக்கும் குந்தவை ஆச்சரியப்படப் போகிறாள். நந்தினி ஏற்றுக் கொண்ட பொறுப்பை செய்தே தீருவாள். நாம் இன்று இரவே கடம்பூர் சென்று வெளியேறும் சுரங்கப் பாதையில் தயாராக இருக்க வேண்டும். எல்லோரும் தப்பிச் செல்ல வேண்டும் பழுவேட்டரையர் கருவூல நிலவறையில் சேர்த்து வைத்திருக்கும் பொருட்களை எல்லாம் சுரங்கப் பாதை வழியாக கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்' என்றான்.

தொடரும்...)

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

---

# ஈழத்துத் திருக்கோவில்கள் 992



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## பத்திரகாளி அம்பாள் ஆலயம்
## திருகோணமலை

*"துணையுந் தொழுந் தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்*
*பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்*
*கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்*
*அணையும் திரிபுரசுந்தரி யாவது அறிந்தனமே."*

வைகாசி மாதம் வந்துவிட்டால் திருகோணமலையிலுள்ள சக்தி ஆலயங்கள் அனைத்தும் விழாக்கோலங்கொண்டு காணப்படும். இக்காலத்திலே நடைபெறும் வைகாசிப்பொங்கல் மிகவும் பிரபல்யமானது. இங்குள்ள ஏனைய பிரபலமான சக்தி வழிபாட்டு ஆலயங்களாக விளங்கும், சல்லி அம்மன் கோயில், பாலம் போட்டாறு பத்தினி அம்மன் கோயில் உட்பட பல ஆலயங்களிலும் வைகாசிப் பொங்கல் களைகட்டும். இந்தவகையில் பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலே நடைபெறும் பொங்கல் விழா மிகப் பிரசித்தமானது. இவ்விழா வைகாசிப் பௌர்ணமிக்கு முதல்வரும் திங்கட்கிழமை பெருவிழாவாக நடைபெறும். வைகாசிப் பொங்கல், ஆலயத்தைச் சுற்றியுள்ள பெருவீதியில் நடைபெறும். இவ்விழாவன்று இரவு எங்கும் புகைமண்டலமாகக் காட்சியளித்து, பெருவேள்வி நடைபெறுவது போன்ற பிரமையை ஏற்படுத்தும். ஆலயத்தைச் சூழவுள்ள வீதியில் பக்தர்கள் பொங்கலிடும்போது, பத்திரகாளி அம்பாளின் பொங்கல், மண்டபவாசலில் வெளியில் நடைபெறும். அம்பாளின் பொங்கற் பிரசாதமும், அடியார்களின் பொங்கற் பிரசாதமும் அம்பாளுக்குப் படைக்கப்பட்டு, பூசை நடைபெற்று வைகாசிப் பொங்கல் விழா நிறைவுபெறும்.

இவ்வாலயத்திலே மிக விமரிகையாகப் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இவற்றுள் நவராத்திரி, கும்பவிழா, கேதாரகௌரிவிரதம் ஆகியவை மிகவும் பிரபல்யமானவை. இவற்றுள் நவராத்திரி, புரட்டாதி மாதப் பிரதமை தொடக்கம் ஒன்பது இரவுகளும் இயந்திரபூசை நடைபெற்று, ஒன்பதாவது நாள் நவமியன்று மகிஷாசூர சங்காரமாகிய சூரன்போர் நடைபெறும். முதல் மூன்றுநாள் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாள் இலட்சுமிக்கும், அடுத்த மூன்று நாள் சரஸ்வதிக்கும் அலங்காரப்பூசைகள் நடைபெற்று திருவீதியுலாவும், நடைபெறும். பத்தாவது நாள் விஜயதசமியன்று கும்பம் சொரிந்து தீர்த்தோற்சவம் நடைபெறும். இவ்வாலயத்தில் துர்க்கை. சரஸ்வதி, லக்ஷ்மி ஆகியோருக்குத் தனித்தனி ஆலயமுண்டு. இக்காலத்தில் ஸ்ரீ சக்கரபூசை நடைபெற்று அன்னை பத்தரகாளி அம்பாளுடன் முத்தேவியரும் நவராத்திரி விழாவின்போது வலம் வருவர். சூரியபகவான் கோள் சஞ்சார முறைப்படி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசியை அடைவதாகச் சோதிடம் கூறியுள்ளது. புரட்டாதி மாதத்தில் சூரியன் கன்னி ராசியில் சஞ்சரிக்கின்றான். கன்னிராசி புதனுக்குரிய வீடாகும், புதனைப் புத்திக்காரன் அதாவது அறிவை வளர்ப்பவன் எனப் போற்றுவர். எனவே கல்வி, செல்வம், வீரத்தை வேண்டி வழிபட ஏற்ற மாதமாகப் புரட்டாதி மாதத்தை ஆன்றோர் தெரிவு செய்துள்ளனர்.

பத்திரகாளி அம்மன் ஆலயத்திலே நடைபெறும் கும்பவிழாவும் மிகவும் பிரசித்தமானது. இவ்விழா இலங்கையில் திருகோணமலையில் மட்டுமே கொண்டாடப்படுகின்றது. திருகோணமலையிலுள்ள ஆலயங்கள் பலவற்றிலும் இக்கும்பவிழா பெருவிழாவாகக் கொண்டாடப்படும். திருகோணமலையில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்கான காரணத்தை அறிவது அவசியமாகும்.

இக்காலப்பகுதியில் சகடையில் கம்புகளால் தேர்போலக் கட்டியே தேர்த்திருவிழா நடைபெற்று வந்துள்ளது. 1972 ஆம் ஆண்டு கட்டுத்தேருக்குப் பதிலாகச் சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. அத்தோடு மூன்று மஞ்சமும் செய்யப்பட்டு ரதோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. கிழக்கிலங்கையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர், பத்திரகாளி அம்பாள் ஆலயத் தேராகும். இத்தேர் முப்பத்திரண்டு அடி உயரம் உடையது. தேர்த் திருவிழாவன்று அன்னை தேரில் எழுந்தருளி வரும்பொழுது, ரதத்தின் இடப்பக்க வடத்தைப் பெண்கள் இழுக்கும் வழக்கமும் பத்திரகாளி ஆலயத்திலே காணப்படுகின்றது. 1981 ஆம் ஆண்டு இத்தேரைப் பாதுகாப்பதற்கான தேராலயமும் அமைக்கப்பட்டது.

பத்திரகாளி அம்பாள் ஆலயம் அருளோடு அழகும் வாய்ந்த ஆலயமாகக் காணப்படுகின்றது. கருவறையில் சதுர்ப்புஜங்களை உடைய அம்பாளின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சூலம், டமருகம், கட்கம், கபாலம் தாங்கிய திருக்கரங்களோடு அம்பாள் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றார். மகாமண்டபத்தில் பத்திரகாளி அம்பாள், விநாயகர், முருகன், கிடாரத்தினுள்ளிருந்து கிடைக்கப்பெற்ற அம்பாள், இராஜராஜேஸ்வரி, சண்டேஸ்வரி, ஆகிய தாமிர விக்கிரகங்களும், பிள்ளையாரும், வடக்குப்பக்கம் தண்டாயுதபாணியின் சிலாவிக்கிரகமும் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாலயத்திலே உச்சிக்காலம், சாயரட்சை ஆகிய இருவேளைகளிலும் நித்தியபூசை நடைபெறுகின்றது. பங்குனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவமாகக்கொண்டு பத்துநாட்கள் மகோற்சவம் நடைபெறும். ஒன்பதாம்நாள் ரதோற்சவம் நடைபெற்றுப் பத்தாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். பங்குனி உத்தரத்தன்று பத்திரகாளி அம்பாள், கோணேசப்பெருமான் எழுந்தருளியுள்ள கோணமாமலையின் அடிவாரத்திலுள்ள கடற்கரையில் அதிகாலையில் தீர்த்தமாடுவார்.

*வளரும்...*



மலேசிய மடல்

# தமிழீழப் போரை திசைதிருப்பிய தேவிலால்!





நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஏப்.06:

இந்திய வரலாற்றில் குறிப்பாக தமிழக வரலாற்றில், அதனி-லும் குறிப்பாக தமிழீழப் போராட்ட வரலாற்றில் 1991-ஆம் ஆண்டு மிகமிக குறிப்பிடத்தக்க ஆண்டு.

1984, அக்டோபர் 30-இல் இந்திரா காந்தி சொந்த மெய்க்காப்பாளர்களால் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அதுவரை விமான ஓட்டியாக இருந்த ராஜீவ் காந்தி, அடுத்த நாளே இந்தியாவின் 6-ஆவது பிர-தமராக பொறுப்பு ஏற்றார்.

இதற்கு முன், குன்சாரி லால் நந்தா இடைக்கால பிரதமராக இருமுறை இருந்ததையும் இந்திரா காந்தி இருமுறை பிரதமர் பதவி வகித்ததையும் கணக்கில் சேர்த்தால் இராஜிவ் காந்தி 9-ஆவது பிரதமர்.

பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸ் பொற்கோவிலை புகலிடமாகக் கொண்டு பிந்தரன் வாலே உள்ளிட்ட போராட்டவாதிகள் காலிஸ்தான் என்னும் தனிநாடு கேட்டு போராட்டம் நடத்தியதை ஒடுக்குவதற்காக, 'Blue Star Operation' என்ற பெயரில் இந்திரா காந்தி மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் பிரதிபலிப்புதான் சீக்கிய மெய்க்காவலர்களே இந்திராவைப் பழிதீர்த்தனர்.

துக்கம் தொண்டையை அடைத்த வண்ணம் பிரதமராக பொறுப்பு ஏற்ற ராஜீவ், உடனடியாக பொதுத் தேர்தலை நடத்தினார். 545 உறுப்பினர்கள் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி 384 இடங்களை அள்ளியது. அந்தத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி வென்ற இடங்கள் 2 மட்டுமே அவற்றில் ஒன்று வாஜ்பாய் வென்றது.

5 ஆண்டுகள் கழித்து மீண்டும் தேர்தலை எதிர்கொண்ட ராஜீவ் ஆட்சியை இழந்தார். ராஜீவ் அமைச்சரவையில் நிதி அமைச்சராகவும் பின்னர் பாதுகாப்பு அமைச்சராகவும் நியமிக்கப்பட்ட விஸ்வநாத் பிரதாப் சிங் (வி.பி.சிங்), ராஜீவ் காந்தியின் தவறுகளை சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தார். அவற்றில் ஒன்று போ..பர்ஸ் ஊழல் தொடர்பானது.

கடைசியில் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி, ஜனதா முக்தி மோர்ச்சா என்ற இயக்கத்தைத் தொடங்கி, நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சிக்கு, குறிப்பாக ராஜீவ் காந்திக்கு எதிராக பிரச்சரம் மேற்கொண்டார் வி.பி.சிங்.

இதன் விளைவாக பெயர்கெட்டுப் போன ராஜீவ் காந்தி, 1989 பொதுத் தேர்தலில் தோற்று பதவியை இழந்தார். அந்தத் தேர்தல் சமயத்தில், ஜனதா முக்தி மோர்ச்சா என்ற இயக்கத்தை ஜனதா தளம் என்ற அரசியல் கட்சியாக மாற்றிய வி.பி.சிங், அந்தத் தேர்தலில் அதிக இடங்களை வென்ற கட்சியின் தலைவராக உருவானார். ஆனால், தனிப்பெரும்பான்மை கிட்டவில்லை. அதனால், பாரதிய ஜனதா கட்சி உள்ளிட்ட பிற கட்சிகலின் ஆதரவில் பிரதமர் ஆனார் விபி.சிங்.

இதற்கிடையில் ராஜீவ் பிரதமராக இருந்த சமயத்தில், தமிழீழ சிக்கல் தொடர்பாக சில தன்மூப்பானா நடவடிக்கைகளை எடுத்தார். அதில் ஒன்று, அன்றைய இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனே சொன்னதை யெல்லாம் கேட்டுக் கொண்டு அதற்கு ஏற்ப நடந்து கொள்ளும்படி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கட்டாயப்படுத்தியது.

தனி நாடு என்பதற்குப் பதிலாக, வடக்கு- கிழக்குப் பகுதிகளுக்கு அதிக அதிகாரம் அளிப்பது உள்ளிட்ட அம்சங்களை ஏற்றுக் கொண்டு ராஜீவ் காந்தியே அதில் கையொப்பமிட்டுவிட்டு, அதில் சான்றுக் கையொப்பம் இடச் சொல்லி பிரபாகரனைக் கட்டாயப் படுத்தினார் ராஜீவ் காந்தி. இதற்காகஇமயமலை அடிவாரத்தில் உள்ள திம்பு - விற்கு தனி விமானம் மூலம் பிரபாகரனை வரவழைத்து அடுத்தடுத்து கட்டாயப்படுத்தினார் ராஜீவ்.

விடுதலைப் புலிகள் இயக்க வரலாற்றில், "திம்பு பேச்சு வார்த்தை" என்பது, தனி அத்தியாயம் என்று சொல்லும் அளவுக்கு நெடியது.

சிங்களத் தலைவர்கள் எந்தக் காலத்திலும் தமிழர்களுடன் இணக்கமாக வாழ விரும்பாததுடன், தமிழர்களை நசுக்கவேப் பார்ப்பார்கள் தவிர, அவர்கள் வாக்களித்தபடி உண்மையாக நடந்து கொண்ட வரலாறும் இல்லை இந்த படிப்பினைகளின் அடிப்படையில்தான் தனிநாடு கேட்டு நாங்கள் களத்தில் நிற்கிறோம்.

இதற்காக சகோதர யுத்தத்தையும் நடத்தி, இலட்சக் கணக்கான உயிர்களையும் இழந்து, கடைசியில் ஒன்றுமில்லாத இந்த ஒப்பந்தத்தில் ஏன் கையெழுத்திட வேண்டும் எதற்காக இதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்? என்ற நிலைப்பாடு எடுத்த தலைவர் பிரபாகரன்.

பிரச்சினை இலங்கைத் தீவு நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் சிங்களர்களுக்கும்இதில்ராஜீவ்காந்திஎதனடிப்படையில்கையொப்பமிட்டுவிட்டு, பிறகு எங்களைக் கட்டாயப்படுத்துகிறார் என்பது பிரபாகரனின் தெளிவான நிலைப்பாடு.

ஒரு கட்டத்தில், புது டில்லி அசோகா தங்கும் விடுதியில்கூட சில நாட்களுக்கு பிரபாகரன் சிறைவைக்கப்பட்டார் அது, ஏறக்குறைய வீட்டுக் காவலைப்போன்ற தங்குமிடக் காவல்.

தலைவர் பிரபாகரனிடம் ராஜீவ் காந்தி கடைசியில் தோற்றுத்தான் போனார். இந்த ஆத்திரத்தில்தான் இந்திய அமைதி காப்புப் படை என்ற பெயரில் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்காக சீக்கிய அதிகாரி ஜெனரல் கல்கத் என்பவரின் தலைமையில் இந்திய ராணுவம் இலங்கையை, குறிப்பாக தமிழர்கள் மிகுந்த வாழும் வட-கிழக்கு இலங்கையை முற்றுகையிட்டது.

வியட்நாமியப் போரில், அமெரிக்க ராணுவம் வகை தொகையின்றி வியட்நாமிய இளம்பெண்களை பாலியல் ரீதியாக காம வேட்டையாடியது இதன் விளைவாக, இலட்சக் கணக்கான வியட்நாமியப் பிள்ளைகள் அப்பா யார் என்று தெரியாமல் பிறந்தன.

ஏறக்குறைய இதேப் பாணியில், இந்திய ராணுவத்தைச் சேர்ந்த வட இந்திய சிப்பாய்கள், தேடித்தேடி தமிழ்ப் பெண்களின் மானத்தைப் பறித்தனர். அப்படி மானம் போனவர்களில், 1991 மே 21இல் திருப்பெரும்புதூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இராஜிவ் காந்தி பலியான 2மி.மீ. இரவைகள் ஈராயிரத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இடைவார் வெடிகுண்டை வெடிக்கச் செய்து தானும் பலியான தானுவின் தாயாரும் தமக்கையும் அடங்குவர்.

இவ்வாறு இந்திய ராணுவம், அமைதிப் படை என்ற பெயரில் விடுதலைப் புலிகளை ஒடுக்கவும் தமிழ்ப் பெண்களின் கற்பை சூறையாடவும் ஈடுபட்டிருந்த நேரத்தில் 1989 டிசம்பர் 2-ஆம் நாள் இந்தியாவின் 7-ஆவது அல்லது 10-ஆவது பிரதமர் ஆனார் வி.பி.சிங்.

அந்த நேரத்தில் தமிழகத்தில் திமுக ஆட்சி நடைபெற்றது 13 ஆண்டுகளுக்குப் பின் கலைஞர் மு. கருணாநிதி மீண்டும் முதல்வராக இருந்தார்.

இந்தியப் படையை இலங்கையில் இருந்து திரும்ப வி.பி. சிங் உத்தரவிட்டார். சென்னை துறைமுகத்திற்கு வந்த இந்திய இராணுவத்தினரை வரவேற்க கலைஞர் செல்லாதது அப்போது விமர்சனத்திற்கு ஆளானது. கவலைப்படாத கலைஞர், என் இனப் பெண்களின் மானத்தைப் பறித்த இந்திய ராணுவத்தினரை நான் ஏன் வரவேற்கச் செல்ல வேண்டும் என்று எதிர்கேள்வி எழுப்பினார்.

இந்த நேரத்தில், அதிமுக-வின் ஜா அணியும் ஜெ அணியும் இணைந்து, இரட்டை இலை சின்னமும் மீள கிடைத்து, ஜானகி அம்மாள் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்ட நிலையில், ஜெயலலிதாவின் கை வலுத்து இருந்தது.

இருந்தாலும் அவசர புத்திக்கும் ஆணவத்திற்கு பெயர்பெற்ற ஜெயலலிதா, ஒரு கட்டத்தில் திமுக-வின் அரசியலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஹைதராபாத்தில் உள்ள திராட்சைத் தோட்டத்திற்கு நிரந்தரமாக சென்று விடலாமா என்று அரசல் புரசலாக எண்ணிக் கொண்டிருந்த நேரம் அது.

ஆனாலும், அப்போது குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமன், துக்ளக் ஆசிரியர் சோ, சுப்பிரமணிய சாமி உள்ளிட்ட பார்ப்பன வட்டம் ஜெயலலிதாவை அரசியலில் தொடரும்படியும் நாங்கள் குறுக்கு வழியில் மாற்று ஏற்பாடு செய்கிறோம் என்றும் அதற்கு ஏற்ப புது டில்லியில் நிலையற்ற அரசு இருப்பதாகவும் வி.பி.சிங்கும் தேவிலாலும் அடித்துக் கொள்ளாத நாளே இல்லை என்பதால் அதற்கான வாய்ப்பு கூடிய விரைவில் அமையும் என்றெல்லாம் சொல்லி நம்பிக்கை அளித்தது.

அதற்கு தகுந்தாற்போல ஒரு தமிழனான நடராஜனும் தங்களுக்கு பிள்ளை இல்லாத நிலையில், தன் மனைவி சசிகலாவை ஜெயலலிதாவுடனேயே தங்கவைத்து, ஜெயலலிதாவுக்கு சசிகலாவை தங்கை ஆக்கினார்.

நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என ஔவை மூதாட்டி சொன்னதும், பொருட்பால் பிரிவில் இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள

*முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும்*.

என்னும் 388-ஆவது குறளின்மூலம் திருவள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டிருப்பதும்

*நல்லவன் கையில் நாணயம் இருந்தால் நாலு பேருக்கு சாதகம்* என்னும் முதுமொழிவழி நம் முன்னோர்கள் சொல்லி இருப்பதும் ஒரு செம்மாந்த கருத்தை எடுத்தியம்புகின்றன.

ஒரு மனிதன் நல்லவனாக இருந்தால், அவனுக்காக இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ நடைபெறும் நன்மையாவும் அவனை மட்டும் சாராமல், அவனை அண்டியிருப்போரையும் சுற்றத்தாரையும் உற்றாரையும் சேரும்.

சரித்திரக் காலத்தில் மன்னர்கள் எடுக்கும் முடிவால் பல்லாயிரக் கணக்கான மக்கள் காப்பாற்றவும் பட்டனர் அதைப்போல மடிந்தும் இருக்கின்றனர். இதற்கு இன்றைய சான்று, விளாடிமிர் புடின் என்னும் ஒற்றை மனிதன் எடுத்துள்ள முடிவால், இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக நேர்ந்துள்ளது பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழ்வை இழந்துள்ளனர் எண்ணிக்கைத் தெரியாத மக்கல் மடிந்துள்ளனர் அதைப்போல இலட்சக் கணக்கான மக்கள் தங்களின் கல்விப் பயணத்தில் தடைப்பட்டுள்ளனர்.

முறையாக ஆட்சி செய்தி மக்களை தப்பாமல் காக்கும் மன்னவன், இறைக்கு சமம் என்று வள்ளுவர் சொன்னது இதனடிப்படையில்தான்.

இந்தக் கருத்தின் அடிப்படையில், தகுதி இல்லாத ஒரு மூடத் தலைவனுக்கு, மக்கள் நலனில் அக்கறைப்படாத ஒரு மிருக அரசியல்வாதிக்கு, தன்னுடைய அரசியல் களத்தில் துணை நின்ற ஒரே காரணத்திற்காக வி.பி.சிங் அவர்கள், துணைப் பிரதமர் என்னும் பதவியை தேவிலாலுக்குக் கொடுத்ததால் நேர்ந்த இன்னல் சொல்ல மாளாதது எழுதத் தீராது.

மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபொழுது சரண்சிங் எப்படி செயல்பட்டாரோ அதைப்போல, வி.பி. சிங்கிற்கு எதிராக லாவணி அரசியல் செய்வதிலேயே குறியாக இருந்த தேவிலால்-வி.பிசிங் பிணக்கு பற்றியச் செய்தி 1990-ஆம் ஆண்டு முழுவதும் நாளேடுகளில் இடம்பெற்றன.

சரண்சிங் செய்ததைப் போலவே, தேவிலாலும் ஜாட் இன மக்களைத் திரட்டி அதுவும் தானே பொறுப்பில் இருக்கும் சொந்த ஆட்சிக்கு எதிராக விவசாயிகள் போராட்டத்தை நடத்தினார். தேவிலால் இப்படி தொடர்ந்து செய்வதால், நாட்டு நிருவாகத்திலும் மக்கள் நலனிலும் அக்கறைக் காட்ட முடியாமல் போகிறதே என்ற சங்கடத்தின் உச்சிக்குச் சென்ற வி.பி.சிங், மண்டல் ஆணைய அறிக்கையை அமலபடுத்துவதாக அதிரடியாக அறிவித்தார்.

மத்திய அரசாங்க உயர் பதவிகளில் பிராமணர்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதால், மற்ற சாதியினருக்கும் 27% வேலைவாய்ப்பை மத்திய அரசு நிறுவனங்களில் அளிக்க வேண்டும் என்று பி.பி. மண்டல் என்னும் ஓய்வு பெற்ற நீதிபதி அளித்த பரிந்துரையை காங்கிரஸ் அரசும், பின்னர் வந்த ஜனதா ஆட்சியும் தட்டிக் கழித்தன.

ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலம் கிடப்பில் இருந்த அந்த அறிக்கையைத்தான் சட்டமாக்குவதாக பிரதமர் வி.பி.சிங் அறிவித்தார்.

பார்ப்பனர்களின் நலம் ஒன்றையே இலக்காகக் கொண்ட பாரதிய ஜனதாக் கட்சி இதை ஏற்க முடியாதென்று கூறி, வி.பி.சிங்கிற்கான ஆதரவைத் திரும்பப் பெற்றது. இதனால் பெரும்பான்மை இழந்த வி.பி.சிங் 1990 நவம்பர் 10-ஆம் நாள், தன் பிரதமர் பதவியைத் துறந்தார்.

அன்றோடு தேவிலாலின் கொட்டமும் முடிந்தது. அதன்பின்னர் நடைபெற்ற சம்பவங்களைப் பட்டியலில் இட்டால் வியப்பாக இருக்கும். வி.பி. சிங் பதவி விலகியதும் சந்திர சேகர் பிரதமராக பதவியேற்க இராஜிவ் காந்தி ஆதரவு அளித்தார். ராஜீவ் காந்தி பிரதமர் ஆக ஒருவரும் ஆதரவு அளிக்கவில்லை என்பதால், சந்திர சேகருக்கு ஆதரவளித்து, அவரை தன் கைப்பாவையாக ஆட்டுவித்தார் இராஜிவ் காந்தி.

வெறும் 56 நாட்களுக்கு மட்டுமே பிரதமராக இருந்தார் சந்திர சேகர் அதற்குள், 13 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சிக்கு வந்த திமுக ஆட்சியை இரண்டே ஆண்டுகளில் கலைத்து ஜனநாயக படுகொலையை அரங்கேற்றினார் சந்திரசேகர். இதற்கு சட்ட அமைச்சராக இருந்த சுப்பிரமணிய சாமி, குடியரசுத் தலைவராக வெங்கட்ராமன் ஆகிய இரு பிராமணர்களும் துணை நின்றனர்.

திமுக-வைப் பிடிக்காத ராஜீவ் காந்தி, சந்திர சேகர் மூலம் திமுக ஆட்சி கலைக்கப்பட்டதும், உடனே சந்திரசேகருக்கு அளித்த ஆதரவைத் திரும்பப் பெறுவதாக அறிவித்தார். அதற்கு ராஜீவ் காந்தி விளக்கமும் சொன்னார் என்(காங்கிரஸ்) தயவில் பிரதமராக இருந்துகொண்டே சந்திரசேகர் என் வீட்டை வேவு பார்க்கலாமா என்ற கேள்விதான் அந்த விளக்கம்.

**(தொடர்ச்சி 34ம் பக்கம்)**

# இவ்வார ராசிபலன்

## 08-04-2022 வெள்ளி தொடக்கம் 14-04-2022 வியாழன் வரையும்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**மேஷம்:** பிரார்த்தனைகள் நிறைவேறும் வாரம். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதல்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழையக் கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். எதிர்ப்புக்கள் குறையும். பழைய பகை தீரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. லாபம் அதிகரிக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் அடைவீர்கள். அரசு வழியில் கவனம் தேவை. பொறுமையாக செயல்பட வேண்டும். சந்தோஷம் அலைமோதும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகள் தவிர்க்கவும். ஏற்றுமதி தொழில் லாபம் கிடைக்கும். பெற்றோர்கள் உடல் நிலையில் கவனம் தேவை. வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். மனக்கசப்பு வந்து நீங்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,4,9,6*
*அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,A*




**ரிஷபம்:** காரியத்தில் வெற்றி காணும் வாரம். உள்ளம் மகிழும் காலம். பழைய பகை தீரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் தொல்லை உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தைரியம் கூடும். காதல் கைக்கூடும். அடுத்தவர் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். நலமே விளையும் வாரமாகும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். சுபச்செய்தி இல்லம் தேடி வரும். தேகப்பலம் கூடும். மனக்கசப்பு நீங்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பணநடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடக்கும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். சகோதரியினால் நன்மை உண்டு. பாக்கியவான்களை சந்திப்பீர்கள்.
*வழிபட வேண்டிய தெய்வம்: காலபைரவர், அதிர்ஷ்ட எண்: 1,9,8,4*
*அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,Z*




**மிதுனம்:** மனிதநேயம் மிகுதியாகும் வாரம். முகப்பொலிவு கூடும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். இல்வாழ்வில் இனிமை தரும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். பெயர், புகழ், கௌரவம் செல்வாக்கு உயரும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. தகுதிகள் மிகுதியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிகள் கூடும். தனவரவு பெருகும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். கணவன், மனைவி உறவு மேம்படும். சகோதரியினால் நன்மை உண்டு. கடன் சுமை குறையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. கலவரமான சூழ்நிலை காணப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். வெகுமதி கூடும். மற்றவர்களால் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு.
*வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1*
*அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,M*




**கடகம்:** யோகமும், தியாகமும் கலந்த வாரம். இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் ஏற்படும். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டாகும். பணத்தட்டுப்பாடு நீங்கும். வழக்குகள் வெற்றி தரும். திருமணத்தடை அகலும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். மனை வாங்கும் யோகம் உண்டு. மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப் பொலிவு கூடும். ஏற்றங்கள் குறையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். ஆடம்பர நாட்டம் ஏற்படும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K*




**சிம்மம்:** விரக்திகள் மறையும் வாரம். திருப்தி ஏற்படும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். சிந்தனைகள் மேலோங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மற்ற இனத்தவரால் நன்மை உண்டு. தொழில் லாபம் உண்டு. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. பங்குச்சந்தையில் கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். உடல்பொலிவு கூடும். கர்மவினைகள் அகலும். பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் லாபம் தரும். முன்கோபம் தவிர்க்கவும். வர்த்தக தொழில் லாபம் தரும். பிரச்சனை முடிவுக்கு வரும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,7,1,2*
*அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: PT*





**கன்னி:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். சொத்து சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புகள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்துறையில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. பொறாமைகள் விலகும். ஆபரணச்சேர்க்கை உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. உத்தியோகம் உயர்வு உண்டு. தான தர்மங்கள் பலன் தரும். குடும்ப கௌரவம் உயரும். மறைமுக எதிர்ப்பு விலகும். கவலைகள் ஒழியும். தகுதிகள் உயரும். தனலாபம் கூடும். வறுமைகள் ஒழியும். பாராட்டுப் பெறுவீர்கள். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். ஆபரணச்சேர்க்கை ஏற்படும். மனோதைரியம் அதிகரிக்கும். நீண்டநாள் ஆசை நிறைவேறும். தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. மெத்தனப் போக்கு மாறும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 6,8,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J*




**துலாம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். கலை ஈடுபாடு அதிகரிக்கும். பயணம் அனுகூலம் தரும். மெத்தனப் போக்கு விலகும். திட்டங்கள் நிறைவேறும். வெளியூர் பயணம் உண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். சொத்துச் சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. தன வரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். பொருளாதார வளம் சேர்க்கும். பழையக் கடன் வசூலாகும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். இடமாற்றம் உண்டு. தொழில் வளம் கூடும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும்.
*வழிபட வேண்டிய தெய்வம்: கற்பகமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 4,9,2,1*
*அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P*




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். தொழில் வளம் கூடும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள் கூடும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். பாராட்டுக்கள் கிடைக்கும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி ஏற்படும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் தேவை. திடீர் பயணம் உண்டு. முதுகில் வலி வந்து போகும். மனபயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு. வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். அனுகூலமான தருணம். சந்தோஷம் அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றி கிட்டும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கைகூடும். விவாகம் முயற்சி தரும். வியாபாரத் தடை ஏற்படும். வீண் வம்பு அகலும். ஆரோக்கியம் கவனம் தேவை.
*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W*




**தனுசு:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். திட்டம் வெற்றி பெறும். ஸ்திர சொத்துக்கள் சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் உண்டு. பங்குச் சந்தை லாபம் உண்டு. கனவுகள் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. எள் தானம் ஏற்றம் தரும். கவனமுடன் செயல்பட வேண்டும். வழக்குகள் சாதகமாகும். தாய் நலனில் கவனம் தேவை. புதிய எண்ணம் நிறைவேறும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும். பொருளாதாரம் உயரும். வேலை வாய்ப்பு கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். ஆரோக்கியம் கூடும். அணிகலன் சேரும். அன்யோன்யம் கூடும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். பொறியியல் துறை லாபம் தரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.
*வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 8,9,1,4*
*அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,K*




**மகரம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். கடுமையான காலம். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளி நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். மனைவியின் மருத்துவச் செலவு உண்டு. விரக்திகள் மறையும். வினோதமான எண்ணங்கள் விலகும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகளின் தொல்லை அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பண வரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். நட்டம் இல்லாத காலம். பட்டம் பதவி வந்து சேரும். வெளி வட்டாரப் பழக்கம் அதிகமாகும். தேக ஆரோக்கியம் கூடும். வேலையாட்களிடம் கவனம் தேவை. மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிடைக்கும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை.
*வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,3,2*
*அதிர்ஷ்ட நிறம்: குங்குமகலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,D*

***(தொடர்ச்சி 34ம் பக்கம்)***

## வீணாவின் கவிக்கணை

பச்சைப்பசேல் என்று இருக்குமாம்
பாட்டன் வீட்டுத்தோட்டம்,
வேலி எங்கும் படர்ந்து கிடக்குமாம்
பசலையும், பிரண்டையும் கொடியாய்,
கொல்லையிலே படர்ந்திருக்கும்
கீரையும் வகை வகையாய்,
முற்றத்து முருங்கையும் மாமரமும்,
யார் கண்ணையும் மறுபுறம்
திரும்ப விடாத அழகு,
பூக்களும் பூத்துக் குலுங்க,
காய்களும் காய்த்து கனிய,
சுகமான சுகாதாரமான
வாழ்க்கையும் அன்று ,
இன்று மரங்களை வெட்டினோம்,
காடுகளை அழித்தோம், மூச்சைக்கூட
காசு கொடுத்து வாங்கும் நிலைமையில்
தள்ளப்பட்டோம், இயற்கை அழகை
அழித்த நமக்கு இயற்கையின் பரிசு இது!
மரம் வளர்ப்போம்!
காடுகளை காப்போம்!

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழீழப் போரை திசைதிருப்பிய தேவிலால்!

யாரோ போலீஸ்காரர்கள் இருவர் எதிர்பாராமல் ராஜிவ் காந்தி காந்தி வீட்டருகே நின்றதைக் காரணம் காட்டி, ஒரு நாட்டின் ஆட்சியையேக் கலைத்த ராஜீவ் காந்தியின் நோக்கம் வேறு!

விரைவில் தேர்தல் வந்தால், தான் மீண்டும் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வரலாம் என்ற குயுக்தியான எண்ணம்தான் அது.

சந்திர சேகர் பதவி விலகியதும் இந்திய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. ஒன்றரை ஆண்டுக்குள் மீண்டும் பொதுத் தேர்தல் வந்தது.

இந்த நேரத்தில் இந்திய வாக்காளர்களின் மனநிலை ஒன்றை வெளிப்படுத்தியது. தவறு செய்தாலும் கொள்ளை அடித்தாலும் லஞ்சம் தலை விரித்து ஆடினாலும் காங்கிரஸ் கட்சியால் மட்டுமே நாட்டில் நிலையான ஆட்சியைக் கொடுக்க முடியும் என்ற கருத்துதான் இந்தியா முழுவதும் பிரதிபலித்தது.

மற்ற தலைவர்கள் நல்லவர்களாக இருந்தாலும் அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் அடித்துக் கொண்டு கலைந்து செல்கின்றனர் என்று இன்னொரு துணைக்கருத்தையும் மக்கள் வெளிப்படுத்தினர்.

போதாக்குறைக்கு, தேர்தல் கணிப்புகள் அத்தனையும் அடுத்த பிரதமர் ராஜீவ் காந்திதான் என்று அடித்து சொல்லின் புது டில்லி, மும்பாய், பெங்களூரு, சென்னை, கொல்கத்தா ஆகிய ஐந்து நகரங்களில் இருந்து புறப்பட்ட சோதிடப் புலிகளும் ராஜீவ் காந்திதான் அடுத்த பிரதமர் என்று சொல்லிச் சென்றன.

அதில் ஒன்றுகூட, அடுத்த பிரதமர் ராஜிவ் காந்தி என்பது ஒருபுறம் இருக்கட்டும் அதற்கு முன் ஐந்து கட்டத் தேர்தல் முடியும்வரை அவர் உயிரோடு இருப்பது ஐயம் என்றோ அல்லது அவருக்கு ஒரு கண்டம் இருக்கிறது என்றோ அரசல் புரசலாகக்கூட ஒரு சோதிடப் பூனையும் கணிக்க வில்லை.

விடுதலைப் புலிகளை ஒடுக்க முன்பே இராணுவத்தை ஏவி தோற்றுப்போன ராஜீவ், மீண்டும் பிரதமராக வந்தால் எதிர் விளைவு எப்படி இருக்கும் என்ற எண்ணம் விடுதலைப் புலிகள் தரப்பில் எழுந்திருக்கக்கூடும். பின்னர் நடந்ததை யெல்லாம் உலகளாவிய தமிழ்ச் சமுதாயம் அறியும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக ஆட்சி கலைக்கப்பட்டது; ராஜிவ் காந்தியை திமுக-தான் கொன்றது என்று ஜெயலலிதாக் கட்சி பிரச்சாரம் செய்து தேர்தல் அறுவடை செய்தது; ஒன்றரை ஆண்டுகளில் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் வந்தது; அந்தத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ராஜீவ் காந்தி மடிய நேர்ந்தது; அதன் பின் விடுதலைப் புலிகளுக்கு உள்ளும்புறமும் ஏற்பட்ட நெருக்கடி; முள்ளி வாய்க்காளில் குற்றியிரும் கொலையுயிருமாக இலட்சக் கணக்கான தமிழர்கள் மண்ணில் சாய்ந்தது; தமிழர்கள் உயிருடனே-யே மண்வாரி இயந்திரங்களின் மூலம் மொத்தம் மொத்தமாக மண்ணில் முடப்பட்டது என இவை யாவும், வி.பி. சிங் ஐந்து ஆண்டுகள் பிரதமராக நீடித்திருந்தால் நடந்திருக்கவே நடந்திருக்காது.

வி.பி.சிங் ஆட்சிக்கு கோடரிக் காம்பாக வாய்த்த கசடன், மூடன் தேவிலால் மடிந்த நாளான ஏப்ரல்-6இல் இந்த நினைவுகள் கண்ணீர் ததும்ப.. . மனம் விம்மவிம்ம வந்துவந்து போகின்றன.

**நக்கீரன்** - Nakkeeran
013-244 36 24

## இவ்வார ராசிபலன்

(33ம் பக்கத் தொடர்ச்சி)

**கும்பம்:** வெளியூர் பயணம் லாபம் தரும் வாரம். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். துணிவோடு செயல்படுவீர்கள். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். பழைய பாக்கி வசூலாகும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். விளையாட்டு துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். தாய் வழி உறவில் கவனம் தேவை. பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 4,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,W

**மீனம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும் வாரம். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புது முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத்தொழில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை கூடும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். வாயில் தேடி வரன் வரும். பணமும், பாராட்டும் சேரும். மங்கல செய்தியால் மனம் மகிழும். விலகி சென்றவர் விரும்பி வருவர். கனவுகள் பலிதமாகும். மருத்துவச் செலவு குறையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். மறைமுக எதிர்ப்புகள் உருவாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்களால் பலன் தரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொட்டது துலங்கும் காலம். தாராளமான தனவரவு உண்டு. குழப்பங்கள் நீங்கும். வழக்குகள் சாதகமாகும். வீண் வம்புகள் அகலும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். தாய் வழி உறவில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். நூதன பொருள் சேர்க்கையுண்டு. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லைகள் அகலும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. திருமண முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,F

## திருமணப் புகைப்படம் எடுக்கும்போது ஆற்றில் தவறி விழுந்து புதுமாப்பிள்ளை பலி. கேரளாவில் சம்பவம்



கேரள மாநிலம் கோழிக்கோடு அருகே குற்றியாடி, அருகே உள்ள கடியங்காட்டைச் சேர்ந்தவர் ரெஜின்லாலுக்கும் (28), அதே பகுதியை சேர்ந்த கணிகா என்பவருக்கும் கடந்த மார்ச் 14 அன்று திருமணம் நடைபெற்றது. புதுமண தம்பதிகள் இருவரும் திருமணத்துக்குப் பிந்தைய போட்டோ ஷூட் எடுப்பதற்காக ஜானகிகாடு அருகே குற்றியாடி ஆற்றில் செவ்வாயன்று காலை 7 மணி முதல் போட்டோஷூட்டில் தம்பதியர் தீவிரமாக ஈடுபட்டு இருந்த போது ஒரு பாறை மீது போட்டோீட் எடுத்துக் கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக இருவரும் ஆற்றில் தவறி விழுந்தனர்.


இருவருக்குமே நீச்சல் தெரியாத காரணத்தால் தண்ணீரில் விழுந்து தத்தளித்ததை பார்த்து அக்கம் பக்கத்தினர் அங்கு ஓடி வந்து ஆற்றில் குதித்து ரெஜின்லால், கணிகா இருவரையும் மீட்டு அருகில் உள்ள மலபார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலன் இன்றி ரெஜின்லால் பரிதாபமாக உயிரிழந்தார். அவரது மனைவி கணிகா உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் குறித்து அப்பகுதி மக்கள் கூறும் போது, குற்றியாடி ஆற்றில், மணமக்கள் இருவரும் நின்ற பகுதி ஆபத்தான இடமாகும். இதற்கு முன்பும் இந்த பகுதியில் பலர் ஆற்றில் விழுந்து இறந்துள்ளனர், என்றனர்.

மேலும் இச்சம்பவம் குறித்து பெருவண்ணாமுழி காவல்துறையினர் கூறுகையில், "குற்றியாடி ஆற்று நீருக்கு அடியில் பல ஆழமான குழிகள் உள்ளன. இதை அறியாமல் கடந்த காலங்களில் பல சுற்றுலா பயணிகளுக்கு அவை மரண பொறியாக மாறியுள்ளன. நீச்சல் தெரியாத ரெஜில், அந்த குழி ஒன்றில் சிக்கி உயிரிழந்ததாக தெரிய வந்துள்ளது. இந்த வழக்கில் மேலும் விசாரணை நடத்தப்படும்" என தெரிவித்தனர்.

திருமணமாகி ஒரு மாதம் கூட நிறைவடையாத நிலையில், போட்டோஷூட் எடுக்க வந்து மாப்பிள்ளை உயிர் பறிபோன சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மரண அறிவித்தல்

**பிறப்பு:**
**27 - 05 - 1938**



**இறப்பு:**
**02 - 04 - 2022**

# திரு. சவரிமுத்து சேர்மானப்பர்

சுருக்கெழுத்தாளர் - Julius & Creasy, Sri Lanka, மொழி பெயர்ப்பாளர், சமூக சேவையாளர் - கனடா
(ஊர்காவற்துறை, Sri Lanka)

**யாழ். ஊர்காவற்றுறை துறைமுக வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு இரத்தினம் வீதி, கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து சேர்மானப்பர் அவர்கள் 02-04-2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவெல் சவரிமுத்து திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோணி பர்னாந்து, ரீற்றம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

இமெல்டா அவர்களின் அன்புக் கணவரும்,

கெனிஸ்டா, கெசில்டா, கெமிலியா, கிளிண்டஸ் மற்றும் காலஞ்சென்ற கெமிலஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், வட்சன், குலம், நிர்மலன், ரமோனா ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலஞ்சென்றவர்களான சேவியர், மெட்லின் மற்றும் இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அகுஸ்தீன், நேசம்மா மற்றும் மரியஸ்டெலா ஆகியோரின் மைத்துனரும்,

ஆன், ரெஷ்மொன், ஸ்ரெபனி, ரோஹித், அபிஷேக், விதுஷன், சாத்விகன், கஷோலா (B.sc.N), லவின்டா (Bachelor of Science) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 10-04-2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி தொடக்கம் 9:00 மணி வரை Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1) இல் பார்வைக்காக வைக்கப்பட்டும். மறுநாள் 11-04-2022 திங்கட்கிழமை Elgin Mills Cemetery, Cremation and Funeral Centres (1591 Elgin Mills Rd East, Richmond Hill, ON L4S 1M9) இல் அன்னாரின் பூதவுடல் அடக்கம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
வீட்டு முகவரி:
110 Mornelle Court
Scarborough, Canada

**தொடர்புகளுக்கு:**
கிளிண்டஸ் - மகன்: (416) 669-5475
கெனிஸ்டா வட்சன் - மகள்: 31645141989
கெசில்டா குலசேகரம் - மகள்: 447527152541
கெமிலியா நிர்மலன் - மகள்: 491792153385

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளுர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்



LOOKING FOR YOUR Dream House?
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
Call SEYON CHANDRAKUMAR
RE/MAX ROYAL PROPERTIES
BUYING SELLING INVESTING



உதயம் 1357 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 8, 2022


# "மஞ்சுளா பாஷன்" புடவை மாளிகை மணமகன் லஜீவன் – மணமகள் சகானாவை கரம்பற்றிய திருமணம்



கடந்த சனிக்கிழமை 1ம் திகதி மிசிசாகா மாநகரில் இடம்பெற்ற லஜீவன்- சகானா தம்பதியின் திருமண வைபவத்தில் எடுக்கப்பெற்ற படம் இங்கு காணப்படுகின்றது.

புகழ்பெற்ற "மஞ்சுளா பாஷன்" புடவை மாளிகை அதிபர் - அமரர் மகேந்திரன்- மற்றும் மஞ்சுளா தம்பதியின் புதல்வர் லஜீவன்- மணமகள் சகானா ஆகி-யோரின் இந்த அழகிய திருமணத்தை நடத்தி வைத்தவர் சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஸ்ணராஜக் குருக்கள் அவர்கள் ஆவார்.

# Ribbon Cutting Ceremony of U. S. N. Traders, at GTA Plaza in Scarborough took place last Friday



கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஸ்காபுறோவில் உள்ள **GTA Plaza** வர்த்தகத் தொகுதியில் திறந்து வைக்கப்பெற்ற **U. S. N Traders**, நிறுவனத்தின் நாடா வெட்டும் வைபவத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக **Ontario's Minister Hon. Raymond Cho> MPP for Scarborough Agincourt**, **Mr Aris Babikian** மற்றும் **City Councilor for Scarborough Agincourt Mr. Nick Mantas** ஆகியோர் அழைக்கப்பெற்றிருந்தனர்.

**U. S. N Traders**, நிறுவனத்தின் உரிமையாளர் திரு உதயகுமார் அனைவரையும் வரவேற்று உபசரித்தார். அத்துடன் சிறப்பு விருந்ததினர்களுக்கு மலர் மாலை அணிவித்து கௌரவித்தார்.

நண்பர்கள் உறவினர்கள் மற்றும் வர்த்தக அன்பர்கள் என பலர் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். *(தொடர்ச்சி உள்ளே 17ம் பக்கத்தில்)*